Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

முரசு - 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆவணி 08 சனிக்கிழமை (24.08.2013) பக்கங்கள் 20 ஓசை - 328




# பொதுமக்களின் வாழ்விடங்கள் படையினரால் மீண்டும் கையளிப்பு



## படிப்படியான படைவிலகல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களில் இதுவரை பாதுகாப்புப்படையினரால் பயன்படுத்தப்பட்டு வந்த பொதுமக்களின் வாழ்விடங்கள் மற்றும் காணிகள் என்பன மீண்டும் அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றன.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தொடர் நடவடிக்கையின் ஒருகட்டமாக நேற்று இவை மீளளிப்புச் செய்யப்பட்டன. இவ்வைபவத்தில் அமைச்சர், பொதுமக்கள் மத்தியில் உரை நிகழ்த்தினார். சர்வதேச நாடுகளோ ஐ.நா.வோ தமிழ் மக்களின் பிரச்சினைக்கு உரிய தீர்வினை பெற்றுத்தரப் போவதில்லையென்றும் எமது பிரச்சினைக்கு நாமே தீர்வு காணமுடியுமென்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது உரையில் தெரிவித்தார்.

சுன்னாகத்தில் நேற்றையதினம் இடம்பெற்ற உடுவில், தெல்லிப்பழை, சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் படைதரப்பினர் வசமிருந்து பொதுமக்களின் வீடுகள்

19 ஆம் பக்கம் பார்க்க

## விதிகளை மீறிய பிரசாரம் விக்னேஸ்வரன் மீது குற்றச்சாட்டு

வடமாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளராக தமிழரசுக் கட்சியினால் முன்னிறுத்தப்பட்ட முன்னாள் நீதியரசர் சீ.வி.விக்னேஸ்வரன் தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறியுள்ளதாக ஐ.ம.சு.முன்னணி முதன்மை வேட்பாளர் சி.தவராசா தேர்தல் ஆணையாளரின் கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ளார்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அரச சொத்துக்களை எவ்வகையிலும் தமது தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த முடியாது என்ற சட்டவிதிகளை மீறி தமது பிரசார கூட்டத்தினை அரச சொத்தான சாவகச்சேரி பிரதேசசபை மண்டபத்தில் அவர் கூட்டியிருந்ததாக புகைப்பட ஆதாரத்துடன் செய்திகள் வெளிவந்துள்ளன. சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் துரைராஜா மற்றும் பிரதேச

19 ஆம் பக்கம் பார்க்க

## சுற்றுலாத்துறைக்கு ஊக்குவிப்பு வடக்கில் பயிற்சிப் பாடசாலை

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் ஹோட்டல் கற்கைநெறிப் பாடசாலை ஒன்றை அமைக்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடாக வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியம் நடவடிக்கை எடுத்திருப்பதாக வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியத்தின் பேச்சாளரும் முன்னாள் இலங்கை உல்லாசப் பயணத்துறைப் பணிப்பாளருமாகிய கலைச்செல்வம் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். கிறீன்கிறாஸ் விடுதியில் நடைபெற்ற ஊடக

19 ஆம் பக்கம் பார்க்க

## அபிவிருத்தி நிதி பயன்படாதது ஏன்?

### 3 கோடி ரூபா திரும்பிச் செல்லும் அபாயம்

(திருநெல்வேலி)

நல்லூர் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கான புதிய கட்டடம் ஒன்று அமைப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்த 300 இலட்சம் ரூபா பணம் திருப்பிச் செல்வதற்கான அறிகுறிகள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கட்டடம் அமைவதற்கான பொருத்தமான காணியொன்றை நல்லூர் பிரதேசத்திற்குட்பட்ட எல்லைக்குள் அன்பளிப்பாகக் கொடுப்பதற்கு எவரும் முன்வராமையே இதற்கான காரணம் எனக் கூறப்படுகின்றது.

19 ஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பு மீது அதிருப்தி பிரதேச சபை உறுப்பினர்கள்

### அரசு பக்கம் தாவல்



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த அரசியல்வாதிகளின் தடுமாற்றமானதும் நேர்மைத் தன்மை அற்றதுமான போக்குகளால் கடும் அதிருப்தி அடைந்துள்ள அக்கட்சியின் பிரதேச சபை அங்கத்தவர்கள் பலர அரசுபக்கம் தாவும் முயற்சியில் இறங்கியுள்ளனர். ஏற்கனவே வடமராட்சியில் கரவெட்டி மற்றும் பருத்தித்துறைப் பிரதேச சபை ஆகியவற்றின் உபதலைவர்கள் கூட்டமைப்பை விட்டு வெளியேறியுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச்

19 ஆம் பக்கம்

06



சவால்...

13



எது உரிமை

18



நாச வேலையா?

## யாழில் சிசுமரணம் திடீர் அதிகரிப்பு ஏன்?



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சிசுமரண வீதம் அண்மைய மாதங்களில் அதிகரித்தமைக்கான காரணம் என்ன என்பது பற்றி சுகாதாரப் பிரதி அமைச்சர் லலித் திஸாநாயக்க தலைமையில் நேற்று விசேட ஆய்வு ஒன்று நடாத்தப்பட்டது.

நேற்றுக்காலை 10.00 மணிக்கு யாழ். போதனா மருத்துவமனைக்கு விஜயம் செய்த பிரதி அமைச்சர் மருத்துவ அதிகாரிகளுடன் விசேட மாநாடு ஒன்றை நடத்தினார். மேலும் வைத்தியசாலை பிரதிப்பணிப்பாளருடன் கலந்துரையாடி வைத்திய

19 ஆம் பக்கம் பார்க்க

## புதிய பட்ஜெட் தயாராகிறது

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது அமைச்சு 2014 வரவு - செலவு திட்டத்திற்கான ஆரம்ப வேலைகளை தொடங்கியுள்ளதாக அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் குறிப்பிடு

19 ஆம் பக்கம் பார்க்க


## சட்டம், ஒழுங்கு அமுல்செய்ய புதிய அமைச்சு

(கொழும்பு)

நாடு முழுவதும் சட்டம் மற்றும் ஒழுங்குகளைச் சீரான முறையில் அமுல்செய்வதற்கு ஏதுவாகப் புதிய அமைச்சு ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு என்ற பெயரில் இந்தப் புதிய அமைச்சு ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த அமைச்சு ஜனாதிபதியின் கீழ் கொண்டுவரப்பட்

19 ஆம் பக்கம் பார்க்க

# அரசுடனான நல்லுறவின் மூலமே உரிமைகளை வென்றெடுக்க முடியும்



மத்திய அரசுடன் நல்லுறவுகளைக் கொண்டிருப்பவர்களால் மட்டுமே தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமை உள்ளிட்ட உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்றால், அந்தத் தகுதி எமக்கு மட்டுமேயுள்ளது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குருநகர் பகுதி மக்கள் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் நீண்டகாலமாக எதைச் சொல்லி வந்தோமோ அதுதான் கடந்தகாலங்களில் நடந்தேறியுள்ளது. அதேபோன்றுதான் எதைச் சொல்கின்றோமோ அதுதான் எதிர்காலத்தில் நடக்கவுள்ளது.

1987 ஆம் ஆண்டு மாகாண சபை எமது மக்களுக்காக கிடைக்கப் பெற்றபோதிலும், அது சரியான முறையில் பயன்படுத்தாத காரணத்தினாலேயே எமது மக்கள் முள்ளிவாய்க்கால் வரை செல்ல வேண்டிய அவலம் நிகழ்ந்தது.

அந்தவகையில் தோற்றுப் போனதும், பலவீனப்பட்டதும் தமிழ் சமூகமல்ல, மாறாகத் தவறான வழிநடத்தல்களே தோற்றுப் போனவையாகும்.

இந்நிலையில், மத்திய அரசுடன் நல்லுறவுகளைக் கொண்டிருப்பவர்களால் மட்டுமே தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமை உள்ளிட்ட உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

அந்தவகையில்தான் பல்வேறு அபிவிருத்திச் செயற்திட்டங்களை எமது பகுதிகளில் முன்னெடுத்து வந்ததுடன், தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்றும் சுட்டிக்காட்டிய அமைச்சர், மக்களுடன் நின்று மக்கள் பணி செய்பவர்களுக்கு மக்கள் தொடர்ந்தும் தமது ஆதரவை வழங்கும் பட்சத்தில் அவர்களது வாழ்வு மென்மேலும் மேம்பாடு அடையுமென்றும் தெரிவித்தார்.

இதனிடையே மக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக குருநகர் ஆற்றுவாய்க்காலை தொழில் நடவடிக்கைக்கு ஏற்ற வகையில் ஆழப்படுத்துவது, பண்ணைப் பாலத்தின் கீழான பழைய பாலங்களுக்கிடையில் இருக்கும் கற்களை அகற்றிப் புனரமைப்பது மற்றும் குருநகர் சந்தைப் பகுதியில் மின்விளக்குகளைப் பொருத்துவது, கொட்டடி மீனாட்சி கிராமத்தில் நூலகம் ஒன்றை அமைப்பது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

கோரிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்திய அமைச்சருடன் குறித்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் வகையில் திட்ட அறிக்கையினைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்ட அமைச்சர், குறித்த விடயங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம், குருநகர் கிழக்கு கிராமிய கடற்றொழில் அமைப்பு, குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழகம், கொட்டடி மீனாட்சி சனசமூக நிலையம், மடத்தடி திருவள்ளுவர் சனசமூக நிலையம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), வடமாகாண சபைத் தேர்தலில் ஈ.பி.டி.பி.யின் சார்பில் ஐ.ம.சு.முன்னணியில் போட்டியிடும் வேட்பாளரான அந்தோனிப்பிள்ளை அகஸ்ரின், ஈ.பி.டி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஒருங்கிணைப்பாளருமான கே.வி குகேந்திரன் (ஜெகன்), ஈ.பி.டி.பி.யின் யாழ்.நகர இணைப்பாளர் துரைராஜா இளங்கோ (றீகன்) ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# மின் தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று காலை 8.30 தொடக்கம் மாலை 5.30 மணி வரை இளவாலை, மாரீசன்கூடல், விளான், அளவெட்டி ஆகிய பிரதேசங்களிலும்,

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 தொடக்கம் மாலை 5.30 மணி வரை ஸ்ரான்லி வீதிப் பிரதேசத்திலும்,

பிற்பகல் 1.30 தொடக்கம் மாலை 5.30 வரை உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப்பகுதி, யாழ் மாநகரசபைப்பகுதி, குருநகர், பாசையூர், காக்கைதீவு, மீனாட்சிபுரம், கொட்டடி, நாவாந்துறை, யாழ் பிரதான வீதி, பண்ணைப் பகுதி, புன்னாலைக்கட்டுவன், அச்செழு, ஈவினை ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்பட்டிருக்குமென மின்சார சபையின் யாழ். பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# ஸ்கந்தபுரம் பாலத்தடியில் டிப்பர் வாகனம் விபத்து



கிளிநொச்சியிலிருந்து அக்கராயனுக்கு மணல் ஏற்றிக் கொண்டு சென்ற டிப்பர் ரக வாகனம் ஒன்று ஸ்கந்தபுரம் பாலத்தடியில விபத்துக்குள்ளாகியுள்ளது.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது. இவ்விபத்தில் சாரதி மற்றும் நடத்துநருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளது. கட ந்த 30 வருடங்களுக்கு மேலாக கிளிநொச்சியிலிருந்து ஸ்கந்தபுரம் செல்லும் இந்தக் குறுக்குப்பாதை திருத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (18)

# வடக்கில் 17,575 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

நாடாளாவிய ரீதியில் நடைபெறும் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை நாளை ஆரம்பமாகின்றது. இதில் வடமாகாணத்தில் சேர்ந்த 12 வலயங்களைச் சேர்ந்த 17 ஆயிரத்து 575 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

இம்மாணவர்களுக்கென வடமாகாண கல்வி அமைச்சு மாகாண கல்வித் திணைக்களம், வலயக் கல்வித் திணைக்களங்கள் பாடசாலை மட்டத்திலும் விசேட செயலமர்வுகள், பயிற்சி வகுப்புக்கள் மற்றும் மாதிரி பரீட்சை விசேட செயலமர்வுகள் மூலம் சிறந்த முறையில் தயார்ப்படுத்தியுள்ளது.

இப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தன்[illegible]பிக்கை, நிதானத்துடன் கூடிய துணிவுடனும் இப் பரீட்சைக்குத் தோற்றி நல்ல பெறுபேறுகள் பெற வேண்டும் என்று வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். அத்துடன் வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் சீ.சத்தியசீலன், மாகாணக் கல்விப் ப[illegible]ப்பாளர் வி.செல்வராசா ஆகியோரும் இம்மாணவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

# வீதி நிர்மானம் தொடர்பான விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா மற்றும் மாநகர சபை உத்தியோகத்தர்களும் இணைந்து செட்டியார் தோட்டப் பகுதி மக்களுடன் ஒரு விசேட கலந்துரையாடல் ஒன்றினை நேற்று முன்தினம் நடத்தினர்.

இக்கலந்துரையாடலில் முதல்வர் கருத்து தெரிவிக்கையில் இப்பகுதி வீதி புனரமைப்புக் காக புறநெகும திட்டத்தின் கீழ் 11.2 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் இத்திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு இப்பகுதி வாழ் மக்களாகிய நீங்கள் இவ் வீதி புனரமைப்பிற்கு உங்களால் முடிந்த ஒத்துழைப்புக்களையும், விட்டுக்கொடுப்புக்களையும் வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

## உதைபந்தாட்டப் போட்டி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை [illegible]தம்பாட்டி காந்திஜி சனசமூக நிலையத்தில் 61 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி இன்றும், நாளையும், நாளை மறுதினம் 26 ஆம் திகதி திங்கட்கிழமையும் இட்பெறவுள்ளது.

காந்திஜி விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்று காலை 9.00 மணிக்கு ஆரம் பமாகும் இப்போட்டியில் 30 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன. (21)


## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 984

திகதி 22.08.2013

வெற்றி எண்கள்: 14 36 42 50 — ஆங்கில எழுத்து: C

ஜக்பொட் பரிசு ரூ. 10,609,660/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 10,609,660/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 9 | 50,000/= | ரூ. 4,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 261 | 1,000/= | ரூ. 2,61,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 486 | 1,000/= | ரூ. 4,86,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11809 | 60/= | ரூ. 7,08,540/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6185 | 40/= | ரூ. 2,47,400/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 154853 | 20/= | ரூ. 30,97,060/= |
| ஆங்கில எழுத்து | 22478 | 20/= | ரூ. 4,49,560/= |
| | | மொத்தம் ரூ. | 66,99,560/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| புத்தளம் | 704733478-8-18 |
| பதுளை | 704727442-6-16 |
| காலி | 704724405-5-35 |
| கம்பஹா | 704722422-4-14 |
| திருக்கோணாமலை | 704727837-9-19 |
| கம்பஹா | 704736124-8-18 |
| வவுனியா | 704735862-6-26 |
| அநுராதபுரம் | 704723405-0-10 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 70,99,560/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 10,912,620/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2013.08.26 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02. தொலைபேசி: 2 333546/7

(C/3025)



## சிறுவிளம்பரம்

### காணி விற்பனைக்கு

சங்கானை Church Lane ஆரம்பத்தில் வீட்டுடன் கூடிய ஆறரைப் பரப்புக் காணி 85 இலட்சத்திற்கு விற்பனைக்குள்ளது. மேலதிக விபரங்களுக்கு அழைக்க வேண்டிய தொலை பேசி இலக்கம் : 0775040450 (R/311)

# வடக்கு கடற்றொழிலாளர்களுக்கு
# 2 ஆம் கட்ட கடன் வழங்கல் ஆரம்பம்

## நீரியல் வளத்திணைக்களப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி தகவல்

(யாழ்ப்பாணம்)

கடற்றொழிலாளர்களுக்கான தியவரதிரிய இரண்டாம் கட்டக் கடன் வழங்கும் திட்டம் கடந்த திங்கட்கிழமை கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் ராஜித சேனாரத்னவின் பணிப்புரைக்கமைய ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல்வள திணைக்களப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக அனைத்து மாவட்டங்களிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஐம்பது கடற்றொழிலாளர்களுக்கு இந்தக் கடன் வழங்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டதுடன் யாழ்.மாவட்டத்தில் மூன்று கடற்றொழிலாளர்கள் இந்தத் திட்டத்தில் கடன்களைப் பெற்றுக் கொள்வதுடன் தொடர்ந்து ஏனைய கடற்றொழிலாளர்களுக்கும் இது விரிவுபடுத்தப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொழும்பு இலங்கை வங்கி தலைமைக்காரியாலயத்தில் நடைபெற்ற இந்த தியவரதிரிய-02 ஆம் கடன் வழங்கும் நிகழ்வில் அமைச்சர் ராஜித சேனரத்ன, பிரதியமைச்சர் சரத்குமார குணரத்தின மற்றும் கடற்றொழில் திணைக்களப் பணிப்பாளர் மாவட்ட கடற்றொழில் நீரியல்வள உதவிப் பணிப்பாளர், இலங்கை வங்கியின் தலைவர் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர். இந்தக் கடன் வழங்கும் செயற்திட்டம் அந்தந்த மாவட்டத்தில் உள்ள ஏனைய கடற்றொழிலாளர்களுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் இருபது இலட்சம் ரூபா வரை வழங்கப்படவுள்ள இந்தக் கடன் திட்டத்தின் மூலமாக கடன் பெறும் கடற்றொழிலாளர்கள் தமது கடற்றொழில் நடவடிக்கையை அபிவிருத்தி செய்து கொள்ளவும் தமக்கான வீடு ஒன்றை நிர்மாணித்துக் கொள்ள முடியும் என்பதுடன் சேதமடைந்த வீடுகளையும் திருத்தியமைக்க முடியும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (பா)

## நல்லைக் கந்தனுக்கு இன்று பதின்மூன்றாம் திருவிழா



### முத்திதரும் முருகா!

**தத்துவத்தைக் காட்டி தரிசிக்க வைத்தெமக்கு முத்திதரும் நல்லூர் முருகனே-இத்துணையுஞ் சச்சரவுக் கஞ்சிச் சலனப்பட் டோமினிமேல் அச்சமின்றி வாழ அருள்.**

நல்லூர் கந்தன் பாமாலை

## கரவெட்டியில் நடமாடும் சேவை


(அச்சுவேலி)

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் பொது மக்களுக்கான நடமாடும் சேவையினை "கபே" அமைப்பினர் இன்று கரவெட்டி பிரதேச செயலகத்தில் நடாத்தவுள்ளனர்.

இலவசமாக மேற்கொள்ளப்படும் இச்சேவையினை உரியவர்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்காதோர் அல்லது தொலைந்த மற்றும் பழுதடைந்தவற்றுக்கான விண்ணப்பங்களும் இச்சேவை மூலம் மேற்கொள்ளப்படவுள்ளதுடன் பிறப்பத்தாட்சிப் பத்திரம் மற்றும் திருமணப் பதிவுகள் என்பனவும் மேற்கொள்ளப்படவுள்ளன. (85)

## தேர்த்திருவிழாவில் சிக்கிய திருடர்கள்



(அச்சுவேலி)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தேர்த்திருவிழாவன்று திருட்டுச் சம்பவத்தில் ஈடுபடமுயன்ற திருடர்களை கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சிவில் பாதுகாப்புப் பிரிவினர் கையும் மெய்யுமாக பிடித்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

தாயும் அவரது பதின்மூன்று வயது மதிக்கத்தக்க மகளும் மற்றும் 65 வயது மதிக்கத்தக்க முதியவர் ஒருவருமே இவ்வாறு அகப்பட்டுக் கொண்டனர்.

இவர்கள் கோவிலுக்கு அருகில் உள்ள நடமாடும் நீதிமன்றத்துக்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு மேலதிக விசாரணைகள் இடம் பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே ஆலய உற்சவ காலங்களில் இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுவதால் பொதுமக்கள் எச்சரிக்கையாக நடந்து கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (85)

## நல்லூர் ஆலய சூழலில் இன்று...

நல்லூர் கந்தசுவாமி ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார திணைக்களத்தால் தினமும் மாலை 3 மணியளவில் ஆன்மிக நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் 13 ஆம் திருவிழாவான இன்று சனிக்கிழமை திருவாசகம் தந்த மணிவாசகர் என்னும் விடயம் பற்றி கவிமாமணி அன்னைதாசன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

தொடர்ந்து வட்டுக்கோட்டை துணவி, இளவாலை ஒல்லுடை ஸ்ரீ ஞான வைரவர், இளவாலை சித்திரமேழி ஸ்ரீ ஞான வைரவர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடாத்தும் தெய்வீக இசையரங்கம் தினமும் மாலை 6.45 மணிக்கு நல்லூர் துர்க்காமணிமண்டபத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் இன்று சனிக்கிழமை எஸ்.சூரியகுமாரின் பாட்டுக் கச்சேரி பக்கவாத்திய கலைஞர்கள் சகிதம் இடம்பெறவுள்ளது.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் ப்ரம்மகான சபா நடாத்தும் தெய்வீக இசைச்சங்கம நிகழ்வு தினமும் மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீன புதிய மண்டபத்தில் இடம்பெற்று வருகிறது.

அளவெட்டி சிவஸ்ரீ சோம.குமாரதாஸக்குருக்கள், சிவஸ்ரீ சோ.கிரிதரக் குருக்கள் ஆகியோரின் இசைக்கச்சேரி இடம்பெறும்.

சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகத்தினால் நடராசா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் மாலை 6.30 மணிக்கு தெய்வீகப் பேருரை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதில் இன்று உதிர்தனன் உலகமுய்ய என்னும் விடயம் பற்றி ரி.மயூரகிரிசர்மா சொற்பொழிவாற்றவுள்ளார். (42,06)

## வேலைத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் பின்வரும் வேலைத் திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கரம்பன் கிழக்கு சனசமூக நிலையத்தினூடாக மின்சார விநியோகத்திற்கு 24 ஆயிரத்து 250 ரூபாவும் காந்திஜி சனசமூக நிலையத்திற்கு கணனி கொள்வனவுக்கு 48 ஆயிரத்து 500 ரூபாவும் அனலைதீவு தெற்கு சனசமூக நிலையத்திற்கு தளபாடக் கொள்வனவுக்கு 48 ஆயிரத்து 500 ரூபாவும், திரு இருதயநாதர் சனசமூக நிலையத்திற்கு தளபாடகொள்வனவுக்கு 29 ஆயிரத்து 100 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் பருத்தியடைப்பு சன சமூக நிலையத்திற்கு தளபாடக் கொள்வனவுக்கு 72 ஆயிரத்து 750 ரூபாவும், பாத்திமா சனசமூக நிலையத்தில் சிறுவர பூங்கா அமைக்க 48 ஆயிரத்து 500 ரூபாவும் ஒதுக்கிடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நல்லூர் கந்தன் ஆலயத்தில் மாணவர்களின் பஜனை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு மாநகரசபை பகுதிக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களினால் 25 நாட்களின் போதும் நாள்தோறும் பஜனை வழிபாடுகள் மேற்கொள்வது என மாநகர சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு அமைவாக ஆலய சூழலில் நாள் தோறும் பாடசாலை மாணவர்களால் பஜனை நிகழ்வு நடாத்தப்பட்டு வருகிறது.

இளையோர் மத்தியில் ஆன்மீக நாட்டத்தை ஊக்குவிக்கும் நோக்கில் இச் செயற்பாடு மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அவவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்விற்கான போக்குவரத்து ஒழுங்குகள் யாழ்.மாநகர முதல்வரின் விசேட பணிப்பின் பெயரில் யாழ்.மாநகர சபையினால் மேற்கொள்ளப்படுகிறது.



நல்லூர் கந்தன் ஆலயத்தின் மஞ்சத்திருவிழா கடந்த புதன் கிழமை நடைபெற்ற போது. (சிகரம்)

## நீதிமன்றச் செய்திகள்

முள்ளியவளை பொன்னகர் பகுதியில் தாய், தந்தையரின் சட்ட பாதுகாவலிலிருந்த 14 வயதுச் சிறுமியை கடத்திச் சென்று மறைத்து வைத்திருந்ததாக கடந்த வியாழன் அன்று குற்றஞ்சாட்டப்பட்டு முல்லைத்தீவு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நபா ஒருவருக்கு விசாரணையின் பின்னா ஒருவருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா தீர்ப்பளித்துள்ளார்.

---

மாங்குளம், மல்லாவி, புதுக்குடியிருப்பு பகுதிகளில் பெருமளவு கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டதுடன் கசிப்பு உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படும் உபகரணங்களையும வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட 3 நபர்களுக்கு தலா ஒரு இலட்சம் தண்டப்பணமாக 3 இலட்சம் ரூபா தண்டப்பணத்தை செலுத்துமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார். தண்டப்பணம் செலுத்த தவறின் ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டுள்ளது. பெருமளவு கசிப்பு, மற்றும் உபகரணங்களை அழித்துவிடுமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (170)

மகோற்சவம் சிறப்புற வாழ்த்துவோர்



இன்பத்தில் இனியதும் துன்பத்தின் கொடியது காதலே
- பெய்லி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## 'மிரட்டல் வழி' ஒரு ஏமாற்று!

திரும்பத் திரும்ப ஒரே மாதிரியான விஷயங்களையே தமிழ் மக்களுக்கு வலியுறுத்திச் சொல்லிக் கொண்டிருப்பதானது சலிப்பைத் தருவதாகத்தான் உள்ளது. ஆனாலும், திரும்பத் திரும்ப ஒரேவிதமாகவே ஏமாற்றப்பட்டு, ஒரேவிதமாகவே தப்பைச் செய்துகொண்டிருக்கும் ஆபத்தையும் அவலத்தையும் யோசிக்கையில் இதையெல்லாம் சொல்வதை நிறுத்தத் தோன்றவில்லை.

இப்போது அரசின் மீது அடுக்கிக்கொண்டிருக்கும் அதே குற்றச்சாட்டுகளையே தேர்தல் முடிந்தபிறகும் சுருதிமாறாமல் அடுக்கிக் கொண்டிருப்பதற்கு அவர்களை எதற்காக வெல்ல வைக்க வேண்டும்? இதற்கு முந்திய தேர்தல்களில் வந்து அடுக்கிய குற்றச்சாட்டுகளே இன்றும் மாறாமல் இருக்கிறது என்றால், மக்கள் வாக்குகள் அளித்து வெற்றியைக் கொடுத்தாலும் இவர்களால் எதையும் நகர்த்த முடியவில்லை என்றுதானே அர்த்தம்?

மக்கள் அனுபவிக்கும் அவலங்களுக்கெல்லாம் பதிலாக அரசின் மீதான குற்றப்பத்திரங்களையே சொல்லிக் கொண்டிருந்தால் இங்கு எதுதான் மாறும்? அரசின் குறைகளை நாடாளுமன்றத்திலோ அனைத்துக் கட்சித் தெரிவுக்குழுவிலோ போய்ப் பேசாமல், தேர்தலுக்குத் தேர்தல் மக்களிடம் வந்து முறையிட்டுக் கொண்டிருப்பது வாக்குகளைக் கேட்கும் உத்தியே தவிர, வேறென்ன இங்கு நடக்கும்?

சர்வதேசத்தை வரவைக்கிறோம் வாக்குகளை அளியுங்கள் என்றும் தொடர்ந்து நாலு வருடங்களாய்க் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் என்ன மாதிரியான ஒற்றுமையை மேலும் எவ்வளவு காலத்திற்குக் காட்ட வேண்டும்? சர்வதேசம் வந்து காதில் முறுக்கி, நீ அந்தப் பக்கமும் நீ இந்தப் பக்கமும் தனித்தனியாக இருங்கள் என்று சொல்லிவிட்டுப் போக இது என்ன பள்ளிக்கூட மாணவர்கள் பிரச்சினையா?

எங்களுக்குப் பிரச்சினைகள் உண்டு. அந்த நெருக்குதல்களிலிருந்து மீள வேண்டிய தேவை உண்டு. இதையெல்லாம் யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால் மீண்டும் மீண்டும் மிரட்டல் வழியையே கிட்டவோ தூரவோ இலக்காகக் காட்டி அரசியல் செய்துகொண்டிருப்பவர்கள் மக்களை முழு முட்டாள்களாயடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது தவிர வேறொன்றுமில்லை.

மக்களுக்கான வாழ்வைத் தேடித்தர வேறெந்த வழியையும் காண முடியாத இவர்கள் வன்முறையையும், பகைவெறுப்பை எரியவிடுவதையும் தவிர மற்றதெல்லாம் பணிந்து போதலே என்று சொல்லி மக்களை ஏமாற்றுகிறார்கள், உசார் மடையர்களாக்குகிறார்கள்.

உலகில் உண்மைகளும் நம்பிக்கைகளும் பலவாறாக உள்ளன. ஒரு உண்மைக்குப் பின்னாலுள்ளவர்கள் இன்னொரு உண்மையை நம்புகிறவர்களோடு ஒத்துப்போக முடிந்தால் முரண்பாடு ஏற்படாது. ஆனால் யதார்த்தத்தில், தங்களது நம்பிக்கைதான் முற்றுமுழுதான உண்மை என்று நம்புவதே ஒவ்வொருவரினதும் இயல்பாயிருக்கிறது.

தாம் நம்பாத மற்றையதைச் சகித்துக்கொள்ள முடியாமல் போவதால் மோதல் உருவாகிறது. அவர்வர் உண்மையை நிலைநாட்ட மற்றவர் குறைகளையே தூக்கிப்பிடித்து நிற்பதும் வன்முறையும் சரி என்றாகிவிடுகிறது. முற்றுண்மை இதுதான் என்ற நம்பிக்கையே வேறுபாடுகளைத் தாங்க முடியாமல் செய்துவிடுகிறது.

ஒவ்வொருவருக்குமோ அல்லது ஒவ்வொரு குழுவுக்குமோ தனித்தனி உண்மை இருக்கும்போது, அந்த இருதரப்பும் வாழ்வதற்குரிய நியாயம் இணக்க மறுப்பால் எப்படி உருவாகும்? ஒரு உண்மையை அழித்து மறு தரப்பை நிலைநாட்டுதல் எப்படி நாகரிகமடைந்த மனிதகுலத்தின் ஏற்பாடாக இருக்க முடியும்?

வன்முறை வாய்ச்சவடால்களின் பலவீனத்தையும், மனிதவிரோத பிற்போக்குத் தன்மையையும் ஒவ்வொருவரும் மனப்பூர்வமாக உணர்ந்துகொள்ளாமல் நம் வாழ்வுக்கு வழிகாண முடியாது.

– ஆசிரியர்

# பல்வேறு குற்றச் செயல்கள்; கடந்தவாரம் 144 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

கடந்த வாரம் யாழ். மாவட்டத்தில் உள்ள பொலிஸ் பிரிவுகளில் பல்வேறு குற்றச் செயல்களின் நிமித்தம் 144 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டதாக காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.எல்.பத்திநாயக்க தெரிவித்தார். நேற்றுக்காலை இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். பொலிஸ் பிரிவில் அடித்துக் காயப்படுத்தியமைக்காக 13 பேரும் சந்தேகத்தின் பேரில் 7 பேரும், பிடியாணைப் பிறப்பிக்கப்பட்டோர் 12 பேரும் குடிபோதையில் வாகனம் செலுத்திய 5 பேரும் சட்ட விரோத சாராயம் விற்ற 8 பேரும், களவு தொடர்பில் 16 பேரும், வாகன விபத்தால் 3 பேரும் கொலைத் தொடர்பில் ஒருவரும் மோசடி செய்த ஒருவரும், குடிபோதையில் கலகம் விளைவித்த 4 பேரும், பொது இடங்களில் கலகம் விளைவித்த 3 பேரும் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் சட்டவிரோத மதுவிற்ற 10 பேரும் பிடியாணை பிறப்பிக்கப்பட் 5 பேரும் சந்தேகத்தின் பேரில் 12 பேரும், குடிபோதையில் வாகனம் செலுத்திய 2 பேரும் ஏனைய குற்றங்களுக்காக 44 பேரும் கைது செய்யப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## போலிக்கடவுச்சீட்டுடன் நல்லூரில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

போலிக் கடவுச்சீட்டு வைத்திருந்த நபரொருவரை குற்றத் தடுப்பு புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். நல்லூர் பகுதியில் வைத்து கடந்த புதன்கிழமை குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவினர் குறித்த நபரை கைது செய்துள்ளனர். யாழ். நல்லூர் வடக்குப் பகுதியைச் சேர்ந்த பாலசிங்கம் அனுஜன் என்பவரே போலிக் கடவுச்சீட்டினை தன்வசம வைத்திருந்த வேளையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட குறித்த இளைஞரை குற்றத் தடுப்பு புலனாய்வுப் பிரிவினர் கொழும்பிற்கு அழைத்துச் சென்றுள்ளதாகவும் யாழ். பொலிஸார் மேலும் கூறினர்.

# சம்பூர் அனல் மின்நிலைய கட்டுமானப் பணிகளை ஆரம்பிக்குக

## இந்தியாவிடம் அரசு கோரிக்கை

சம்பூரில் அனல்மின் திட்ட கட்டுமானப் பணிகளை தாமதமின்றி ஆரம்பிக்குமாறு இந்தியாவிடம் இலங்கை வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக மின்சக்தி அமைச்சின் செயலர் எம்.எம்.சி. பெர்னான்டோ, இந்திய அரசாங்கத்துக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அதில், சம்பூரில் 500 மெகாவாட் திறனுள்ள அனல்மின் திட்டத்தை செயற்படுத்துவது தொடர்பாக, நிலவும் கருத்து வேறுபாடுகளைத் தீர்ப்பதற்கு, தேசிய அனல்மின் கழக அதிகாரிகளை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அதேவேளை, இந்த மின் திட்டம் தொடர்பாக நிலவுகின்ற முரண்பாடுகளைத் தீர்ப்பது குறித்தும், இலங்கை மின்சார சபை பொறியியலாளர்களுடன் ஆராயப்படவுள்ளது.

2018 ஆம் ஆண்டில் அனல் மின் நிலையத்தை செயற்பட வைக்கும் நோக்கில், பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக, மின்சாரசபை பொறியியலாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டில் செயற்படத் தொடங்கும் வகையில், சம்பூரில் அனல் மின் நிலையத்தை கூட்டு முயற்சியாக அமைக்க, 2011 ஆம் ஆண்டில் இந்தியாவும் இலங்கையும் இணங்கியிருந்தன.

ஆனால், மின்சார உற்பத்தி, கொள்வனவு, பராமரிப்புத் தொடர்பான பல்வேறு பிரச்சினைகளை இலங்கை எழுப்பி வந்ததால், இந்தத்திட்டம் இதுவரை செயற்படுத்தப்படவில்லை.

இலங்கை தரப்பில் இழுத்தடிக்கப்பட்டு வந்த இந்த உடன்பாட்டுக்கு இலங்கை சட்டமா அதிபர் திணைக்களம் கடந்த மாதமே அனுமதி கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மூன்று நாள் விஜயமாக ஜனாதிபதி பெலாரஸ் பயணம்

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாளை பெலாரஸ் விஜயம் செய்யவுள்ளார்.

இவ் விஜயத்தின் போது ஜனாதிபதி ராஜபகஷ பெலாரஸ் ஜனாதிபதி எலக்சாண்டர் லுகஷென்கோ, பிரதமர் பேராசிரியர் மிகைல் மியாஸ்னி கோவிச், பெலாரஸ் தேசிய பேரவையின் குடியரசு கவுன்சிலின் தலைவர் எனடொலி ருபினோவ் மற்றும் பெலாரஸ் தேசிய பேரவை பிரதிநிதிகள் இல்லத் தலைவர் விலாடிமிர் அண்ட்ரெய்சென்கோ ஆகியோர்களை சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார்.

வர்த்தகத் தூதுக்குழு ஒன்றுடன் பயணமாகும் ஜனாதிபதி அங்கு நடைபெறவுள்ள வர்த்தக மன்றத்தில் கலந்துகொள்ளவுள்ளதுடன், அம் மன்றத்தில் அந்நாட்டு பிரதமர் மியாஸ்னி கோவிச உடன் விசேட உரையொன்றையும் நிகழ்த்தவுள்ளார். என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

அரசியல் ர்தியான சந்திப்புகளுக்கு மேலதிகமாக ஜனாதிபதி ராஜபக்ஷ சுற்றுலா மன்றமொன்றிலும் கலந்துகொள்ளவுள்ளதுடன், தலைநகர் மின்ஸ்கில் உள்ள வாகன உற்பத்தி நிலையமொன்றுக்கும் விஜயம் செய்யவுள்ளார் என்றும் செயலகம் அறிவித்துள்ளது.

## பொதுநலவாய நாடுகளின் மேற்பார்வையாளர்களுக்கான கூட்டத்தொடர் ஆரம்பம்

பொதுநலவாய நாடுகளின் மேற்பார்வையாளர்களுக்கான தெளிவூட்டும் கூட்டத்தொடர் ஆரம்பமாகியுள்ளது.

பல நாடுகளின் மேற்பார்வை பிரதிநிதிகள் நேற்றுமுன் தினமும், நேற்றும் இலங்கை வருகை தந்துள்ளனர்.

அவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள கூட்டத்தொடர் கொழும்பில் இடம்பெறுகிறது. நாடாளுமன்ற உறுப்பினர் சஜின வாஸ் குணவர்தன தலைமையில இடம்பெறும் கூட்டத்தொடரின் போது பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டை நடத்துவதற்காக அரசாங்கத்தை தயார்ப்படுத்தல் மற்றும் அதற்கு பொருத்தமான இடம் தொடர்பில் தெளிவுபடுத்தப்படும்.

முதலாவது கூட்டத்தொடரையடுத்து பொதுநலவாய நாடுகளின் மேற்பார்வையாளர்கள முன் ஆயத்தத்திற்கு தேவையான முக்கிய இடங்களை மேற்பார்வை செய்யவுள்ளனர். பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் பத்தரமுல்ல, வோட்டர்ஸ் ஏட்ச் ஹோட்டல் வளாகம், கட்டுநாயக்க மற்றும் மத்தள விமான நிலையங்கள், ஹிக்கடுவ மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளுக்கும் சென்று மேற்பார்வையாளர்கள் விபரங்களை பெறவுள்ளனர்.

பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்களின் மாநாட்டிற்கு இணைவாக இளைஞர் மாநாடு மற்றும் வர்த்தக மாநாடு ஆகியவையும் இடம்பெறவுள்ளன. அவை கொழும்பிற்கு வெளியில் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கனடாவிலிருந்து ஒரு அன்புக் குரல்

**எனது** அன்புக்குரிய தமிழ் மக்களுக்கு மீண்டும் ஒரு குரலாக, உங்களுடன் ஒருவனாக இருந்து நான் கடந்த 60 ஆண்டுகளாக கற்றுக்கொண்ட பாடங்களின் அனுபவங்களை உங்கள் முன் இக்கட்டுரை வாயிலாக சமர்ப்பிக்கின்றேன்.

நாங்கள் பல சந்தர்ப்பங்களில் ஏமாற்றப்பட்டிருக்கிறோம். சிங்கள - தமிழ் முற்போக்கு சக்திகளால் நாங்கள் ஏமாற்றப்படவில்லை. இந்த முற்போக்கு சக்திகள் கடந்த 60 வருடங்களுக்கும் மேலாக தமிழ் மக்கள் மத்தியிலே இருந்து வந்த சாதி மற்றும் வர்க்க அடக்குமுறைகள் போன்ற ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராக வெளியில் அர்ப்பணிப்புடன் போராடியது மட்டுமின்றி, பாராளுமன்றத்திலும் தொடர்ந்து குரல் கொடுத்து வந்தவர்கள் ஆகும்.

ஆனால் இன்று "ஆடு நனையுதென்று ஓநாய் அழுத" கதையாக இனவாத முகமூடியைப் போட்டுக்கொண்டு, தமிழ் மக்களுக்குடைய வாக்குகள் தங்களுக்குத்தான் என்ற மமதையில் உங்கள் முன் வாக்கு வேட்டைக்காக வந்திருக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பை பற்றி நீங்கள் சரியாக விளங்கிக்கொண்டு, எதிர்வரும் வட மாகாணசபைத் தேர்தலில் அவர்களைத் தூக்கி எறிவது உங்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

ஏனெனில் இதற்கு முன்னரும் இவர்கள் இது போன்ற பல தேர்தல்களில் அந்தந்த நேரங்களில் மாத்திரம் மக்களிடம் "ஆணை" கேட்டு வருவார்கள். மக்களின் ஆணை கிடைத்தவுடன் தமக்கு வாக்களித்த மக்களுக்கு "டா... டா" காட்டிவிட்டு, "ஆனை"க்குப் (ஐக்கிய தேசியக் கட்சி) பின்னால் சென்று விடுவார்கள். இது அனுபவரீதியாக நாங்கள் கடந்த 60 வருடங்களாக கண்ட உண்மை.

தற்பொழுதுகூட, இந்த அரசாங்கம் செய்கிற அபிவிருத்தித் திட்டங்களுக்கு எந்த ஒரு ஆதரவையும் கொடுக்காமல், ஐ.தே. கவுடனும், அரசாங்கத்திற்கு எதிரான இதர பிற்போக்குவாத, ஏகாதிபத்திய சக்திகளுடனும் சேர்ந்து கொண்டு, அரசாங்கத்தின் மக்கள் சார்பு நடவடிக்கைகளை எதிர்த்தும், குறை கூறியும் வருவதிலே காலம் கழிக்கின்றனர். இவர்கள் தமிழ் மக்களுக்குச் செய்த துரோகங்களில் ஒன்று, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கிடைத்த வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபையை அன்றைய ஐ.தே.க அரசுடன் சேர்ந்து அதைக் கலைத்து இயங்காமல் செய்ததாகும். பின்னர் அதை இரண்டாகப் பிரிப்பதற்காக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த ஜே.வி.பி போன்ற இனவாதிகளுடனும் இவர்கள் இன்று கூடிக்குலாவி வருகின்றனர். தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் இவர்களுக்கு ஆதர வானவர்களாக இல்லையெனில், ஏன் அதற்கெதிராக இவர்களால் ஒரு எதிர் மனுவை தாக்கல் செய்ய முடியவில்லை? இவர்கள் அதைச் செய்யமாட்டார்கள். ஏனெனில் இவர்கள் விரும்பியதும் அந்த பிரிவினையைத்தான். அப்பொழுதுதான் தொடர்ந்தும் இனவாத அரசியல் பேசி மக்களை ஏமாற்ற முடியும்.

இவர்கள் தமிழ் மக்களுக்குச் செய்த துரோகங்களில் ஒன்று, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கிடைத்த வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபையை அன்றைய ஐ.தே.க அரசுடன் சேர்ந்து அதைக் கலைத்து இயங்காமல் செய்ததாகும். பின்னர் அதை இரண்டாகப் பிரிப்பதற்காக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த இனவாதிகளுடனும் இவர்கள் இன்று கூடிக்குலாவி வருகின்றனர். தமிழ் தேசிய கூட்டமைப்பினர் இவர்களுக்கு ஆதரவானவர்களாக இல்லையெனில், ஏன் அதற்கெதிராக இவர்களால் ஒரு எதிர் மனுவை தாக்கல் செய்ய முடியவில்லை? இவர்கள் அதைச் செய்யமாட்டார்கள். ஏனெனில் இவர்கள் விரும்பியதும் அந்த பிரிவினையைத்தான். அப்பொழுதுதான் தொடர்ந்தும் இனவாத அரசியல் பேசி மக்களை ஏமாற்ற முடியும்.

இந்த இருபக்க இனவாதிகளும் சேர்ந்து கடந்த 27 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு சின்னஞ்சிறிய நாட்டை, குறிப்பாக வடக்கு கிழக்கு தமிழ் மக்களுடைய பிரதேசத்தை ஒரு பயங்கரவாத யுத்தத்தின் மூலம் சுடுகாடாக்கியது மாத்திரமின்றி, அந்தப் பிரதேசங்களில் அமைதியாக வாழ்ந்து கொண்டிருந்த மக்களை நிர்க்கதிக்குள்ளாக்கி நடு வீதிக்கும் கொண்டு வந்ததை மக்களை நேசிக்கும் எவரும் இலேசில் மறந்துவிடமாட்டார்கள். இப்படியாக அழிக்கப்பட்ட ஒரு பிரதேசத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு ஆட்சியில் உள்ள அரசாங்கத்தில் உள்ள தலைவர்களால்தான் முடியும். 2009இல் இந்த கொடிய யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின், கடந்த நான்கு ஆண்டுகளில் எமது பிர தேசம் பல வழிகளில் அபிவிருத்தி அடைந்து வருவதை கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் உட்பட பல மேற்கு நாடுகளிலிருந்து வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்கு சென்று வரும் எம்மவர்கள் கூறக்கேட்கும் போது மகிழ்ச்சியாகவும், பெருமையாகவும் இருக்கின்றது.

ஆனால் கனடாவிலிருந்து எமது தாயகம் வந்து மூன்று நான்கு மாதங்கள் தங்கி, எந்தப் பிரச்சினைகளும் இல்லாமல் சகல போக்குவரத்து வசதிகளுடனும் சுகமாக உலாவி வந்தவர்கள், கனடா வந்தவுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு எதிராகவும், இன்றைய அரசாங்கத்துக்கு எதிராகவும் பிரசாரம் செய்வதை நாங்கள் கவனிக்கக்கூடியதாக உள்ளது.

இப்படியான விசமத்தனமான பிரசாரங்களைச் செய்பவர்கள் யார் என்பதைக் கவனித்தால், இவர்கள்தான் எமது தாயகத்தில் உள்ள மக்கள் சகல வசதிகளுடனும் நிம்மதியாகவும் அமைதியாகவும் வாழ்வதை விரும்பாதவர்கள். இவர்கள் கூறுகின்ற பொய்யான செய்திகளை, புலம்பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் நாடுகளில் இப்படியான பொய்யான செய்திகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கென்றே உருவாக்கப்பட்ட பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள் போன்ற ஊடகங்கள் மூலம் தெரிவிப்பதில் நான் முந்தியோ, நீ முந்தியோ என்ற போட்டி நிலவுவதையும் காணலாம்.

இவர்களுக்கு ஆதரவாக தமிழ்நாட்டில் உள்ள சில வங்குரோத்து அரசியல்வாதிகள் செய்கின்ற விசமத்தனமான பிரசாரங்களும் இவர்களுக்குத் துணை போகின்றன. இந்த இரண்டு பகுதியிலும் உள்ள வங்குரோத்துப் பேர்வழிகளும் ஒன்று சேர்ந்து மக்களை ஏமாற்றிக்கொண்டே இருப்பார்கள்.

எனவே தமிழ் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டிய நேரம் இது. உண்மையில் இதுவரை காலமும் இனத்தையும், மொழி யையும், பிரதேசத்தையும் வைத்து அரசியல். நடாத்தி வந்தவர்களாலே தான் எமது இனம் இன்று இந்த அவல நிலைக்கு வந்துள்ளது என்பதை, எமது மக்கள் இந்த தீர்க்கமான சந்தர்ப்பத்தில் சிந்தித்துப் பார்ப்பது அவசியம்.

தற்பொழுது எங்களுக்குத் தேவை, யுத்தத்தால் அழிந்துபோன எமது பிரதேசம் மீளக் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பதுதான். நாட்டின் ஏனைய மாவட்டங்களில் ஏற்பட்டுள்ளது போன்ற அபிவிருத்திகள் எமது பிரதேசத்திலும் ஏற்பட வேண்டும். இவற்றை எமது பிரதேசத்தில் எமது மக்களுக்காகச் செய்யக்கூடிய அர்ப்பணிப்பு உணர்வும், செயல்திறனும் அரசாங்கத்துக்கே உண்டு. அரசாங்கத்தில் ஒரு பங்காளிக் கட்சியாக இருக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஜனாதி-பதியுடன் இணைந்து எமது பிரதேசத்தின் அபிவிருத்திப் பணிகளை துரிதகதியில் முன்னெடுத்து வருவது, தமிழ் மக்களுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம் என்றுதான் கூற வேண்டும்.

எனவே எமது மக்கள் ஒன்றை நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். யாழ்.மாநகரசபை ஈ.பி.டி.பி கட்சியின் தலைமைத்துவத்துடன் இயங்குவதால்தான், யாழ் நகரில் பல அபிவிருத்தி வேலைகள் அரசாங்கத்தின் உதவியுடன் துரிதகதியிலும் சிறப்பாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றைக் கூட குழப்புவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பகீரதப் பிரயத்தனங்களில் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. அவர்கள் செய்யும் இப்படியான நாசகார, சீர்குலைவு வேலைகளை நியாயப்படுத்த புலம்பெயர் நாடுகளிலும் ஒரு கூட்டம் இருக்கின்றது.

எனவே வட மாகாண மக்கள் தமக்கு ஏற்கெனவே அரசாங்கம் செய்த பல நல்ல அபிவிருத்தி வேலைகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்காக, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடும் ஈ.பி.டி.பி, சிறீலங்கா சுதந்திரக்கட்சி, பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, லங்கா சமசமாஜக் கட்சி வேட்பாளர்களுக்கு தங்கள் வாக்குகளை அளித்து, இத்தேர்தலில் அவர்களைப் பெரும்பான்மை பலத்துடன் வெற்றிபெற வைக்க வேண்டும்.

இதுவே கனடாவில் வாழுகின்ற தமிழ் மக்கள் மத்தியிலுள்ள அனைத்து இடதுசாரி சிந்தனையாளர்களினதும், ஜனநாயக எண்ணம் கொண்டவர்களினதும் ஏகோபித்த கருத்தாகும்.

**எஸ். வீரசிங்கம்**
ஸ்காபரோ - கனடா






# சர்வதேச ரீதியான சவால்களை எதிர்நோக்கி வருகிறது அரசாங்கம்

## பேராசிரியர் ரொகான்குணரட்ன தெரிவிப்பு



விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையில் இலங்கை சர்வதேச ரீதியான சவால்களை எதிர்நோக்கி வருவதாக சர்வதேச பயங்கரவாத ஒழிப்பு குறித்த பேராசிரியர் ரொகான் குணரட்ன தெரிவித்துள்ளார்.

யுத்தம் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் அரசாங்கம் உள்நாட்டு விவகாரங்களில் கூடுதல் கவனம் செலுத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். எனினும் சர்வதேச விவகாரங்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் எழுந்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இராணுவ மற்றும் பாதுகாப்பு நிறுவனங்கள் வலுவாக காணப்பட்ட போதிலும் வெளிவிவகார அமைச்சின் நடவடிக்கைகள் பலம் பொருந்தியதாக இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். ரத்மலானை கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை இல்லாதொழிப்பது தொடர்பில் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பாராட்டுக்குரிய வகையில் அமைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். புலிகள் மீளவும் ஒருங்கிணைய முடியாத வகையில் திட்டங்கள் வகுக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.


எவ்வாறெனினும், சர்வதேச ரீதியாக எழும் சவால்களுக்கு சரியான முறையில் பதிலளிக்கக் கூடிய ஆற்றல் இன்னமும் வளர்த்துக் கொள்ளப்பட வேணடியிருப்பதாகத் தெரிவித்துள்ளார். குறிப்பாக எமது ராஜதந்திரிகளுக்கு விசேடபயிற்சிகள் வழங்கப்பட வேண்டியது அவசியமானது என சுட்டிக்காட்டியுள்ளார்.

விடுதலைப். புலிகளின் சர்வதேச வலையமைப்பு பிழையான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். எதிர்வரும் காலங்களில் இந்தப் பிழையான பிரசாரங்களை தடுத்து நிறுத்தக் கூடிய வகையிலான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என அவர்மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வெலிவேரிய சம்பவத்தால் கலகத்தடுப்பு பாதிக்காது

## இராணுவம் அறிவிப்பு

(கொழும்பு)




வெலிவேரிய சம்பவமானது இராணுவத்தின் கலகத்தடுப்பு நடவடிக்கைகளை பாதிக்காது என இராணுவப்பேச்சாளர் ருவான் வனிகசூரிய தெரிவித்துள்ளார். இலங்கை குற்றவியல் சட்டத்தின் 95ஆம், 96ஆம் சரத்துக்களின் அடிப்படையில் கலகங்களின் போது காவல்துறையினருக்கு இராணுவத்தினர் உதவிகளை வழங்க முடியும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

எனவே தனிப்பட்ட ஓர் சம்பவமானது இராணுவத்தின் நடவடிக்கைகளை பாதிக்காது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சிவிலியன் கலகங்களின் போது அதனைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் காவல்துறையினருக்கே காணப்படுகின்றது எனத்தெரிவித்துள்ளார்.

எனினும், கலகத்தை கட்டுப்படுத்த முடியாத அசாதாரண சூழ்நிலைகளின் போது இராணுவத்தின் உதவியை பெற்றுக்கொள்வது வழமையானதே எனக் குறிப்பிட்டுள்ளார்.

# மீனவர் பிரச்சினையை தீர்க்காவிடின் இலங்கையுடனான உறவில் பாதிப்பு

## இந்திய வெளியுறவு அமைச்சர் எச்சரிக்கை



(புதுடில்லி)

தமிழ்நாட்டு மீனவர்களின் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால், இலங்கையுடனான உறவு பாதிக்கப்படும் என்று எச்சரித்துள்ளார் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்.

தமிழ்நாட்டு மீனவர்கள், இலங்கைக்கடற்படையால் அடிக்கடி தாக்கப்படுவது தொடர்பாக, இந்திய நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட கவனயீர்ப்புத் தீர்மானம் மீதான விவாதத்துக்கு, பதிலளிக்கும் வகையில், இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித நேற்றுமுன்தினம் அறிக்கை ஒன்றைச்சமர்ப்பித்தார்.

அந்த அறிக்கையில் அவர், இலங்கைச்சிறைகளில் தற்போது 106 இந்திய மீனவர்கள் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பிரச்சினையை இலங்கை அரசு மனிதாபிமான அடிப்படையில் கையாண்டு, அவர்களை விடுதலை செய்ய வேண்டும்.

இந்திய மீனவர்களின் பிரச்சினை உணர்ச்சிபூர்வமானது. இந்திய அரசியல், சமூகத்துடன் தொடர்புள்ளது என்பதால், மக்கள் இதற்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர்.

எனவே, இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாது போனால், இலங்கையுடனான உறவுகளில் பாதிப்பு ஏற்படும்.

இந்திய மீனவர்களின் பாதுகாப்பு, நலன் ஆகியவற்றுக்கு இந்தியஅரசு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது.

மீனவர்களுக்கு எதிராக பலப்பிரயோகம் செய்வதை எந்த சூழ்நிலையிலும் நியாயப்படுத்த முடியாது என்பதை இருநாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.

இலங்கைச்சிறைகளில் உள்ள 106 இந்திய மீனவர்களையும் விடுதலை செய்ய, மத்திய அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நீதிமன்றம் மூலமும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

ஆனால், வடக்கு மாகாணத்தில் நடைபெறவுள்ள தேர்தல் காரணமாக இவர்களை விடுவிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

பிறநாட்டு மீனவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி, இலங்கை அரசு நிர்ப்பந்திக்கப்பட்டு வருவதே இதற்கு காரணம் என்று எனக்கு தகவல் கிடைத்துள்ளது.

இந்திய சிறைகளில் இலங்கை மீனவர்கள் ஒருவர் கூட கிடையாது. இதை எமது பலவீனமாக கருத தக்கூடாது.

இந்தியாவின் நேர்மையான நடவடிக்கையாகவும், ஒவ்வொருவரையும் இதுபோல் தான் அரசுகள் நடத்த வேண்டும் என்பதை வலியுறுத்தும் விதமாகவும் எடுத்துக்கொள்ள வேணடும்.

தனி நபர்களை வைத்து பேரம் பேசக் கூடாது. என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ் மக்களின் நலனை விடுத்து வாக்குகளைப் பெறுவதில் குறி

## கூட்டமைப்பை சாடுகிறது அரசு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்குகளைப் பெற்றுக் கொள்வதிலேயே கூடுதல் நாட்டம் காட்டி வருவதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்பதில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு அக்கறை கிடையாது என பிரதி அமைச்சர் சரத் குமார குணரட்ன தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு பகுதிகளில் இந்திய மீனவர்கள் தொடர்ந்தும் அத்து மீறல்களில் ஈடுபட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். எனினும், இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குரல் கொடுக்கத் தவறியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தென்னிந்தியாவின் அழுத்தங்கள் காரணமாக மீனவர் அத்து மீறல்கள் தொடர்பில் கூட்டமைப்பு மௌனம் காத்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க முடியாவிட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு கிழக்கு மக்களின் வாக்குகளை கோரக் கூடாது என பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# இராணுவ விசாரணை அறிக்கையை ஏற்றுக் கொள்ளக்கூடாது

## சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

இராணுவ விசாரணை அறிக்கையை ஏற்றுக்கொள்ளக் கூடாது என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. கடந்த 1ஆம் திகதி வெலிவேரிய ரத்துபஸ்வல பிரதேசத்தில் இடம்பெற்ற போராட்டம் தொடர்பில் இராணுவத்தினர் விசாரணை நடாத்தி அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். இந்தப் போராட்டத்தின் போது மூன்று பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டிலேயே பொதுமக்கள் கொல்லப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இராணுவத்தினரால் நடாத்தப்பட்ட விசாரணை அறிக்கையை இரத்துச்செய்யுமாறு கம்பகா நீதவானிடம், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உத்தியோகபூர்வமாக கோரியுள்ளது. குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட தரப்பினரே விசாரணை நடாத்துவது பொருத்தமற்றது என சுட்டிக்காட்டியுள்ளது.

பொதுமக்களை முகாம்களுக்கு அழைத்து விசாரணை நடாத்த இராணுவத்தினர் முயற்சி மேற்கொண்டதாகவும் அதற்கான அழைப்பாணை பிரதிகளை நீதிமன்றில் சமர்ப்பிப்பதாகவும் சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

# புலிகளுக்கு ஆதரவாக வெளிநாட்டில் பணம் படைத்தவரே நவிப்பிள்ளை

## என்கிறது ராவணபலய

(கொழும்பு)


ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நவநீதம் பிள்ளை என்பவர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக வெளிநாட்டில் செயற்படும் பணம் படைத்தவர் ஒருவர் என்றும், அமெரிக்கா உள்ளிட்ட ஏனைய நாடுகளில் மனித உரிமைகள் மீறப்படுவது பற்றி அவருக்குக் கண்டு கொள்ளத் தேவையில்லை என்றும் ராவணபலய தெரிவித்துள்ளது.

அடுத்த வாரம் இலங்கைக்கு வருகைதரவுள்ள நவநீதம் பிள்ளையின் இந்நாட்டுச்சுற்றுலாவை முழுமையாக தமது அமைப்பு எதிர்ப்பதாகவும் அவ்வமைப்பின் பொதுச்செயலாளர் இத்தெகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை போன்ற வளர்முக நாடொன்றுக்கு எதிராகச் செயற்படும் அவர், இலங்கைக்கு வந்து இலங்கையை காட்டிக் கொடுப்பதற்கே முயற்சி செய்கின்றார் எனக் குறிப்பிடும் அமைப்பின் பொதுச்செயலாளர், பிள்ளையின் வருகைக்கு எதிர்ாக முழுமையாகச் செயற்பட தமது அமைப்பு ஆவன செய்துவருவதாகவும், பிற தேசங்களுக்கு தலைசாய்த்து அவர்



கள் இலங்கையை ஆட்டிப் படைக்க ஒருபோதும் தமது அமைப்பு இடம்கொடுக்காது என்றும் மேலும் தெரிவித்துள்ளார்.



இந்தியாவின் தென் மேல் கரைக்கு அப்பாலுள்ள லக்ஷதீவுக்காக கொழும்பு டொக்யாட் நிறுவனம் நிர்மாணித்த 250 தொன் சரக்கு கப்பல் நேற்றுமுன்தினம் தனது கன்னிப் பயணத்தை ஆரம்பித்தது. இந்தக் கப்பல் 400 பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடியது.

# முறிகண்டி பிள்ளையார் ஆலயத்தை உயர் இந்து ஆலயமாக அமைக்க ஏற்பாடு

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நியாயாதிக்கத்திற்குட்பட்ட முறிகண்டிப் பிள்ளையார் ஆலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு உயர் இந்து ஆலயப் பகுதியாக அமைக்கப்படவுள்ளது.

இக்கட்டட நிர்மாணப் பணிகள் 3 கட்டடங்களாக நடைபெற இருப்பதுடன் கோவில் அமைந்திருக்கும் பகுதிக்கு எதிர்ப்புறத்தில் அதாவது ஏ 9 பாதையின் மறுபுறத்தில் கடைகள், கழிவறை வசதிகள், தங்குமிடவசதிகள் ஏற்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அங்குள்ள சிவில் அமைப்புகள் இதற்கான நடவடிக்கையை கிளிநொச்சி பாதுகாப்பு படைப்பிரிவு தளபதியை சந்தித்து மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாலயம் முல்லைத்தீவு மாவட்டத்தின் முக்கியமான ஒரு இந்து ஆலயமாக காணப்படுவதுடன் யாழ்ப்பாணத்திலிருந்து தென்னிலங்கைக்கும, தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் பயணத்தை மேற்கொள்ளும் பயணிகளுக்கு இவ்வாலயம் பிரதான ஸ்தலமாக காணப்படுகிறது.

இருபகுதியிலிருந்தும் வரும் பயணிகள் இவ்வாலயப்பகுதியில் சற்று இளைப் பாறிய பின்னரே தமது பயணத்தை தொடங்குகின்றனர். இத்தகைய பிரதான ஆலயமாக திகழும் இவ்வாலயத்தை புனர மைப்புச் செய்து வசதிகளை ஏற்படுத்துவதன் ஊடாக பயணிகள் பெரும் நன்மையடைவதுடன் வழிபாடுகளும் சிறப்பாக இடம் பெறுவதற்கு ஏதுவாக காணப்படும் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது. (170)

# பொங்கல் உற்சவம்

(நெடுங்கேணி)

நெடுங்கேணி பட்டிக்குடியிருப்பு பாவல்குள முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் வெகுசிறப்பாக இடம்பெற்றுள்ளது.

பட்டிக்குடியிருப்பு பாவல்குள முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் கடந்த திங்கட்கிழமை ஆலய பூசகரால் அபிஷேகம் இடம்பெற்று பண்டையகால முறைப்படி மடப்பண்டங்கள் எடுத்து வரப்பட்டு ஆலயத்தை வந்தடைந்ததும் மூன்று வளந்துகள் வைத்து முறைப்படி பூசைகள் நடைபெற்றன.

தொடர்ந்து பால் செம்புகள், அங்கப் பிரதட்சனை ஆகிய நேர்த்திக்கடன்களை செய்ததுடன் இதில் 500 இற்கு மேற்பட்ட அடியார்கள் கலந்து கொண்டனர். (40)

# கண்சிகிச்சை முகாம்

(யாழ்ப்பாணம்)

சம்பத் வங்கியின் ஸ்ரான்லி வீதியிலுள்ள யாழ்.கிளையின் ஏற்பாட்டில் இலவச கண் சிகிச்சை முகாம் இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் ஒரு மணி வரை கிளையில் இடம்பெறவுள்ளது.

சம்பத் வங்கி யாழ் கிளையின் 4ஆம் வருடநிறைவை முன்னிட்டு விசன் ஹெயர் நிறுவனத்துடன் இணைந்து நடாத்தும் இம் முகாமில் ஆலோசனை பெறவிரும்பும் அனைவரும் இதில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (54)

# ஆளுமை விருத்திப்பயிற்சி

(கிளிநொச்சி)

யுனிசெவ் நிறுவன அனுசரணையில் வடக்கு கிழக்கில் சமூக சேவைத்துறையில் ஈடுபடும் அரசதுறையினரின் ஆளுமையை விருத்தி செய்யும் நோக்கில் இலங்கை மன்றக் கல்லூரியில் எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை ஆளுமை விருத்திப் பயிற்சி நெறி நடாத்தப்படவுள்ளது.

இதில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக கரைச்சியில் கடமையாற்றும் ப.சிவகரன் , பூநகரியில் கடமையாற்றும் செ.சுரேந்திரா ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.ஆளுமை விருத்திப் பயிற்சிநெறி 3 கட்டங்களாக இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.வடக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சமூகசேவைகள் அலுவலர்கள் , சமூக சேவைகள் அபிவிருத்தி அலுவலர்கள் ஆகியோருக்கு இப்பயிற்சி தொடர்ச்சியாகவே நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. உத்தியோகத்தர்களின் கடமையை கூடுதல் வினைத்திறனுடன் மேற்கொள்ள இப் பயிற்சி நெறி உதவுகின்றது. (90)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

ஏஞ்சல் சர்வதேச பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, வடமாகாண கல்வி அமைச்சின் செயலர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# அலுவலர் நியமனம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகத்திற்கு சமூக சேவைகள் அமைச்சின் சமூக அபிவிருத்தி அலுவலராக செல்வி எஸ்.சுசீலா அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தனது கடமையைப் பொறுப்பேற்று பிரதேச செயலகத்தின் சமூக பராமரிப்புநிலையத்தில் கடமைஆற்றி வருகின்றார்.

கிளிநொச்சியின் சனத்தொகையில் 65 வீதத்தைக் கொண்டுள்ள கரைச்சி பிரதேச செயலகத்தில் சமூக சேவைகள் நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்குடன் அமைச்சு மேற்கொண்ட நடவடிக்கையை சமூக ஆர்வலர்கள் பாராட்டியுள்ளனர். (90)

# சிறுவர் உரிமையைப் பாதுகாக்கும் முன்மாதிரியான செயற்பாடு

(யாழ்ப்பாணம்)

சேவ்த சில்ரன் இன்ரநஷனல் நிறுவனம் யாழ்.மாவட்டத்தைச் சேர்நத குறிப்பிட்ட சில பிரதேசங்களிலுள்ள சிறுவர் கழகத்தைச் சேர்ந்த அங்கத்தவர்கள் மற்றும் மாதர் சங்க அங்கத்தவர்கள் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய பிரதேசங்களில் சிறப்பாக இயங்கும் சிறுவர் கழகங்களை பார்வையிடும் வகையில் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டனர்.

தற்போது பரவலாக நடைபெற்று வரும் சிறுவர் துஷ்பிரயோகத்தினை தடுக்கும் நோக்கோடு இச்செயற்பாடு மேற்கொள்ளப்பட்ட நிலையில் இந்நிறுவனம் யாழ்.மாவட்டத்தில் உள்ள மாவிட்டபுரம் தெற்கு, மாவை கலட்டி, ஊர்காவற்றுறை, சண்டிலிப்பாய் ,நவாலி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த கழக அங்கத்தவர்களையே அழைத்துச் சென்றதுடன் குறித்த மாவட்டங்களில் சிறப்பாக இயங்கும் கழகங்களின் செயற்பாடுகளை பார்வையிட்டதுடன் சிறுவர்களின் பிரச்சினைகள் அவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் பற்றியும் கலந்துரையாடினர். இவர்கள் சத்துருக்கொண்டான் சர்வவோதய தலைமை அலுவலகத்தில் தங்கவைக்கப்பட்டனர்.இவர்கள் கடந்த 11ஆம் திகதி சென்று நான்கு நாட்கள் விஜயத்தின் பின்னர் யாழ்ப்பாணம் திரும்பியதாக தெரிவிக்கப்படுகிறது. (எஸ்.பி).

# வீதிக்குக்குறுக்காக மண்திட்டிகள்


## சிரமத்தில் போக்குவரத்து

(அச்சுவேலி)

வலளாய் பகுதியில் உள்ள சிறு வீதிகளில் வீதிக்கு குறுக்கே வரம்பு போன்று உயரமான மண்திட்டிகள் போடப்பட்டிருப்பதால் தாம் பல்வேறு இடையூறுகளை எதிர்கொள்வதாகப் போக்குவரத்துச் செய்யும் பயணிகளும் பாதசாரிகளும் கவலை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக ராக்கை வீதி மற்றும் கலைக்கதிர் சனசமூக நிலைய வீதி போன்ற வீதிகளிலேயே இவ்வாறான மண்திட்டிகள் போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே பிரதேசசபைக்குச் சொந்தமான இந்த வீதியில் இவ்வாறான மண்திட்டிகளை அகற்றி அல்லது சிறிதாக்கி பயணிகளின் போக்குவரத்திற்கு வழிவகை செய்யுமாறு பொதுமக்கள் உரியவர்களைக் கேட்டுள்ளனர். (85)



சுவிஸ் திருக்கோணேஸ்வரர் நடனாலயத்தின் மாணவி வேளாயினி அமிர்தநாதனின் பரதநாட்டிய அரங்கேற்றம் அண்மையில் சிவசக்தி மண்டபத்தில் நடைபெற்ற போது மாணவி கௌரவிக்கப்படுவதைக் காணலாம்.... (01)

# முரசின் இன்றைய பலன்



(24.08.2013 சனிக்கிழமை)

விஜய வருஷம் ஆவணி மாதம் 08 ஆம் திகதி.
உத்தரட்டாதி நட்சத்திரம் மு.ப 11.49 வரை,பின் ரேவதி
சித்தம்யோகம், சதுர்த்தி திதி ,சங்கடஹர கணபதி விரதம்
இராகுகாலம 09.05- 10.35 வரை.
சுபநேரம 03.05- 04.35 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | உடல்நலக்கேடுகளை விலைக்கு வாங்கும் பரிதாப நிலை,முயலாமையால் பின்னடைவு, எதிர்பார்த்த உதவி கிட்டுதல், வெளியூர் உறவினர் வருகையால் மகிழ்வு. |
| ரிஷபம் | தன் கையே தனக்குதவி என நம்பியதால் மேம்பாடு,காதல் வசப்படுதல்,பிரயாண முயற்சிக்கு நண்பரின் சுபசெய்தி,நீண்டநாள் பகை முற்றுப்பெறுதல். |
| மிதுனம் | வெளியீட்டு நிகழ்வில் பங்கேற்றல்,உளநோயினால் தடுமாற்றம்,மக்கள் உயர்வு கேட்டு சந்தோஷம்,தனிவழி சென்று திருடரால் இழப்பு,கடன்கட்ட நண்பர் உதவி. |
| கடகம் | தாபரிப்பு வழக்கு தொடரும் எண்ணம், தாயாரின் உடல் நோய் பற்றிய அச்சம், அயலவரின் பிராணியினால் சச்சரவு,காலாவதியான பொருள் கைக்கெட்டி வாக்கு வாதம். |
| சிம்மம் | பால்மாவில் கதிர்வீச்சுத்தாக்கம் பற்றிய அச்சம், புதிய பதவிக்கு செய்தி,குழந்தைப்பேறு, விட்டுக்கொடுபபினால் சமரசம்,புதிதான இணைப்புக்கள் கிடைக்கும் செய்தி. |
| கன்னி | இடமாற்றம், புதிய மனை அமைக்கும் திட்டம்,எடுத்துச்செல்லும் பணம் நழுவும் அபாயம், மருத்துவச்செலவு அதிகரிப்பு. |
| துலாம் | தற்காலிகமாக பயணம் கைவிடும் உத்தேசம், பிதாவின் தேகசுக விருத்தி,பணவரவு. |
| விருச்சிகம் | இயற்கை இடரால் பாதிக்கப்பட்டமைக்கு நிவாரணம், விதியை மீறினபழியால் தண்டனை, சொத்தினால் சகோதரஉறவு விரிசலடைதல்,வரன் தேட வெளிக்கிடல். |
| தனுசு | சளிநோய் பற்றிய கவலை, வங்கியினால் கடனுக்கு அனுமதி, பயணம் இடைத்தங்கல் நாட்டில் சேர்த்தல், அயலவர் உதவி,பகைமை மறைதல். |
| மகரம் | பங்குப்பிரச்சினையால் களேபரம், சத்திர சிகிச்சைக்கு நாள் குறித்தல், பிதாவினால் உதவி, சம்பள ஏற்றம் பற்றிய மகிழ்வான செய்தி. |
| கும்பம் | சம்சாரத்துடன் ஏற்பட்ட மனஸ்தாபம் அகலுதல், அரசுத்துறையில் பதவி கிட்டும் செய்தி, உறவினர் வருகை |
| மீனம் | சகோதரர் உதவி செய்ய முன்வரல், வாகனயோகம், வெளியூர் பயணத்திற்கு பச்சைக்கொடி காட்டல், நோய் பற்றிய அச்சம் நீங்குதல். |

# முன்னிலை வீரராக களமிறங்க விருப்பம்




(போர்ட் ஒப் ஸ்பெயின்)

சர்வதேச போட்டிகளில் முன்னிலை வீரராக களமிறங்கவே விரும்புகிறேன் என பாகிஸ்தான் சகலதுறை வீரர் மலிக் தெரிவித்தார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் மலிக், ஜூன் மாதம் நடந்த சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் விளையாடிய இவர், பெரிய அளவில் சோபிக்கவில்லை. இதனையடுத்து தேசிய அணியில் இருந்து புறக்கணிக்கப்பட்டார். தற்போது இவர், மேற்கிந்தியத்தீவில் நடக்கும் கரீபியன் பிரிமியர் லீக் (சி.பி.எல்.,) தொடரில் பார்படோஸ் அணிக்காக விளையாடுகிறார். இத்தொடரில் துடுப்பாட்டத்தில் அசத்திய இவர், அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்கள் வரிசையில் இரண்டாவது இடத்தில் உள்ளார். இதனையடுத்து, அடுத்து நடக்கவுள்ள மேற்கிந்தியத்தீவு மற்றும் சிம்பாப்வே அணிக்கு எதிரான தொடரில் இடம் கிடைக்கும் என எதிர்பார்க்கிறார்.

இந்நிலையில் இது குறித்து கருத்துத் தெரிவித்த மலிக், பாகிஸ்தானுக்காக விளையாடுவதைக் கௌரவமாக கருதுகிறேன். இன்னும் ஆறு ஆண்டுகள் சர்வதேச போட்டிகளில் விளையாடும் தகுதி உள்ளது. அடுத்து விளையாடும் போட்டிகளில், முன்னிலை வீரராகக் களமிறங்கவே விரும்புகிறேன். மூன்றாவது அல்லது நான்காவது வீரராக களமிறங்கும் பட்சத்தில், அதிக ஓட்டங்கள் எடுத்து துடுப்பாட்டத்தில் ஜொலிக்கலாம். சமீபத்தில் தோள்பட்டை மற்றும் முழங்கை காயத்தால் பாதிக்கப்பட்டேன். முழங்கை காயத்துக்கு சத்திர சிகிச்சை செய்ததால், தினமும் பயிற்சி மேற்கொண்டு வருகிறேன். ஒரு நாளில் 30 ஓவர் வரை பந்து வீசுவதில் பிரச்சினை இல்லை. தற்போது முழு உடற்தகுதி இருப்பதால், சர்வதேச போட்டியில் விளையாடத் தயாராக உள்ளேன். போட்டியில் சகலதுறை வீரராக களமிறங்குவதை விரும்புகிறேன். கரீபியன் பிரிமியர் லீக் தொடரில் எனது துடுப்பாட்டம் மகிழ்ச்சி அளிக்கிறது. எங்கள் பார்படோஸ் அணியை இறுதிப் போட்டிக்கு கொண்டு சென்று, கோப்பையை வென்று கொடுப்பதே இலக்கு. இத்தொடரில் கிடைத்த அனுபவம், அடுத்து வரவுள்ள சர்வதேசப் போட்டிக்கு கைகொடுக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# பேட்டியால் தலைவலி

(லண்டன்)

அவுஸ்ரேலிய இரசிகர்கள் புரொட்டை அழ வைக்க வேண்டும் என பேட்டியளித்த பயிற்சியாளர் லீமனுக்கு அபாரதம் விதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆஷஸ் முதலாவது டெஸ்டின் போது இங்கிலாந்து வீரர் ஸ்ரூவெர்ட் புரொட், பந்துத் துடுப்பில் உரசியபடி பிடியானது தெரிந்தும், நடுவர் ஆட்டமிழப்பு வழங்க மறுத்த ஒரே காரணத்திற்காக வெளியேற மறுத்ததை அவுஸ்ரேலிய பயிற்சியாளர் டரன் லீமன் கடுமையாக விமர்சித்தார். இது புரொட்டின் அப்பட்டமான மோசடி என்றும், அவுஸ்ரேலியாவுக்கு வரும் போது அவரை அவுஸ்ரேலிய இரசிகர்கள் அழ வைக்க வேண்டும் என்றும் பேட்டியொன்றில் தெரிவித்திருந்தார்.

இந்தப் பேட்டி அவருக்கு இப்போது தலைவலியை ஏற்படுத்தியிருக்கிறது. அவரது சர்ச்சைக்குரிய பேட்டி குறித்து சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ. சி. சி.) ஆய்வு செய்து வருகிறது. இதன் முடிவில் லீமன் ஒழுங்கீனமாக நடந்து கொண்டது தெரிய வந்தால் அவருக்கு போட்டிக் கட்டணத்தில் இருந்து 50 சதவீதம் அல்லது 100 சதவீதம் அபராதமாக விதிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பதவி விலகல்

(சிட்னி)

அவுஸ்ரேலிய ரென்னிஸ் தலைமை நிர்வாகி ஸ்டீப்வுட் 8 ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி அடுத்த மாதம் பதவி விலகவுள்ளார்.

அவருக்கு அடுத்து இப்பதவிக்கு கிரேடக்டிலி பொறுப்பேற்பார் என அவுஸ்ரேலிய ரென்னிஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

அவுஸ்ரேலிய ரென்னிஸ் அமைப்பின் தலைமை நிர்வாகி படைப்பாற்றல் மிக்க முற்போக்கு சிந்தனை உடையவர்.

# உண்மையா அஜ்மல்?



கிரிக்கெட்டின் சாதனைச் சிகரம் என்று அழைக்கப்படும் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் சர்வதேச ஒரு நாள் போட்டியிலிருந்து ஓய்வு பெறும் முடிவுக்குத் தள்ளப்பட்டதற்கு தானே காரணம் என்று பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் சயீத் அஜ்மல் தெரிவித்துள்ளார். டெண்டுல்கர் ஒரு சூப்பர் ஸ்டார். கிரிக்கெட்டில் ஒட்டுமொத்தமாக சுமார் 50 ஆயிரம் ஓட்டங்களை குவித்துள்ளார். 2011ஆம் ஆண்டு உலக கோப்பை அரையிறுதியில் டெண்டுல்கரின் (85 ஓட்டம்) விக்கெட்டை நான் தான் வீழ்த்தினேன். இது எனது வாழ்க்கையில் மறக்க முடியாத தருணமாகும்.

அதன் பின்னர் 2012ஆம் ஆண்டு மார்ச் 18ஆம் திகதி நடந்த ஆசிய கோப்பைக் கிரிக்கெட்டிலும் அவரது விக்கெட்டை (52 ஓட்டங்களில்) நான் தான் கைப்பற்றினேன். ஒரு நாள் போட்டியில் இது தான் அவரது கடைசி ஆட்டமாகும். இந்த ஆட்டத்தில் அவர் தூஸ்ரா வகை பந்து வீச்சில் தடுமாறினார். உடனே கப்டன் மிஸ்பா என்னிடம், அவரை ஸ்லிப்பில் பிடியெடுத்து தூக்கி விடலாம் என்று கூறினார். இதையடுத்து யூனிஸ்கான், ஸ்லிப் களத்தடுப்பாளராக மாற்றப்பட்டார் எங்களது திட்டப்படியே உலகின் தரம் வாய்ந்த துடுப்பாட்ட வீரரான அவர் ஸ்லிப்பில் விக்கெட்டை இழந்தார். இது போன்ற எனது சிறந்த பந்து வீச்சே அவரை ஒரு நாள் போட்டியில் இருந்து வெளியேற நிர்ப்பந்தப்படுத்தியது என அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கையணி அறிவிப்பு

(கொழும்பு)

சிம்பாப்வேயிற்கு கிரிக்கெட் சுற்றுலாவை மேற்கொள்ளவுள்ள இலங்கை அணி குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. சிம்பாப்வேயிற்கான கிரிக்கெட் சுற்றுலாவை இலங்கை அணி மேற்கொள்ளவுள்ளது.

இத்தொடருக்கான போட்டி அட்டவணை இன்னமும் முடிவு செய்யப்படாத நிலையில் இந்தக் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தொடரில் 2 டெஸ்ட் போட்டிகளும், 3 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளும் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுவதோடு, இத்தொடர் ஒக்ரோபர் முதல் வாரத்தில் ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அறிவிக்கப்பட்டுள்ள குழாம்: திலகரட்ண டில்சான், திமுத் கருணாரத்ன, உதர ஜெயசுந்தர, குஷால் ஜனித் பெரேரா, குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன, லஹிரு திரிமன்ன, டினேஸ் சண்டிமால், கித்துருவன் விதானகே, அஞ்சலோ பெரேரா, சச்சித்திர சேரசிங்க, அஷென் பிரியஞ்சன, சுரங்க லக்மால், ஷமின்ட எரங்க, தம்மிக்க பிரசாத், விமுக்தி பெரேரா, நுவான் குலசேகர, அஞ்சலோ மத்தியூஸ், திஸர பெரேரா, ரங்கன ஹேரத், சச்சித்திர சேனநாயக்க, அஜந்த மெண்டிஸ், டில்ருவான் பெரேரா, கௌஷால் சில்வா, கோசல குலசேகர, கௌஷால் லொக்குவாராய்ச்சி, இசுரு உதான.

# சகீர் இல்லையெனில் நானில்லை



(புதுடில்லி)

எதிர்வரும் தென்னாபிரிக்க தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தத் தயாராக உள்ளேன் என இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் இஷாந்த் சர்மா தெரிவித்தார்.

கடந்த பெப்ரவரி மாதம் கணுக்கால் காயத்திலிருந்து மீண்ட பின், எனக்கு ஓய்வு கிடையாது. தற்போது, உடற்தகுதி மற்றும் பயிற்சியில் கவனம் செலுத்தி வருகிறேன். தவிர, தொடர்ந்து வேகமாக பந்து வீச முயற்சிக்கிறேன். இதற்காக காலையில் ஜிம், மதியம் பந்துவீச்சு, அடுத்து நீச்சல் என, தேசிய கிரிக்கெட் அக்கடமியில் கடினமாகப் பயிற்சி செய்கிறேன்.

சமீபத்தில் நியூசிலாந்து முன்னாள் வீரர் ரிச்சர்ட் ஹட்லி என் பந்துவீச்சு குறித்து தெரிவித்த கருத்தை வரவேற்கிறேன்.

ஏனெனில், ஒவ்வொருவருக்கும் தங்கள் கருத்தைத் தெரிவிக்க உரிமை உள்ளது. இருப்பினும், இன்னும் சிறப்பாகச் செயற்பட முயற்சி செய்வேன்.

இங்கிலாந்துக்கு எதிரான சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில், முக்கிய கட்டத்தில் கப்டன் டோனி என்னை பந்துவீச அழைத்தது ஆச்சரியத்தை தந்தது. இந்த ஓவர் தான் போட்டியில் வெற்றி பெற உதவப் போகிறது என்றார். இவரது நம்பிக்கைக்கு ஏற்ப, சிறப்பாகச் செயற்பட்டது மகிழ்ச்சி.

இதேபோல, எதிர்வரும் தென்னாபிரிக்க தொடருக்கும் தயாராக உள்ளேன். உடற்தகுதியைத் தொடர்ந்து சிறப்பாக வைத்து, இந்திய அணியின் பந்துவீச்சுப் பிரிவுக்கு தலைமையேற்று முன்னெடுத்துச் செல்ல விரும்புகிறேன்.

ஆனால், இதற்கு முன் சம்பியன்ஸ் லீக், அவுஸ்ரேலியாவுக்கு எதிரான ஒரு நாள் தொடர் போன்றவை வரவுள்ளது. முதலில் இதில் கவனம் செலுத்த வேண்டும்.

இளம் வீரர் புவனேஷ்வர் குமார் வித்தியாசமான திறமை படைத்தவர். மணிக்கு 140 கி.மீ., வேகத்தில் பந்து வீசும் இவர், இருபுறமும் சுவிங் செய்வதில் வல்லவர். இதேபோல, சகிர்கானுடன் இணைந்து விளையாட விரும்புகிறேன்.

சர்வதேச கிரிக்கெட்டில் முதல் மூன்று ஆண்டுகள், இவரது கண்காணிப்பில் தான் வளர்ந்தேன். பந்து வீச்சு நுணுக்கங்களை இவர் தான் கற்றுக் கொடுத்தார்.

இப்போது களத்தில் வெளிப்படுத்தும் திறமை எல்லாம், இவரிடம் இருந்து கற்றது தான். சகிர்கான் மீண்டும் இந்திய அணியில் இடம் பெற்றால் மகிழ்ச்சி அடைவேன். மீண்டும் இந்திய அணியில் சகீர்கான் இடம்பிடிப்பார் என நம்புகின்றேன். வெளிநாட்டு ஆடுகளங்களில் அவர் போன்று பந்து வீசுவது கடினம்.

எதிரணி துடுப்பாட்ட வீரர்களை நிலை குலையச் செய்யும் வகையில் அவரின் பந்து வீச்சு அமையும். அவர் குறைந்தது அடுத்த உலகக் கிண்ணப் போட்டி வரையாவது இந்திய அணிக்காக விளையாட வேண்டும் என பிரார்த்திக்கின்றேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சமநிலையான போட்டி




(மட்ரிட்)

பார்சிலோனா, அத்லெட்டிகோ மட்ரிட் அணிகள் மோதிய சூப்பர் கோப்பைக் கால்பந்து தொடரின் முதல் போட்டி சமநிலையானது.

ஸ்பெயின் தலைநகர் மட்ரிட்டில், லா லிகா தொடரில் சூப்பர் கோப்பைக் கால்பந்துப் போட்டி நடைபெற்று வருகின்றது. இதில் நடப்பு சம்பியன் பார்சிலோனா, அத்லெட்டிகோ மட்ரிட் அணிகள் மோதின. இரண்டு சுற்றுகளாக நடக்கும், இதன் முதல் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.


முதல் பாதியில் ஆதிக்கம் செலுத்திய அத்லெட்டிகோ மட்ரிட் அணியின் டேவிட் வில்லா (12ஆவது நிமிடம்) முதல் கோல் அடித்தார். இடையில், பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர் மெஸ்சி, காயம் காரணமாக வெளியேறினார்.

இரண்டாவது பாதியில், பார்சிலோனா அணியில் சமீபத்தில் இணைந்த பிரேசிலின் நெய்மர் (66ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். முடிவில், போட்டி 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது. இரண்டாவது போட்டி ஆக. 28இல் பார்சிலோனாவில் நடக்கிறது. இதில் வெற்றி பெறும் அணி சம்பியன் பட்டம் வெல்லும்.

# தடகளப் போட்டியில் ஜமாய்க்கும் வவுனியா மாவட்ட வீரர்கள்


ஷாலினி


லேகாஜினி



கோகிலவாணி


திஸநாயக்கா



கிருஸ்ணா


கமலினி


கேசவன்


சதீஸ்குமார்


நர்மதி


தேவர்சன்


சந்திரவேந்தன்

(வவுனியா)

மெய்வல்லுநர் போட்டியில் வவுனியா மாவட்ட வீர,வீராங்கனைகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட மாகாண மெய்வல்லுநர் போட்டி அண்மையில் வவுனியா நகர சபை விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இத் தடகளப் போட்டியில் வடக்கு மாகாண வீர,வீராங்கனைகளால் 21 சாதனைகள் முறியடிக்கப்பட்டன. இதில் 15 சாதனைகள் வவுனியா மாவட்ட வீர,வீராங்கனைகளால் முறியடிக்கப்பட்டன. யாழ். மாவட்ட வீரர்களால் நான்கு சாதனைகளும், முல்லைத்தீவு மாவட்ட வீரர்களால் இரண்டு சாதனைகளும் முறியடிக்கப்பட்டன.

இதில் வவுனியா மாவட்ட வீராங்கனை லேகாஜினி நான்கு புதிய சாதனைகளை நிலைநாட்டியதுடன் மாகாணத்தின் அதிக சிறந்த ஆற்றல் வெளிப்பாட்டாளருக்கான விருதையும் வென்றார்.

பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் ஒரு நிமிடம் 00.1 செக்கன்களில் நிறைவு செய்து புதிய சாதனையை நிலைநாட்டினார். அத்துடன் அவர் 200 மீற்றர் ஓட்டத்தில் (26.7), 400 மீற்றர் தடை தாண்டுதல் ஓட்டம் (1 நிமிடம் 07.4 செக்கன்) மற்றும் 4X400 மீற்றர் ஓட்டம் (4 நிமிடம் 27.9 செக்கன்) ஆகிய போட்டிகளில் புதிய சாதனை நிலைநாட்டினார்.

மற்றும் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஆர். ஷாலினி பெண்களுக்கான மத்திய தூரம் மற்றும் நெடுந்தூர ஓட்டப் போட்டியில் ஐந்து புதிய சாதனையை நிலைநாட்டினார்.

இதில் 1500 மீற்றர் போட்டியில் (5 நிமிடம் 16.9 செக்கன்), 5000 மீற்றர் போட்டியில் (19 நிமிடம் 37.4 செக்கன்), 10,000 மீற்றர் போட்டியில் (40 நிமிடம் 55.6 செக்கன்) ஆகியவற்றுடன் எட்டு கிலோ மீற்றர் நகர் வல ஓட்டப் போட்டியில் (33 நிமிடம் 57.2 செக்கன்) மற்றும் மரதன் ஓட்டப் போட்டியில் (4 மணி 9 நிமிடம் 41 செக்கன்) ஆகியவற்றில் மாகாண மட்டத்தில் புதிய சாதனையை நிலைநாட்டினார்.

இதில் ஏனைய சாதனைகளை முறியடித்தோர் விபரம் வருமாறு: எம். கமலினி (யாழ். மாவட்டம்), கே. கோகுலவாணி (வவுனியா மாவட்டம்), பி. பிரணவி (யாழ். மாவட்டம்), எம். மெற்றில்டா (யாழ். மாவட்டம்), ஆர். கிருசாந்தினி (வவுனியா மாவட்டம்), கே. சதீஸ்குமார் (வவுனியா மாவட்டம்), ரி. தேவராசன் (முல்லைத்தீவு மாவட்டம்), எம். கேசவன் (வவுனியா மாவட்டம்), எம். கிருஷ்ணா (யாழ். மாவட்டம்), டபிள்யூ ஏ.பி. லிவிங்ரன் (யாழ். மாவட்டம்), எச்.ஏ.பி. திஸநாயக்க (வவுனியா மாவட்டம்), கே. சந்திரவேந்தன் (வவுனியா மாவட்டம்) ஆகியோர் சாதனைகளை நிலைநாட்டியவர்களாவர்.

39ஆவது தேசிய விளையாட்டு விழாவின் மெய்வல்லுநர் போட்டியில், லேகாஜினி மற்றும் ஷாலினி ஆகியோர் பதக்கம் வென்று மாகாணத்திற்கும், மாவட்டத்திற்கும் பெருமை சேர்ப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. 39ஆவது தேசிய விளையாட்டு விழா விரைவில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

## விளையாட்டு செய்திகள்

## ஆண்டு நினைவினை முன்னிட்டு மென்பந்து, கரப்பந்து போட்டிகள்

(நெல்லியடி)

பருத்தித்துறை மாதனை சனசமூக நிலையம் நான்காவது ஆண்டை முன்னிட்டு யாழ். மாவட்ட அணிகளுக்கிடையே மென்பந்து மற்றும் கரப்பந்தாட்டப் போட்டிகளை நடாத்தவுள்ளது.

மாவட்ட அணிகளுக்கிடையில் இடம்பெறவுள்ள மென்பந்து கிரிக்கெட் போட்டி இரு வகையில் நடாத்தப்படவுள்ளது. இதில் ஐந்து ஓவர்கள் கொண்ட தொடராகவும், 12 ஓவர்கள் கொண்ட தொடராகவும் மென்பந்து கிரிக்கெட் போட்டி நடாத்தப்படவுள்ளது.

கரப்பந்தாட்டப் போட்டி ஓவர்கேட் முறையில் நடாத்தப்படவுள்ளது. இப்போட்டியில் பங்குகொள்ள விரும்பும் அணிகளை மாதனை சனசமூக நிலையத்துடன் தொடர்பு கொண்டு தமது பதிவுகளை விரைவாக மேற்கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இப்போட்டித் தொடர்களில் வெல்லும் அணிக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்களும் வழங்கப்படும் எனவும், போட்டியின் ஆட்டநாயகன், தொடர் நாயகன் போன்ற விருதுகளும் வழங்கப்படும் எனவும் போட்டி

## ஜொலிஸ்ரார் பெருவெற்றி

(வட்டுக்கோட்டை)

கல்கோவன், மதூணன் ஆகியோரின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் ஜொலிஸ்ரார் அணி பெரு வெற்றிபெற்றது.

இலங்கை கிரிக்கெட் சங்கத்தின் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்ட முக்கியமான ஆட்டமொன்று கடந்த செவ்வாய்க்கிழமை வட்டுக்கோட்டை யாழப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

ஜொலிஸ்ரார் அணியும், பற்றிசீயன்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஜொலிஸ்ரார் அணி கல்கோவனின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் ஜொலிஸ்ரார் அணி 49.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 238 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கல்கோவன் 93, கஜனன் 36, சோபன் 34 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மொறீஸ், லிவிங்ரன் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 239 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பற்றிசீயன்ஸ் அணி மதூணனின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் பற்றிசீயன்ஸ் அணி 25 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 109 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வியடைந்தது. இதில் பத்மமுரளி 41, தனுஸ் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மதூணன் ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இவ்வெற்றியின் மூலம் ஜொலிஸ்ரார் அணி காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

## முழங்காவிலில் இன்று மாபெரும் கால்பந்து

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்ட கால்பந்து அணிகளுக்கிடையிலான மாபெரும் கால்பந்தாட்டப் போட்டி இன்றும், நாளையும் முழங்காவில் பொதுவிளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தின் அனுசரணையுடன், பூநகரிப்பிரதேச சுகாதார வைத்தியஅதிகாரியின் ஒழுங்கமைப்பில் புற்றுநோய் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் நடாத் தப்படும் இப்போட்டித் தொடரில் கிளிநொச்சி மாவட்டத்தைச்சேர்ந்த பலகால்பந்து அணிகள் பங்குகொள்கின்றன.

முதல் நாள் தெரிவுப் போட்டிகள் இடம்பெறும் என்றும், நாளை பிற்பகல் 3.30 மணிக்கு இறுதிப் போட்டிகள் இடம்பெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்போட்டி நிகழ்வில் கிராமப் பெரியோர், விளையாட்டு நலன்விரும்பிகள், ஆர்வலர்கள், இரசிகர்களைக் கலந்து கொண்டு போட்டியாளர்களுக்கு உற்சாகமூட்டுமாறும் அவர்கள் கேட்டுள்ளனர். (112)

## ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணி சம்பியன்

ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழகமும் சனசமூக நிலையமும் இணைந்து நடாத்திய மாபெரும் மென்பந்து கிரிக்கெட் போட்டியில் ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது. ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழக மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இப்போட்டித் தொடரில் பல அணிகள் பங்குகொண்டன. இருப்பினும் இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு காரைநகர் அணியும், ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணியும் தகுதி பெற்றன. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணி 10 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 67 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 68 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய காரைநகர் அணி 7.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 42 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இப்போட்டி நிகழ்வில் கிராமப் பெரியோர், விளையாட்டு நலன்விரும்பிகள், ஆர்வலர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டுகளித்தமை குறிப்பிடத்தக்கது. (21)



# கழக நிலைப்பாடு படும் பாடு!

– "துக்ளக்" சத்யா

**வ**ரும் நாடாளுமன்றத் தேர்தலில் எந்தக் கட்சியுடன் கூட்டு வைத்துக் கொள்வது என்று முடிவெடுக்க, தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் முடிவை அறிவிக்கும் வரை நாம் ஏன் சஸ்பென்ஸில் காத்திருக்க வேண்டும்? தி.மு.க.வினரின் மன நிலையை இப்போதே ஸ்கான் செய்து பார்க்கலாமே! - சத்யா

**கலைஞர்:**
எல்லோரும் வந்தாச்சா? விவாதத்தை ஆரம்பிக்கலாமா? கழகம் எப்போதுமே ஜனநாயக ரீதியிலே நடக்கிற இயக்கம். நாடாளுமன்றத் தேர்தல்லே எந்தக் கட்சியோடு கூட்டு வெச்சுக்கலாமுன்னு உங்க கருத்துக்களை மனம் திறந்து சொல்லலாம். அப்புறம், குடும்ப உடன்பிறப்புகளோட கலந்தாலோசித்து இறுதி முடிவெடுக்கிறேன்.

**மாவட்டச் செயலாளர்:**
காங்கிரஸோட கூட்டு வெச்சுத்தான் தலைவரே நம்ம நிலைமை இப்படி ஆயிடுச்சு. சட்ட சபைத் தேர்தலிலே, நாம கொடுக்காமலேயே 63 இடங்களை எடுத்துக்கிட்டு, நம்மை மைனாரிட்டி எதிர்க் கட்சியா ஆக்கினதே காங்கிரஸ்தான். மறுபடியும் காங்கிரஸோட கூட்டு வெச்சா, 28 எம்.பி. ஸீட் எடுத்துக்கிட்டு ஒண்ணோ ரெண்டோதான் ஜெய்ப்பாங்க. காங்கிரஸை நாம் ஏற்கனவே கழட்டி விடாம இருந்தா, இப்ப கழட்டி விட்டுடறது நல்லதுங்க.

**துரைமுருகன்:**
கழட்டி விட்டா என்ன ஆகும்னு யோசிக்கணும். 2ஜி கேஸ்லே ஸி.பி.ஐ.க்கு சுதந் திரம் கிடைச்சுடாதா? தலைவர் நிம்மதியா கட்சி நடத்த வேண்டாமா? கனிமொழியைக் காப்பாத்தறது முக்கியமா? கழகத்தைக் காப்பாத்தறது முக்கியமா? எனக்கென்னவோ, காங்கிரஸோட கூட்டு சேர்ந்தா வர்ற கெடுதலை விட, கூட்டு சேரலைன்னா வர்ற கெடுதல்தான் அதிகம்னு தோணுது.

**மா.செ:**
அதில்லைங்க, எப்படி யாவது விஜயகாந்தை இழுத்துட்டா நல்லது. கழகம் வலுவோட இருந்தாத்தான் 2016இலே மறுபடியும் ஆட்சி யைப் பிடிச்சு, எவ்வளவோ செய்யலாம். முன்னாள் மந்திரிகளை சொத்துக் குவிப்பு வழக்கிலேர்ந்து காப்பாத்த முடியும். கலைஞருக்கு பாராட்டு விழா நடத்தி எவ்வளவு நாளாச்சு!

**கலைஞர்:**
அதுக்காக? சுயமரியாதையை இழக்க நான் தயாராக இல்லை. இந்த மத்திய அரசாலே இலங்கைத் தமிழர்களுக்கு எந்த நன்மையும் இல்லை. மீனவர்கள் உயிருக்கும் பாதுகாப்பு இல்லை. கழகத் தின் உணர்வுகளை மதிக்காம, கொமன்வெல்த் மாநாட்டுலே கலந்துக்க பிரதமரே இலங்கை போறார். இதையெல்லாம் வேடிக்கை பார்க்க என்னாலே முடியாது. நாளைக்கே டெஸோ கூட்டம் கூட்டறேன்.

**தயாநிதி மாறன்:**
(செல்ஃபோனை நீட்டியபடி) தாத்தா... டெல்லியிலேர்ந்து பேசறாங்க. ஏர்செல்-மாக்ஸிஸ் விவகாரத்திலே ஸி.பி.ஐ. குற்றப் பத்திரிகை ரெடி பண்ணியிருக்குதாம். மாவட்டச் செயலாளர் கூட்டத்தில் என்ன முடிவு பண்ணியிருக்கீங்கன்னு கேக்கறாங்க.

**கலைஞர்:**
வெளிநாட்டுக் கொள்கை யைப் பொறுத்த வரையிலே இந்திய அரசின் நிலைப்பாட் டுக்கு எதிரா நான் எப்பவும் செயல்படமாட்டேன். நாம காங்கிரஸுக்கு எதிரா முடி வெடுத்தா மட்டும் இலங்கைப் பிரச்சினை தீர்ந்துடுமா? தனி ஈழம் கிடைச்சுடுமா? மீனவர்களை யாரும் கடத்த மாட்டாங்களா?

**தயாநிதி மாறன்:**
ஹலோ... கலைஞர் சொன்னதைக் கேட்டுகிட்டீங் களா? அதாங்க கழக நிலைப் பாடு. ஆவேசமா விவாதிச்சா லும், கடைசியிலே ஃபோர் முக்கு வந்திடுவோம்.

**மா.செ:**
சமயத்திலே அ.தி.மு.க.வும் காங்கிரஸும் கூட கூட்டு சேர்ந்துடலாம். அதிகார பலத்திலே அவங்க ஜெயிக்க முடியும். மத்தியிலே காங்கிர ஸுக்கு மாற்று பா.ஜ.க.தான். தி.மு.க.வும் பா.ஜ.க.வும் கூட்டு வெச்சா, பா.ஜ.க. தலைவர்கள் விஜயகாந்தையும் நம்ம பக்கம் இழுத்துட்டு வந்துருவாங்க. அப்ப நம்ம அணிதான் ஸ்டிராங்கா இருக்கும்.

**கலைஞர்:**
கூட்டணி தொடர்பான என்னுடைய பல கருத்துகளிலே



அதுவும் ஒன்று. கலைஞர் இருக்கிற இடத்திலே மதவாதம் இருக்காதுன்னு ஸி.எஸ்.ஸே. சொல்லியிருக்கார். மோடிக்கு எதிரா அமெரிக்காவுக்கு எம்.பி.க்கள் கடிதம் எழுதி யதைக் கண்டிச்சவனே நான் தான். நமது தொப்புள் கொடி தமிழினத்தை திட்டமிட்டு அழித்த இரத்த வெறி ராஜபக்ஷவுக்கு துணை போன காங்கிரஸுக்கு, இன்னும் எத்தனை காலத்துக்கு நாம லாலி பாடிக்கொண்டிருக்க முடியும்? நான் காரணமில்லாம டெஸோவை ரெண்டாவது தடவை உருவாக்கலை...

**துரைமுருகன்:**
(செல்ஃபோனில்) ஹலோ... அமலாக்கப் பிரிவிலேர்ந்து பேசறீங்களா?... அப்படியா? ஐயையோ! ஒரு நிமிஷம்... தலைவர் கிட்டே குடுக்கிறேன். கலைஞரே! டெல்லியிலியி லேர்ந்து போன், கனிமொழிக்கு எதிரா அமலாக்கப் பிரிவு ஏதோ புதுசா வழக்கு போடப் போகுதாம். கூட்டணி விஷயமா என்ன முடிவெடுத்தீங்கன்னு கேக்கிறாங்க.

**கலைஞர்:**
நான் அவசரப்பட்டு எடுத்தேன், கவிழ்த்தேன் என்று எந்த முடிவும் எடுக்கத் தயாராயில்லை. மதவாத ஆக்டோபஸ் ஆட்சி இந்தியாவில் எந்த விதத்திலும் நுழைய அனுமதிக்க மாட்டோம்னு மசூதி இடிக்கப்பட்டபோதே சபதம் எடுத்திருக்கோம். மதவாத பா.ஜ.க.வை விரட்டியடிக்க காங்கிரஸை விட்டால் வேறு என்ன இருக்கிறது?

**துரைமுருகன்:**
அப்ப சரிங்க... ,அப்படியே சொல்லீடறேன். ஹலோ... ஒண்ணும் பிரச்சினை இல்லைங்க. கூட்டணி தர்மப் படியே நடக்கலாம். முகுல் வாஸ்னிக்கை அனுப்புங்க. பேசித் தீர்த்துக்கலாம்.

**மா.செ:**
காங்கிரஸோட சேர்ந்தாலே நமக்கு ரொம்ப கெட்ட பேருங்க. மறுபடியும் காங்கிர ஸோட கூட்டு வெச்சா, தமிழ் உணர்வாளர்கள் வாக்கெல் லாம் அம்மையார் பக்கம் போயிடும். மீனவர் கடத்தல் நடக்கும் போதெல்லாம் நம்மைத்தான் திட்டுவாங்க. ராஜபக்ஷ பண்ற கொடுமைக் கெல்லாம் நாமதான் பதில் சொல்லணும்.

**மா.செ2:**
ஆமாங்க. இலங்கைப் பிரச்சினையிலே நாம வீரமா கேக்கறதுக்கு ஆயிரம் கேள்வி கள் இருக்குது. காங்கிரஸோட சேர்ந்துட்டா, சொல்றதுக்கு ஒரு பதில் கூட இல்லை.

**ஸ்டாலின்:**
ஊழல்களால் காங்கிரஸ் பேர் ரொம்பக் கெட்டுப் போயிருக்குது. அவங்களோட சேர்ந்து தேர்தலை சந்திச்சா, ஊழல் கட்சிகள் ஒண்ணா சேர்ந்துட்டதா கிண்டல் பண்ணு வாங்க. காங்கிரஸை எதிர்த்தா, ஊழலை எதிர்க்கிறோம் என்ற பேர் நமக்கே கிடைக்கும். காங்கிரஸ் கூட்டு வேண்டவே வேண்டாம். கலைஞர் முடிவை ஏத்துக்கறேன்.

**கலைஞர்:**
தம்பி ஸ்டாலின் கருத்து தான் என் கருத்தும். சோனி யாவின் மருமகனும் உதவி யாளரும் வழக்கிலிருந்து விடுவிக்கப்படறாங்க. அவுங் களுக்கு ஒரு நீதி. கழகத்துக்கு ஒரு நீதியா? அதனால்தான் இலங்கைப் பிரச்சினையிலேயும், சேது திட்டத்துக்காகவும் ஆர்ப் பாட்டம் செய்ய வேண்டிய கட்டாயத்திலே இருக்கோம்.

**தயாநிதி மாறன்:**
மறுபடியும் டில்லியிலேந்து ஃபோன்.

**கலைஞர்:**
அதுக்குள்ளே ஏன் அவசரப்படறாங்க? நாமதான் இன்னும் எந்த முடிவும் எடுக்கலையே...

**தயாநிதி மாறன்:**
அழகிரியின் உரத்துறை யிலே ஊழல்ன்னு பா.ஜ.க. பிரச்சினை கிளப்புதாம். ஸி.பி.ஐ. விசாரணை வைக்கணுமுன்னு கேக்கறாங்களாம். கூட்டணி விசயமா இன்னுமா முடி வெடுக்கலைன்னு கேக்கிறாங்க. என்ன பதில் சொல்றது?

**கலைஞர்:**
காங்கிரஸ் உடனான ... வில், கழகத்தின் தற்போதைய நிலையில் எந்த மாற்றமும் இல்லைன்னு சொல்லிடுவோம். அப்பத்தான் நாம காங்கிரஸை ஆதரிக்கிறோமா எதிர்க்கிறோ மான்னு யாருக்கும் புரியாது.


---

## சின்னப்ப தேவர்

**சி**னிமா தயாரிப்பாளர், காலம் சென்ற சாண்டோ சின்னப்ப தேவர், 40 ஆண்டுகளுக்கு முன், ஒரு வார இதழுக்கு அளித்த பேட்டியில் சொல்கிறார்:

நான், சொந்தப்படம் தயாரிக்க சினிமாக் கம்பெனி துவங்கினேன். நடிகர், நடிகைகளுக்கும் மற்ற தொழி லாளர்களுக்கும் சம்பளம் கொடுக்க, "காசோலை" தர வேண்டும். அதுநாள் வரை, எனக்கு வங்கியில் கணக்கு கிடையாது. அதனால், புதிதாக, என் பெயரில் ஒரு கணக்கு ஆரம்பித்து, கணிசமான ஒரு தொகையையும் போட்டு வைத்தேன். காசோலை புத்தகம் கொடுத்தனர் வாங்கி வந்தேன்.

ஒரு வாரம் கழித்து, எனக்கு பணம் தேவைப்பட்டது. என் பெயருக்கு, காசோலை யில் எழுதிக் கொண்டு வங்கிக்கு சென்றேன். ஆனால், என் கையெழுத்து சரியாக இல்லை. நான் பள்ளிக்கூடம் போய் படிக்காதவன். என் பெயரை எப்படி எழுதுவது



என்று, மற்றவர்கள் சொல்லிக் கொடுத்துத் தான் கையெழுத்து போட்டு வந்தேன். என் கையெழுத்தையும், என் உருவத்தையும் பார்த்து சந்தேகித்த அவர்கள், என்னை ஒரு ஓரமாக உட்காரச் சொல்லி, பொலீசுக்கு போன் செய்து விட்டனர்.

பொலீஸ் வந்து என்னை விசாரித்தது...

"நான் தான் சின்னப்பா. சினிமாவில் நடித்திருக்கிறேன்..." என்று சொல்லியும், அவர்கள் நம்பாமல் மிரட்டினர். பின், எனக்கு தெரிந்தவர்களின் நம்பருக்கு போன் செய்து, அவர்கள் என்னைப் பற்றி சொன்ன பின் தான் விட்டனர். நம் பணத்தையும் போட்டு விட்டு, இந்த அவமரியாதையா... என்று, கோபம் வந்துவிட்டது. கணக்கை முடித்து, முழுப் பணத்தையும் எடுத்துக் கொண்டு வந்து விட்டேன்.

இதுவரை, எத்தனையோ படங்கள் தயாரித்து விட்டேன். ஹிந்திப் படங்களும் தயாரிக்கிறேன். ஆனால், யாருக்கும், காசோலை கொடுப்பதில்லை. நேரடி சம்பளம் தான். எனக்கு, வங்கியில் கணக்கு இன்று வரை கிடையாது... என்று, கூறியுள்ளார் சின்னப்ப தேவர்.

# புல்லினுள் சுழலும் இசை



- என். சொக்கன் -

காதலர் தினம் படத்தில் வாலி எழுதி ஏ.ஆர். ரஹ்மான் இசையில் வந்த பாடல் "ரோஜா ரோஜா".

பாடியவர்: உன்னி கிருஷ்ணன்.

இளையவளின் இடை ஒரு நூலகம், படித்திடவா பனி விழும் இரவுகள் ஆயிரம்!

இடைவெளி எதற்கு, சொல் நமக்கு, உன் நாணம் ஒருமுறை விடுமுறை எடுத்தால் என்ன?

"என்னைத் தீண்டக் கூடாது" என வானோடு சொல்லாது வங்கக்கடல், "என்னை ஏந்தக் கூடாது" என கையோடு சொல்லாது புல்லாங்குழல்!

தமிழில் "குழல்" என்ற பெயர்ச் சொல், "குழலுதல்" என்கிற வினைச் சொல்லில் இருந்து வந்தது. இதன் அர்த்தங்கள், சுருள்தல், வளைதல் போன்றவை.

கம்பராமாயணத்தில் சீதையைச் சந்திக்கும் அனுமன், அவளுக்கு நம்பிக்கை வரவேண்டும் என்பதற்காக ராமனைப்பற்றி நிறைய பேசுகிறான், அவரது தோற்றத்தை வர்ணிக்கிறான். அதில் ஒரு பாடல், ராமனின் தலை முடியைப் பற்றியது, "நீண்டு, குழன்று, நெய்த்து, இருண்டு" என்று தொடங்கும்.

அதாவது, ராமனின் தலைமுடி நீண்டது, சுருண்டது, நெய் பூசியது போல் பளபளப்பானது, இருண்டது (கருமையானது)" இப்படித் தொடங்கி இன்னும் நிறைய வர்ணிக்கிறான் அனுமன்.

இங்கே நமக்கு முக்கியம், "குழன்று" என்ற வார்த்தை, "சுழன்று" அல்ல, "குழன்று", அதாவது, சுருண்டு, அல்லது வளைந்து!

இப்படிக் குழன்று வருவதால்தான், தலைமுடிக்கே "குழல்" என்று பெயர் வந்தது. "கட்டோடு குழலாட ஆட" போன்ற பல பாடல்களில் இதைப் பார்த்திருக்கிறோம்.

அது சரி, ஆனால் அதே பெயரை இசைக்கருவியாகிய குழலுக்கும் வைத்தது ஏன்?

ஒன்றல்ல, இரண்டு காரணங்கள் சொல்லலாம்:

முதல் காரணம், வடிவ அமைப்பில் பார்த்தால், குழல் / குழாய் என்பது, ஒரு நீண்ட பட்டை சுருண்டு சுருண்டு அமைந்ததுபோல்தான் தெரியும், சின்ன வயதில் பென்சிலின்மீது நீளப் பட்டைக் காகிதத்தைச் சுற்றி விளையாடியவர்களுக்கு இது நன்றாகத் தெரியும்!

இன்னொரு காரணம், குழலின் ஒரு முனையில் ஊதப்படும் காற்று, உள்ளே வளைந்து ஓடி (அதாவது, குழன்று) வெவ்வேறு துளைகளின் வழியே வெளிவந்து இனிமையான இசையாகக் கேட்கிறது, "வளையாத மூங்கிலில் ராகம் வளைஞ்சு ஓடுதே" என்று பழநிபாரதி எழுதினாற்போல!

"குழல்" சரி, அதென்ன "புல்லாங்குழல்"?

இந்தச் சொல், புல் ஆம் குழல் என்று பிரியும்.


அதாவது, புல்லால் ஆன குழல் என்று பொருள்.

என்னது? புல்லா? அது மூங்கிலால் ஆனதல்லவா?

உண்மைதான். ஆனால், தாவரவியல்ரீதியில் பார்த்தால், மூங்கில் என்பதே மரம் அல்ல, ஒருவகைப் புல்தான், என்ன, கொஞ்சம் பெரிய புல்!

அப்படியானால், குழல்போல இனிமையாகக் கூவும் குயிலைப் "புள்ளாங்குழல்" என்றுகூட நாம் அழைக்கலாமோ?

# நஷ்ட ஈடு!



நியூயோர்க்கிலுள்ள பிரபலமான சென் ஜோசப் மருத்துவமனையில் 41 வயதுள்ள கோலின் பேர்ன்ஸ் என்ற பெண்மணி சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். உடல் வலிக்காக பரிந்துரைக்கப்பட்ட மருந்து மாத்திரைகளை நிர்ணயிக்கப்பட்ட அளவுக்கு அதிகமாக உட்கொண்டதால், 2009ஆம் ஆண்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

சில நாள்கள் சென்றபின், அவர் மாரடைப்பால் இறந்துவிட்டார் என மருத்துவக் குழு அறிவித்துவிட்டது. அவருடைய உடல் உறுப்புகளை தானம் வழங்குவதற்காக குடும்பத்தினரின் அனுமதியை மருத்துவமனை கோரியது. அனுமதி கிடைத்ததும் அறுவைச் சிகிச்சை பிரிவிற்கு அவர் மாற்றப்பட்டார். அறுவைச் சிகிச்சை துவங்குவதற்கு முன்னதாக அவர் திடீரென்று எழுந்து உட்கார்ந்து அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார். மருத்துவமனை மீது நியூயோர்க் பொதுச் சுகாதாரத் துறை வழக்குத் தொடர்ந்து, மூன்று ஆண்டுகளுக்கு மேலாக வழக்கு நடைபெற்றது. இறுதியாக தீர்ப்பு வெளியானது. 22 ஆயிரம் டொலர் மருத்துவமனை செலுத்தவேண்டுமென தீர்ப்பளித்தது.

# இரும்பை அரிக்கும் பானம்!

ஈ லியூ சட்ஸை ஒரு சீனர். அறிவாளி, ஞானி, வைத்தியம் தெரிந்தவர். வானத்திலே நட்சத்திரங்களைக் கொண்டு காலம் கணிக்கத் தெரிந்தவர். இந்தமாதிரி "நடமாடும் புத்தகசாலை" யாயிருந்த இவர் ஒரு மகா பராக்கிரமசாலிக்கு உதவியாளராக ஏற்கப்பட்டார்.

அந்தப் பராக்கிரமசாலியின் பெயர் ஜெங்கிஸ்கான். திக்கு திசைகளைப் பற்றிக் கவலையின்றி நாடு நாடாக ஓடிப் போர் புரிந்தவன் ஜெங்கிஸ்கான். மொங்கோல் வம்சத்தினன். அவன் பேரப்பிள்ளைக்குப் பேரப்பிள்ளையான பாபர் இந்தியாவின் மீது படையெடுத்து இந்தியாவில் முகலாய வம்சத்தின் முதல் அரசனாக ஆனார் (மொங்கோல் என்ற பதம்தான் "மொகல்" என்று சொல்லப்பட்டு அதுவே சரியான வார்த்தையாக இப்போது மதிக்கப்படுகிறது.)

கிழக்கே சீனாவிலிருந்து மேற்கே மத்திய ஐரோப்பாவரை மங்கோலிய சாம்ராஜ்யத்தை நிறுவினவன் இந்த ஜெங்கிஸ்கான்தான். ஈ லியூ சட்ஸையின் அறிவு மிகுதிக்காகவே ஜெங்கிஸ்கான் எப்போதும் அவரைத் தன் பக்கத்திலேயே வைத்துக் கொண்டிருந்தான்.

ஜெங்கிஸ்கானுக்குப் பிறகு பட்டத்துக்கு வந்தான் ஓகோதை என்ற அவனது மகன். அவன் காலத்திலும் மிக முக்கியமான மந்திரிகளில் ஒருவராய் இருந்தார் ஈ லியூ. இந்த மன்னனுக்கு குடி என்றால் மகாப் பைத்தியம். பாரசீகத்திலிருந்தும் கிரேக்க நாட்டிலிருந்தும் ஜாடி ஜாடியாக நேர்த்தியான மது வர்க்கங்களை வரவழைத்து சதா குடிபோதையிலேயே திளைத்திருந்தான் மன்னன். இந்தத் துர்ப்பழக்கத்தால் அவன் அற்பாயுசில் சாகாதிருக்க வேண்டும் என்று விரும்பினார் ஈ லியூ சட்ஸை. ஒருநாள் ஒரு மது ஜாடியை எடுத்துக் கொண்டு மன்னரிடம் போனார். இரும்பால் செய்யப்பட்டிருந்த அந்த ஜாடியில் மது பட்டுப் பட்டு அது கரைந்து போயிருந்தது.

"மன்னா! இந்த இரும்பையே இப்படி இந்த மது அரித்துத் தின்றுள்ளது என்றால் மனித சரீரமாகிய உன் உடலை எவ்வளவு சீக்கிரம் அரித்துக் கரைத்துவிடும் என்பதைத் தெரிந்து கொள். இதுவே நிதர்சன உதாரணம்" என்று சட்ஸை கூறினாராம்.

மன்னனுக்குப் புத்தி வந்து, அன்று முதல் அளவாக மதுவருந்த ஆரம்பித்தாராம்.

('சக்தி களஞ்சியம்' நூலில் சங்கு சுப்பிரமணியன்)

# ஔவை எத்தனை ஔவையடி!

- வ.கோபு -

ஔவையைப் பற்றி எதுவும் நூல்கள் இல்லையே என்று பலரிடமும் புலம்பியிருக்கிறேன். இலக்கியக் களஞ்சியம் திரு. கண்ணன் அவர்கள் எழுதியிருக்கும் கட்டுரையை சமீபத்தில் கண்டேன். கண்ணன், பல்லாயிரம் கர்நாடக இசைப் பாடல்களின் முதல் வரிகளையும், ராகத்தையும் புத்தகமாக வெளியிட்டவர். அவரது கட்டுரையிலிருந்து...

**ஔவை : பெண் தாய்;**
**தெய்வப்பெண்;**
**துறவு பூண்ட பெண்.**

சங்க கால ஔவையார்:

புறநானூறு, அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, திருவள்ளுவ மாலை. இவர் சமகாலத்து மனிதர்களையும், அரசர்களையும் பற்றி பாடியுள்ளார்.

ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி ஔவையார்:

1. "நல்லம்பர்" நின்னாட்டுடைத்து நல்ல தமிழ்," என்றவர்.

2. இவளைக் குறித்து பல கதைகள் உண்டு; நிறைய தனிப்பாடல்கள் இனிய செய்யுட்கள் புராணமாய் மருவிய கவிதைகள் பழைய வரலாற்று சம்பவங்கள் இந்த ஔவையின் மேல் குவிந்துள்ளன.

சுமார் கி.பி. 1120 கால ஔவையார்:

கொன்றைவேந்தன், ஆத்திசூடி, மூதுரை, நல்வழி இயற்றியவர். அகளங்கன் (என்ற விக்கிரம சோழன்) காலத்திலும் அவனுக்கு பின்னும் வாழ்ந்தவர்.

பல தெய்வங்களோடும், சான்றோரோடும், புலவ ரோடும் இவளை பிணைத்து பொய்யான, குறும்பான, தவறான, ஒதுக்கக்கூடிய கதைகள் உள்ளன. கிடக்கட்டும்! ரசமும் சிரிப்பும் யதார்த்தமும் எள்ளலும் கிண்டலும் எளிமையும் புலமையும் நயமுடை நுட்பமும் இவளது கவிதையில் கண்ணோடு இமையாக, மண்ணோடு மழையாக கலந்து காணலாம்.

இக்கால ஔவையார் செய்தவை யாவும் அறநூல்களே.

பதினான்காம் நூற்றாண்டின் ஔவையார்:

இரண்டு நூல் செய்துள்ளார் - 1. ஞானக்குறள் 2. விநாயகர் அகவல். பின்னது தோத்திர நூல் - பரவலாக அறியப்பட்டுள்ளது. மரபு வழி சைவர்கள் இல்லங்களில் நாள்தோறும் பாராயணம் செய்யப்படுவது.



முந்தியது சாத்திர நூல் "அவ்வைக்குறள்" என்றும் சொல்லப்படுவது - 31 அதிகாரம், 310 பாடல்கள்.

உலக வாழ்க்கையில் சுதந்திரமாக இருந்த ஔவையார், ஆன்ம சுதந்திரத்தை தம் பாடல்களில் வலியுறுத்தினார். பல தனிப்பாடல்களும் வழக்கிலுள்ளன. பக்தி இயக்கத்தின் செல்வாக்கு இவரிடம் இருக்கக் காணலாம்.

"காதல் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்" (இல்லறம்) என்ற வாக்கு இவருடையது.

பதினேழாம் நூற்றாண்டின் ஔவையார்:

தனிப்பாடல்கள்.

பதினெட்டாம் நூற்றாண்டின் ஔவையார்:

பந்தனந்தூதி இயற்றியவர்.

பொதுவாக எல்லா ஔவைகளுமே ஓரிடத்தில் நிலையாக வாழாது, எல்லா இடங்கட்கும் சுற்றிக்கொண்டிருந்தவர்கள். இந்த இயல்பு பற்றிதான் போலும், ஒருவருக்கேனும் தம் இயற்பெயர் விளங்காது "ஔவை" என்ற பலர் அறி சுட்டாக இருந்து வருகிறது.

மக்களின் அன்புக்கும் மரியாதைக்கும் பாத்திரமாய் இருந்த மூதாட்டியாதலால் ஔவையார்களை பற்றி ஏராளமான கதைகளும், சம்பவங்களும் எழுந்துள்ளன; எழுதப்பட்டுள்ளன; பெரும்பாலும் புனைவே; பொருந்தாதனவே.

இவரைப் பற்றிய நூல்கள்:

1. விநோத ரஸ மஞ்சரி
2. அவ்வை சரித்திரம்
3. புலவர் சரித்திர சார சங்கிரகம்
4. தமிழ் நாவலர் சரிதை
5. அவ்வையார்: அனவரத விநாயகம் பிள்ளை, 1919.
6. சைவ இலக்கிய வரலாறு: சு. துரைசாமிப்பிள்ளை 1958, அண்ணாமலை பல்கலைக்கழகம்.

முதல் நான்கும் செவிவழி மரபு, வரலாறும் இல்லை, வாழ்க்கை சரித்திரமும் இல்லை. 5, 6 சிறந்த ஆய்வு நூல்கள்.

## மாற்றம் வேண்டும் இது மக்கள் முரசு

# ஜாதிப்புறக்கணிப்பால் அழிந்துவரும் புராதனக் கலைகள்

இன்றும் ஜாதி என்கின்ற பெயரில் பல கலைகள் எமது சமூகத்தைவிட்டு விலகிப்போய்விட்டது. அறிவியல் ரீதியாக பல வழிகளில் முன்னேறி நாகரிக வளர்ச்சியால் பல திசை முகங்கள் தெரிந்தும் கூட ஜாதிப்பாகு பாடு இதுவரை எம்மை விட்டு விலகவில்லை. தற்போது எமது பாரம்பரிய கலையம்சங்களை இது முற்றாக அழித்து வருகின்றது. வேற்று இனங்கள், வேற்று நாடுகள் தமது பாரம்பரிய கலையம்சங் களிற்கு புத்துணர்வூட்டி வருகின்ற னர். ஆனால் நாமோ எமது செளிமை மிக்க புராதனக் கலைகளை அழிய விட்டு வருகின்றோம். சுவைமிக்க எமது பண்பாட்டுக் கலைகள் இவ் வாறு அழிந்துகொண்டு போவதற்கு ஒரு துருவத்தில் நாமே காரணம். இதற்கு நாம் இனியாவது இடமளிக் கக்கூடாது. எத்தனை இசைக்கருவி கள் எம்மிடம் இருந்தது... எத்தனை கலைகள் எம்மிடம் இருந்தது "அதன் மூலம் வரும் நாதங்கள் எனிவரும் எமது சந்ததிக்குக் கேட்காதா?....என நினைக்கும் போது வேதனைதான் மிச்சமாகின்றது. இது தொடர்பாக சிந்தித்து இதை வளர்க்க முன்வர வேண்டும் என்பதே இக்கட்டுரையின் ஆதங்கமாகும்.

இன்று பெரும்பாலான இடங்களில் இடம்பெறும் இறுதிச்சடங்குகளில் பறை வாத்தியம் இசைக்கும் நடை முறை அற்றுப்போய்விட்டது. பறை யடித்து உயிர்பறிபோன செய்தியை ஊருக்கு தெரிவிக்கும் பாரம்பரியம் இன்று நடைமுறையில் இல்லை. இதறகு மாறாக மேலைத்தேச பாணட் வாத்தி யக்கருவிகள் இசைக்கும் வழக்கம் உருவாகியுள்ளது. இதில் உள்ள நன்மைதீமைகள் ஒருபுறமிருக்க இந்தப் பறையடிக்கும் தொழிலை நம்பியிருக்கும் கலைஞர்களின் நிலை யென்ன? என்பது தொடர்பாக நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். பறை யடிப்பதற்கு இன்றைய சந்ததி தயாராக இல்லையென அவர்களைக் குற்றம் சாட்டும் நாம் ஏன் அவர்கள் பின்வாங்கு கின்றார்கள் என்பது தொடர்பாக சிந்தித்தோமானால் இதற்கான தீர்வு கிடடும். முன்னேற்றங்களிற்கு அப்பால் எமது சமூகத்திலுள்ள அர்த்தமற்ற அந்தஸ்துக்கள் பலரின் முயற்சி களிற்குத் தடையாக இருக்கின்றன. இதனை முக்கியமாக குடாநாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். அன்று இந்திய தேசத்திலிருந்த நடிகர் சிவாஜி கணேசனே எம் நாட்டுக் கலைஞர் ஒருவரை தன்னை விட ஆற்றலுள்ளவர் என வாழ்த்தி யிருக்கின்றார். பல மணிநேரத்திற்கு குரலையும் நடிப்பையும் ஒரேநேரத் தில் ஒரேமேடையில் இவர்போல் தன்னால் கொண்டுவரமுடியாது இப்படிப்பட்ட சாதனைக் கலைஞன் யார் தெரியுமா?.. அவர் தான





நாட்டுக்கூத்துப் பிரபல கலைஞர் கலாநிதி வைரமுத்து அவர்கள். இவர் இறைவனடி சேரும்போது இறுதியாகக் கூறிய வார்த்தை மிக வும் வேதனைக்குரியது. "மீண்டு மொரு பிறப்பு எனக்கு வேண்டும், அதில் எனது கூத்துக்கலை தொடர வேண்டும், ஆனால் இந்த யாழ். மண்ணில் பிறப்பெடுக்கக்கூடாது. போதும் ஜாதி என்ற கொடுமையால் நான்பட்ட துன்பம். இவ்வாறன கலைஞர்களின் வேதனையைத்தான் எமது யாழ் மண் சம்பாதித்துள்ளது. இப்படிப்பட்ட உலகப் புழ்பெற்ற கலைஞனிற்கு எமது யாழ். பலகலைக்கழகம் கெளரவ கலாநிதிப் பட்டத்தை ஜாதி என்கின்ற பெயரில் கொடுக்காது பலகாலம் இழுத்தடித்தது.

இது ஒருபுறமிருக்க எம்மிடமுள்ள கலைகள் எம்மிடமுள்ள இசைக் கருவிகளை நாமே மறந்து விட்டோம். எத்தனை கருவிகள் எம்மிடம் இருந் தது தெரியுமா?.... வீணை, கோட்டு வாத்தியம், புல்லாங்குழல். நாதஸ் வரம், வயலின், மிருதங்கம், தவில், கஞ்சிரா, யாழ், தம்புரா, வயலின், கிளாரினெட், பறைமேளம், உடுக்கு, ஜால்ரா, குழித்தாளம், ஜலதரங்கம் அரங்கிசையில் வாசிக்கப்படும் முக் கிய கருவிகள் இவை இப்படிப்பட்ட கருவிக்கலைகள் எம்மை விட்டு அழிந்து போவது ஒரு புறமிருக்க ஆற்றுகைக்கலைகள் பலவும் எம்மை விட்டு அழிந்து போகின்றன. உதா ரணமாக நாட்டுக் கூத்துக்கள், கிரா மிய நடனங்களான, கோலாட்டம், கும்மி, மல்லாட்டம், குதிரையாட்டம், போன்றனவும் எம்மை விட்டு அழிந்து போகின் றன.

இசைக் கல்லூரிகளிலுள்ள இசைக் கலைஞர் கள், சமுகத்துப் பெரியார்கள், இலக்கியவாதிகள், அரசியல்வாதிகள் அனைவரும் இது தொடர்பாக சிந்தித்து செயற்பட வேண்டும். மக்கள் நாட்டம் தற்போது திசை மாறிவிட்டன. நவ நாகரீகம் எனும் பெயரில் வேற்றுக் கலாசரத்தைத்தேடி ஓடியகாலம் போய் மீண்டும் பழமைப் பண்பம் சங்களை விரும்பும் ஓர் புதிய போக்கு தலைதூக்கியுள் ளது. இதனை சாதகமாகப் பயன்படுத்தி இக் கலைகளை மீண்டும் ஏன் புதுப்பொலிவு பெறவைக்க, முடியாது. ஆகவே இது தொடர்பாக உள்ள தடைகளைப் பற்றிச் சிநதிப்பேர்ம். இவை பற்றி பல துருவங்களில சிந்தித்து அது தொடர்பான சில வாழ்வியல் மாற்றங் கள்கொண்டு வரும்போது தான் மீண்டும் இக்கலைகளை புத்து யிர்ப்பு ஊட்ட முடியும். இதில் முக்கிய இடம்பெறுவது இந்த ஜாதி. தமிழ் இனத்தின் ஓர் சாபக்கேடாக எமது சந்ததிக்குள் புகுந்தது இந்த ஜாதி இதைப்புகவைத்தவர்கள் யார் எனச் சிந்தித்தோமானால் பல பெரிய வர்கள் கூட இதில் குற்றவாளியா வார்கள் ஆகின்றனர். அருமையான கூத்து மரபை அரங்கேற்ற பல தடை கள் விதித்தார்கள். அதற்காக ஜாதி யைப் பிரித்தார்கள். சிறந்த தாளக் கட்டுமானங்களைக் கொண்ட பறை மேளத்தினை வாசிக்கும் சந்ததி மறைந்து வருகினறது. புதிய சந்ததிகள் சமூக கெளரவங்களிற்காக இக்கலையைக் கைவிடுகின்றனர். பேராசிரியர் வித்தி யானந்தன் நாட்டுக்கூத் தினை பல் கலைக்கழகத் தில் பாடமாக்கி அதன் மகிமை களை உலகறிய வைத்தது போன்று ஏன் பாரம்பரிய கலைக்கல்லூரிகள் உருவாக்கப்பட முடியாது. இது அரசியல்வாதிகளின் முயற்சியால் ஏன் அங்கீகரிக்க முடி யாது. சிந்தித்துப் பார்த்தால் அனைத்தையும் அரங்கேற்ற முடியும் ஆனால் நாம் இது தொடர் பாக சிந்திப்ப தில்லை. நிச்சய மாக சமூகக் குழுசார்ந்து இதை வளர்த் தொடுக்க முடி யாது. ஏனெனில் பல தடைகள் அதல் உள்ளது. ஜாதிப்பாகுபாடு தொழில் வாய்ப்பு அற்ற தன்மை என பல உள் ளன. இதற்கப்பால் இக்கலைகளை வளர்க்க எவரும் முன்வரமாட்டார் கள். ஆகவே நிறுவனம் சார்ந்த ரீதி யில் இதனை வளர்க்க பல முயற்சி களை மேற்கொள்ளவேண்டும். அத்து டன் அந்நிறுவனங்களில் இக்கலை யினைக் கற்க வரும் மாணவர்க ளிற்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற பட்டத்துறைக் கற்கையாகவும் இருப்ப துடன் அதற்கான வேலைவாய்ப்புக் கள் உறுதிப்படுத்தப்பட்டதாகவும் அது அமையவேண்டும். இல்லையேல் மாணவர்கள் பாடத்துறையினைத் தெரிந்தெடுக்கமாட்டார்கள் இவ்வாறான செழுமைமிக்ககலைகள் எம்மைவிட்டு அழியாதிருக்க ஏது வழி?... சிந்திப்போம் செயற்படுவோம்.

- வெண்கட்டியன்




## புதிர்ப்போட்டி 56

**அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.**

புதிர்ப்போட்டி 55 இற்குரிய விடைகள் அனுப்பவேண்டிய இறுதித் திகதி 31.08.2013

பின்வரும் எண்தொடர்கள் ஒவ்வொன்றிலும் வரவேண்டிய இலக்கத்தை உரிய இடத்தில் எழுதுக.




03.
9 (45) 81
8 (36) 64
10 ( ) –

04.

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | 5 | 9 | 14 | |
| 4 | 8 | 13 | 19 | |

05. 5 41 149 329 ——

06. 4 5 7 . 11 19 ——

07.
8 10 6 12
9 11 7 13
14 11 19 ---

08.
12 16 10 4
20 22 16 5
32 30 24 –

09. 1 x 1, 3 x 2. ........... 27 x 8. ...........

10. 115, 100, 99, ......... 84, ......... 70

மாணவர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்! புதிர்ப்போட்டி விடைகளுடன் உங்களது போட்டோப் பிரதி ஒன்றையும் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

### புதிர்ப்போட்டி இற்கான விடை எழுதி பரிசு பெறுவோர்



பெயர் :- வி.நிலேக்கா
பாடசாலை:- யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

### விண்ணப்பதாரரின் விபரம்

மாணவர் முழுப் பெயர் :- ..............................

பாடசாலையின் பெயர் ..............................

தரம் :- :- ..............................

தொலைபேசி இல.:- ..............................

முகவரி :- ..............................

..............................



### சரியான விடை எழுதி பாராட்டுப்பெறுபவர்கள் விபரம்

பெயர் :- க.கோமராஜ்
பாடசாலை:- யா/ நெடுந்தீவு சீக்கிரியாம்பள்ளம்

பெயர் :- க.கேஜினா
பாடசாலை:- யா/ நெடுந்தீவு சீக்கிரியாம்பள்ளம்

பெயர் :- க.யறீனா
பாடசாலை:- யா/ நெடுந்தீவு சீக்கிரியாம்பள்ளம்

பெயர் :- ம.யோதீஸ்வரன்
பாடசால்ல:- யா/ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்.

பெயர் :- யோ.தனுசன்
பாடசாலை:- யா/ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்.

பெயர் :- க.விதுசன்
பாடசாலை:- யா/ உடுப்பிட்டி அ.மி. கல்லூரி.

### அனுப்பவேண்டிய முகவரி

புதிர்ப்போட்டி இல....
தினமுரசு
இல .373 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

# நீதியான தேர்தல் வடக்கில் நடக்கும்

## –தேர்தல்கள் ஆணையாளர்

வடமாகாண சபைத் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் தேர தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய நேற்றுமுன்தினம் வவுனியா மாவட்டத்தேர்தல் அலுவலகத்திற்கு விஜயம் மேற்கொண்டார்.

வவுனியாவில் தேர்தல் தொடர்பில் உதவித்தேர்தல் ஆணையாளரிடம் கேட்டறிந்து கொண்ட அவர் வவுனியா மாவட்டத்தேர்தல் நிலைமை கள் தொடர்பிலும் கலந்துரை யாடியிருந்தார். இதனையடுத்து ஊடகவியலாளர்களுக்கு கருத் துத் தெரிவித்த அவர்,

சுதந்திரமானதும் நீதியான துமான தேர்தல் இடம்பெறும் என்பதில் எவ்வித ஐயப்பாடுக ளும் இல்லை. அவ்வாறு நடை பெறுவதற்கு அனைத்து தரப் பினரும் தங்களது ஒத்துழைப் புக்களை வழங்க வேண்டும். இராணுவம் தேர்தல் செயற்பாடு களைக் குழப்புவதாகத் தெரிவிக கப்படுவதில் உண்மையில்லை. அவ்வாறான முறைப்பாடுகள் சிவில் அமைப்புகளிடம் இருந்து இதுவரை கிடைக்கவில்லை.

எனவே ஆதாரமற்ற அவ்வா றான முறைப்பாடுகள் போலி யானவையாகவுள்ளன. இதே வேளை, தேர்தல் வன்முறைச் சம்பவம் தொடர்பாக பொலி ஸில் பாரிய முறைப்பாடுகள் கிடைக்கவில்லை. அபேட்சகர் களுக்கு ஏற்படும் குறைபாடுகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

எனினும், பொலிஸார் வன் முறைச் சம்பவங்கள் இடம்பெறு கின்றனவா என்பதில் அவ தானமாக உள்ளனர். எனினும் இதுவரை அவ்வாறான பாரி யளவான சம்பவங்கள் இடம் பெறவில்லை. அத்துடன் அபேட் சகர்கள் எவரும் தேர்தல் சட்ட திட்டங்களுக்கு அமைவாக எங்கும் சென்று தமது பிரசார செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு முழு சுதந்திரமும் வழங்கப்பட் டுள்ளது என்றார்.

# சிறுவர் கழகத்தின் நிறைவு விழா



(யாழ்ப்பாணம்)

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் ஏற்பாட்டில் சிறுவர் கழகத்தின் நான்காம் வருட நிறைவையொட்டி நாவலடி அரியாலை கிழக்கு உதயநிலா முன்பள்ளி மண்டபத்தில் திருமதி சு.யாழினி தலைமையில் விசேட நிகழ்வு நடைபெற்றது, இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி. டி.பி யின் நல்லூர் பிரதேச அமைப்பாளருமாகிய அம்பலம் இரவீந்திரதாசன் கலந்துகொண்டு சிறப்பித்தார். நல்லூர் உதவிப்பிரதேச செயலர் சுபாஜினி , நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் வ.ஸ்ரீகணேசா மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சந்தைக்குள் மதுவிற்பனை கைதானார் வயோதிபர்

(புத்தூர்)

போயா விடுமுறை நாளில் விற்பனைக் காக மறைத்து வைக்கப்பட்டிருந்த 9 சாராயப்போத்தல்களுடன் ஒருவரைக்கைது செய்துள்ளதாக அச்சுவேலி குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் அண்மையில் இடம்பெற் றுள்ளது. புத்தூர் வடக்கைச் சேர்ந்த 58 வயதுடைய (அருணாசலம்-குணசீலம்) என்ற வயோதிபர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட் டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவரு கையில் போயா விடுமுறையன்று மது பான நிலையங்கள் மூடப்பட்டிருந்த நிலை யில் அதிக விலைக்கு விற்பனை செய்யும் நோக்கில் புத்தூர் பொதுச்சந்தைக்குள் சாராயத்தை ஒழித்து வைத்து விற்பனை செய்து கொண்டிருந்த வேளை அவ்விடத் துக்கு சிவில் உடையில் சென்ற பொலி ஸாருக்கு விற்பனை செய்ய முற்படுகை யிலேயே இவர்கையும் மெய்யுமாக பிடி பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபருக்கு எதிராக வழக்கு பதிவுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (15)

# முதியோருக்கான செலவுமதிப்பீடு அனுப்பிவைக்குமாறு அறிவுறுத்து

(கிளிநொச்சி)

சமூக சேவைகள் அமைச்சின் முதியோர்க ளுக்கான தேசிய செயலகம் இவ் வருடம் ஒக் ரோபர் முதலாம் திகதி சர்வதேச முதியோர் தினத்தை கொண்டாடுவதற்குரிய செலவு மதிப் பீட்டை அனுப்பி வைக்குமாறு வட மாகாணத் திலுள்ள பிரதேச செயலர்களைக் கோரியுள்ளது

முந்திக் கிடைக்கும் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தலா 10 000 ரூபா வீதம் ஒதுக்கீடு வழங்கப்படுமென அமைச்சி னால் அனுப்பப்பட்ட கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

சமூக சேவைகள் அதிகாரிகள், முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்கள் மூலமாக மதிப்பீட்டைத் தயாரிக்கும் பணிகளை தற்போது பிரதேச செயலர்கள் மேற்கொண்டுள்ளனர்.

அதேவேளை அமைச்சினால் முதியோர்கள் குறித்து வெளியிடப்படவுள்ள புத்தகத்திற்கும் முதியோர்களிடமிருந்து ஆக்கங்களை அனுப்பி வைக்குமாறும் அமைச்சு கடிதம் மூலமாகக் கோரி யுள்ளது. பிரதேச செயலர்கள் ஆக்கங்களைக் கோரும் பணிகளைத் தற்போது மேற்கொண்டுள் ளனர். (90)



துளோறியல் ஜப்னா பவுன்டேசன் நிறுவனத்தினரால் நடாத்தப்பட்ட யுத்தத்தினால் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கான ஆங்கிலக் கற்கை நெறிக்கான புலமைப்பரிசில் வழங்கும் ஆரம்ப நிகழ்வு இணுவில் இந்துக்கல்லூரியில் இடம் பெற்றபோது விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் இந்தியத்துணைத்தூதர் மகாலிங்கத்திடம் இருந்து மாணவி ஒருவர் புலமைப்பரிசில் பெறுவதையும் காணலாம்.

# வாரம் ஒரு காரம்



## இனங்கள் கோரும் உரிமை எது?

வடமாகாணசபைத் தேர்தல் முனைப்புப் பெற்று வரும் இந்த வேளையில் தமிழர்களின் உரிமை என்று வேட்பாளர்கள் பிரசாரத்தில் ஏதேதோ முழங்கித் தள்ளுகின்றார்கள். அந்த அடிப்படையில் விடுதலை கோரும் ஓர் இனம் தங்களது உரிமைகள் என்ன? என்பது தொடர்பாக தெளிவு பெற வேண்டியது இன்றைய கட்டாயமாகும்.

உலக மகா யுத்தங்களுக்குப் பின் யுத்த இழப்புக்களில் இருந்து மனித இனத்திற்கு விடுதலை வேண்டும் என்பதற்காகவும், இனியொரு உலக யுத்தம் ஏற்படாமல் தடுப்பதற்காகவும், ஐக்கிய நாடுகள் சபை உருவாக் கப்பட்டு மனித உரிமைகளின் சாசனங்கள் முன் வைக்கப்பட்டன. இதில் வலுவாக்கங்களும் காலத்துக்குக்காலம் மேற்கொள்ளப்பட்டன. அந்த வகை யில் ஐ.நா.வில் உரிமைகள் தொடர்பாக 1966ஆம் ஆண்டு ஒரு வலுவாக்கம் செய்யப்பட்டது. அதாவது உரிமைகள் இரண்டாகப் பிரிக்கப்பட்டு அவை உடன் நடைமுறைக்கும் வந்தது. அந்த வகையில் ஒரு நாட்டின் இனத் திற்கு அல்லது தனி நபருக்கு உரித்துடையதாக உருவாக்கப்பட்ட இரண்டு உரிமைகளாவன.

1. சமூக பொருளாதார பண்பாட்டு உரிமைகள்.
2. அரசியல் குடியியல் உரிமைகள்.

பிரஜைகளுக்கு அத்தியாவசியமாகத்தேவைப்படும் உரிமைகளாக முதலா வது சமூக பொருளாதார உரிமைகள் முன்வைக்கப்படுகிறது. இது மறுக்கப் படும் சந்தர்ப்பத்தில், ஐ.நா. சபை குறித்த தன் பிரதிநிதிகள் மூலம் பல வழிகளில் அந்த அரசுகளுக்கு உணர்த்தி வருகின்றது. அதன் ஓர் அங்கம் தான் தற்போது நவநீதம்பிள்ளை இலங்கைக்கு வருதல். இவ்வாறு சமூக பொருளாதார உரிமைகளை வலியுறுத்துகின்ற ஐ.நா. ஒரு நாட்டு மக்களின் அரசியல் குடியியல் உரிமைகளில் பெரிதாக தலையிடவில்லை. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. ஒன்று சமூக பொருளாதார கலாசார உரிமைகள் ஒரு நாட்டில் பாதுகாக்கின்ற வகையில் நடைமுறைக்கு வருகின்ற போது, அந் நாட்டில் அனைத்து இனங்கள் இடையேயும் ஓர் சம தர்மம் நிலவும் அந்தக்கட்டத்தில் அந் நாட்டில் அரசியல் உரிமைகளைப் பற்றிப்பேச வேண் டிய தேவை ஏற்படாது. அல்லது சுயமாக அது பாதுகாக்கப்படும். இரண் டாவது ஒருநாட்டின் அரசியல் உரிமை என்பது அந் நாட்டின் அரசியல் யாப்போடும். இறைமையோடும் தொடர்புபட்டது. இது தொடர்பான தீர்மா னங்களை எடுப்பது கட்சி சார் அரசியலால் வலுப்பெற்ற அந்தந்த நாட்டு அரசுகளேயாகும்.

ஆகவே தற்போதைய அரசியல் அரங்கில் மாகாண சபைத் தேர்தல் பிரச்சாரம் என்கின்ற பெயரில் விளக்கமற்ற முன் வைப்புக்கள் பல அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. ஒரு கட்சி சமூக அபிவிருத்திகள் ஊடாக அரசியல் தீர்வினை நோக்கி பயணிக்க, மறு கட்சி அதை எதிர்த்து அரசியல் தீர்வுதான் முதன்மை பெற வேண்டும். பின்புதான் அபிவிருத்தி என்கின்றார்கள். இது ஒருபுறம் இருக்க தமிழர்களின் உரிமைகள் பறிபோகிறது... பறிபோகிறது என்கின்றார்கள்.

எது உரிமை...? எதை இவர்கள் உரிமை என்கின்றார்கள்? எந்த உரிமை களைக் காக்க அவர்கள் தீர்வுகளை முன் வைத்தார்கள்? தமிழ் மக்களின் எதிர்காலத்தைப் பாதிக்கும் வீறாப்புத் தமிழ்த் தேசியம் பேசுவது போலவே இதுவும் அமைகிறது புரியவில்லையா?... தற்போதைய அரசியலில் பேரின வாத சக்திகள் மத்தியில் தமிழ்த்தேசியம் பேசுவது தான் தமிழர்களுக்கு அழி வாகும் என்பதை தெரிந்தும் கூட, அடுத்து வரும் நாடாளுமன்றத்தேர்தலில் வெற்றிபெற தமிழ்த்தேசியம் வேண்டும் என்கின்ற சுயலாப அரசியலில் சிந்திப்பவர்களுக்கு எங்கே இந்த அடிப்படை உரிமைகள் புரியப்போகின் றது?

ஒன்றை மக்கள் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். எங்களுடைய சிந்தனைகளில் மாற்றம் வரும் வரை எங்களை தங்களின் சுயலாப அரசிய லுக்காக இவ்வாறான கட்சிகள் பயன்படுத்திக் கொண்டேயிருக்கும். உலகளா விய அரசியலை உற்று நோக்குகின்ற பார்வை தற்போது வலுப்பெறத் தொடங்கி விட்டது. ஆனால் நாமோ, இன்றும் உசுப்பேத்தும் வரிகளுக் குத்தான் உயிரோட்டம் கொடுக்கின்றோம். இது தவறு. இறந்த போராளிகள் செய்த தியாகங்கள் மகிமைப்படுத்தப்பட வேண்டியவை. தமிழரசுக் கட்சியோ தமிழ்க் கூட்டமைப்போ மக்களுக்காக உயிர்த்தியாகத்திற்கோ சொந்த இழப்புகளுக்கோ தயாராக இருந்தவர்கள் அல்ல. போராளிகள் தியாகிகள் பெயர்களைச் சொல்லி இவர்கள் வாழ்கின்றார்கள். இதை மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

அன்று விடுதலைப் புலிகளை அழித்தார்கள் இன்று தமிழ் மக்களை அழிக்கின்றார்கள் இந்த உண்மை எப்போது தமிழ் மக்களிற்குத் தெரிகின் றதோ அன்றுதான் தமிழர் களிற்கான தீர்வு எட்டும்.

– வெண்கட்டியன

# இலங்கையில் தனது செயற்பாட்டை நிறுத்திக் கொண்டது பொன்டேரா

அசாதாரண சூழ்நிலை காரணமாக இலங்கையுடனான கூட்டுறவு நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கத் தீர்மானித்துள்ளதாக நியூசிலாந்தின் பொன்டேரா பால்மா உற்பத்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பொன்டேரா உற்பத்திகளுக்கு தடை விதித்து கம்பகா மாவட்ட நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பொன்டேரா உற்பத்தி பால்மாவின் டி.சி.டி எனப்படும் இரசாயன பதார்த்தம் உள்ளதாக எழுந்துள்ள சர்ச்சையை அடுத்தே இலங்கையில் இந்நிலை ஏற்பட்டுள்ளது.

தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளமை சிறந்தது. 755 சேவையாளர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள எமது பண்ணைகள் மற்றும் அலுவலகங்களை மூடியுள்ளோம். சேவையாளர்களை வீட்டில் இருக்குமாறு கூறியுள்ளோம்." இவ்வாறு பொன்டேரா நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி தியோ ஸ்பிரிங்ஸ் தெரிவித்துள்ளார்.

"அண்மைய நிகழ்வுகளின் மத்தியிலும் இக்கட்டான நிலையில் தினசரி நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தோம். பிரச்சினை தீர்க்கப்பட வேண்டிய தேவை உள்ளது" என பொன்டேரா நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி தியோ ஸ்பிரிங்ஸ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

# மாத்தளை மனித எச்சங்கள் சீனாவிற்கு அனுப்பப்பட்டன

(கொழும்பு)

மாத்தளை பாரிய மனிதப் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட எச்சங்கள் சீனாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த மனித எச்சங்கள் எந்தக் காலத்திற்கு உரியவை என்று அறிந்து கொள்வதற்காக சீனாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சீனாவின் பீஜிங் பல்கலைக்கழக விஞ்ஞான பீடாத்திற்கே இவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.மாத்தளை வைத்திய சாலை வளாகத்தில் பாரியளவில் மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டிருந்தன.

இவை 1988-89 கிளர்ச்சியில் ஈடுபட்ட ஜே.வி.பி உறுப்பினர்களது சடலங்கள் என அந்தக் கட்சி குற்றம் சுமத்தி வருகின்றது.

எனினும் இந்த எச்சங்கள் எந்தக் காலத்திற்குரியவை என்று துல்லியமாக கண்டறியும் நோக்கிலேயே அவை சீனாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கு முன்னர், குறித்த மனித எச்சங்கள் 88-89ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரியவை என களனி பல்கலைக்கழகம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொன்டேராவை புதைப்போம்

(கொழும்பு)

புலி பயங்கரவாதத்தை நாட்டிலிருந்து விரட்டியடித்தது போல பொன்டேராவையும் புதைப்போம் என தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

பியகமவில் பொன்டேரா நிறுவனத்திற்கு முன்பாகநேற்று முன்தினம் நடாத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போதே அக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸ்ஸமில் இவ்வாறு தெரிவித்தார்.

பயங்கரவாதத்தை நாட்டிலிருந்து விரட்டியடித்தது போல பொன்டேராவையும் விரட்டியடிப்போம். இது எமது நாட்டிற்கும் எமக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# ஈழநேருவை நாடுகடத்த இடைக்காலத்தடை விதிப்பு

இலங்கைத் தமிழரான ஈழ நேருவை இலங்கைக்கு நாடு கடத்த சென்னை உயர்நீதிமன்றம் இடைக்கால தடை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

இலங்கை அகதிகளான செந்துாரன், ஈழ நேரு, சௌந்தரராசன் ஆகியோரை இலங்கைக்கு நாடு கடத்த இந்திய மத்திய அரசு உத்தரவு பிறப்பித்திருந்தது. இதற்கு தமிழகத்தில் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் ஈழநேருவின் மனைவி, இது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்தார். அம்மனுவில், ஈழநேருவை இலங்கைக்கு அனுப்பினால் உயிருக்கு ஆபத்து இருக்கிறது. அதனால் அவரை இலங்கைக்கு அனுப்புவதற்கு தடை விதிக்க வேண்டும் என்று கோரியிருந்தார்.

இம்மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில், மனுவை பரிசீலனை செய்த நீதிபதி, ஈழநேருவை இலங்கைக்கு அனுப்ப இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டார். மேலும், மனுதாரரின் முறைப்பாடு தொடர்பாக மத்திய, மாநில அரசுகள் எதிர்வரும் செப்ரெம்பர் 27 ஆம் திகதிக்குள் பதிலளிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளது.

# டி.சி.டி கலப்பு சோதனைகளுக்கான வெளிப்படை பொறிமுறை இல்லை

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு

சுகாதார அமைச்சால இறக்குமதி செய்யப்பட்ட பால் பொருட்களில் டி.சி.டி கலப்பு இல்லை என உறுதிப்படுத்தியபோதும் டிசிடி கலப்பு சோதனைகளை மேற் கொள்ள மாதிரிகளை பெறுவதில் வெளிப்படையான பொறிமுறை ஏதும் இருக்கவில்லை என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இதனால் சோதனை முடிவுகளின் சட்டவலு கேள்விக்குறியாகியுள்ளது எனவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கைத்தொழில் தொழிநுட்ப நிறுவனத்தின் சோதனை முறை, சோதனை முடிவு என்பவற்றில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்திற்கு பூரண நம்பிக்கை உள்ளது.

ஆனால் சோதனைக்கான மாதிரிகள் சேகரிக்கப்பட்ட முறையில் நம்பிக்கை இல்லை என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் அனுருத்த பாதெனிய தெரிவித்தார்.

டிசிடி பிரச்சினையை மூடி மறைக்க முயன்ற சுகாதார அமைச்சு பால்மா மாதிரிகளை எவ்வாறு சேகரித்தது என்பதும் இன்னும் நிச்சயமாக தெரியவில்லை என அவர் குறிப்பிட்டார்.துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்ட பால்மா இருப்புக்களுக்கு நடந்தது என்னவென அவர் கேள்வி எழுப்பினார். சில்லறை கடைகளில் காணப்பட்ட டி.சி.டி கலப்புள்ள பால்மாவிற்கு என்ன நடந்தது என்பதையும் அவர் கேட்டார்.

இது மக்களின் உயிருடன் தொடர்பான விடயமாகும். இதை ஒன்று அல்லது இரண்டு நபர்களின் பொறுப்பில் விட முடியாது என அவர் தெரிவித்தார்.

இந்த தொற்றுக்கு காரண மானவர்களுக்கு சீனாவில் மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இங்கு எந்தவொரு நடவடிக்கையும் இல்லை என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# அரச பாடசாலைகளுக்கு பட்டதாரி ஆசிரியர்கள்

## கல்வியமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

அரச பாடசாலைகளுக்கு பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளுக்கு பாடரீதியாக பட்டதாரி ஆசிரியர்கள் இணைத்துக்கொள்ளப்படுவதாக கல்வியமைச்சின் கல்விப் பணிப்பாளர் தாஜுடீன் தெரிவித்தார்.

தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் உயர்தரப் பிரிவுகளில் காணப்படும் பாடரீதியான ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் இவ்வருடத்தின் முற்பகுதியில் போட்டிப்பரீட்சை நடாத்தப்பட்டது.

அதில் பரீட்சார்த்திகள் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் உயர்தரப் பிரிவுகளில் காணப்படும் பாடரீதியான ஆசிரியர் வெற்றிடங்களுக்கு ஏற்ப பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான நேர்முகப்பரீட்சைகள் தற்போது கல்வியமைச்சில் நடைபெறுவதாக கல்விப் பணிப்பாளர் தாஜுடீன் குறிப்பிட்டார்.

பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வு புள்ளிகளின் அடிப்படையில் பாடரீதியான வெற்றிடங்களுக்கு ஏற்ப தெரிவு செய்யப்படுவோர் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் பட்டதாரி ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்கள் என கல்வியமைச்சின் கல்விப் பணிப்பாளர் தாஜுடீன் எமது செய்திப் பிரிவிற்கு தெரிவித்தார்.

# கம்பகா கொள்ளைச்சம்பவம் ஐவர் இனங்காணப்பட்டனர்



கம்பகாவில் 18 மில்லியன் பகல் கொள்ளையில் ஈடுபட்ட ஐந்து சந்தேகநபர்களின் முகங்கள் சிறிலங்கா மேச்சன்ட் கிறடிட் நிறுவனத்தில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பு கமராவில் தெளிவாக பதிவாகியுள்ளது என பொலிஸார் தெரி வித்தனர்.

இந்த வீடியோவின் அடிப்படையில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் புத்திக சிரிவர்த்தன கூறினார்.சந்தேகநபர்கள் பற்றிய தகவல்களை கொடுப்பவர்களுக்கு ஒரு மில்லியன் ரூபா சன்மானம் வழங்கப்படுவதுடன் அவர்களின் அடையாளம் இரகசியமாக பேணப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிறுவனத்தி னுள் வாகனமொன்றை குத்தகை முறையில் கொள்வனவு செய்ய வந்தவர்போல பாசாங்கு செய்த பிரதான சந்தேக நபர் இதற்கு முன்னரும் பல தடவைகள் இந்த நிறுவனத்திற்கு வந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவர்தான் இந்தக் கொள்ளையை திட்டமிட்டவர் என நம்பப்படுகின்றது. கொள்ளையர்கள் பற்றிய தகவல்களை 0777923922, 0774784646, 0773917092, 0112911197 என்ற தொலைபேசி இலக்கங்களிற்கு வழங்க முடியும்.

# கொலை செய்யும் இயந்திரங்களாக இராணுவத்தைக் கருதக்கூடாது

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

இராணுவத்தினரை கொலை செய்யும் இயந்திரங்களாக கருதக்கூடாது என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். இலங்கை இராணுவத்தினரை சிலர் கொலை இயந்திரங்களாக சித்தரித்து வருவதாகவும் இதில் எவ்வித உண்மையும் கிடையாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனிதாபிமான நடவடிக்கைகளின் போதும் அனர்த்த நிவாரணப் பணிகளின் போதும், மீட்புப் பணிகளின் போதும் இராணுவத்தினர் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருவதாகத்தெரிவித்துள்ளார்.

ரஸ்ய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பல பகுதிகளிலும் இராணுவத்தினரை நிலைநிறுத்துவது சாதாரண விடயமாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். யுத்தத்தின் பின்னரான காலப் பகுதியில் இராணுவத்தினர் காத்திரமான பங்களிப்பினை வழங்கி வருவதாகத் தெரிவித்துள்ளார். கிரமமான முறையில் வடக்கில் இராணுவத்தினர் அகற்றிக் கொள்ளப்படுவர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்தினர் வடக்கு மக்களுக்கு உதவிகளை வழங்கி வருதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் துணை நிறுவனங்கள் தமது அறிக்கைகளில் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். 25 ஆண்டுகளின் பின்னர் வடக்கில் தமது பிரதிநிதிகளை நியமித்துக் கொள்ள மக்களுக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

6. 500 g இனிப்பு ரூபா 26 எனின், 1 Kg 250 g இனிப்பின் விலை யாது?

7. குறிப்பிட்ட பயணம் ஒன்று செல்வதற்காக முற்பகல் 7.30 இற்கு வீட்டிலிருந்து புறப்பட்ட அப்பா, பி.ப 2.45 இற்கு வீடு வந்து சேர்ந்தார்.

1. அப்பா பயணத்திற்காகச் செலவு செய்த காலம் எவ்வளவு? ..............................

2. அப்பா வீடு வந்த நேரத்தை டிஜிற்றல் கடிகார நேரமாகத் தருக? ......................

8. பாடசாலைக்கு கொண்டுவரப்பட்ட அப்பியாசக் கொப்பிகள் 329 ஆகும். இவை ஒரு பிள்ளைக்கு 3 வீதம் பங்கிடப்பட்டன.

1. கொப்பிகளை ஒரு பிள்ளைக்கு 3 வீதம் பங்கிடப்பட்ட பின் எஞ்சிய கொப்பிகள் எத்தனை? ........................

9. வயர்துண்டு ஒன்றின் நீளம் 8m 50cm ஆகும். அதில் 2m 75cm துண்டு வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சிய வயர்த்துண்டின் நீளம் யாது?

..................................................

10. ஒரு பழ வியாபாரி தான் வாங்கிய மாம்பழங்களில் மாம்பழம் ஒன்றை 3 ரூபா இலாபம் வைத்து 10 ரூபாவிற்கு விற்றான் எனின் அவன் வாங்கிய மாம்பழங்கள் 125 எனின் அவனுக்கு செலவான பணத்தொகை யாது?

..........................................

11. சிவா புள்ளி A யில் இருந்து பயணத்தை தொடங்கி வடக்கு நோக்கி 50m தூரமும் பின் கிழக்கு நோக்கி 40m தூரமும் சென்று மீண்டும் தெற்கு நோக்கி 50m தூரம் பயணித்து B புள்ளியை அடைந்தான். எனின் A புள்ளிக்கும் B புள்ளிக்குமிடையிலான தூரம் எவ்வளவு?

..........................................

12. 

| | |
|---|---|
| 8 | 6 |
| 7 | 1 |

இவ்இலக்கங்களை கொண்டு ஆக்கக்கூடிய மிகப்பெரிய நான்கிலக்க எண்ணுக்கும் மிகச்சிரிய நான்கிலக்க எண்ணுக்குமிடையிலான வித்தியாசம் எவ்வளவு? ..........................

13. 320, 150 , 100.5 , 10.6 , 5.0 இவ் எண்களை ஏறுவரிசைப்படுத்தி எழுதுக. ..........................................

14. 24 எனும் எண்ணை உரோம எண்குறிகளில் எழுதிக்காட்டுக. ..........................

(13) காட்டில் உள்ள தாவரங்கள் நாமாவோம். நன்மை செய்யவே பிறந்துள்ளோம். என்ற தலைப்பில் ஐந்து வாக்கியங்களை எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களை கொண்டிருக்க வேண்டும். இலக்கணரீதியான தொடர்பு சரியாக இருக்க வேண்டும்.

01. ..............................................................................................

02. ..............................................................................................

03. ..............................................................................................

04. ..............................................................................................

05. ..............................................................................................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - II
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



(01) பின்வரும் பாடலை தெளிவாக வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

(1) எண்ணியே முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்.

(2) பன்னிய பாவம் எல்லாம்
பரிதி முன் பனி போல
நன்னியே நின் முன் இங்கு
நசித்திடல் வேண்டும் அண்ணாய்

1. முதலாம் பாடலில் இடம் பெற்றுள்ள பெயரடைமொழியைக் குறிப்பிடுக? ..........................

2. பாவம் எனும் சொல்லின் எதிர்கருத்துச் சொல்லை தருக? ..........................

3. நல்லறிவு எனும் சொல்லை பிரித்தெழுதுக? ..........................

4. 'செய்த பாவங்களை எவ்வாறு நீக்கிக் கொள்ள வேண்டும்'? என புலவர் கூறுகிறார்? ..............

5. எங்களுடைய சிந்தனை யாவும் எவ்வாறு இருக்கவேண்டும்? ..........................

6. திண்ணியநெஞ்சம் என்பதனால் விளங்கிக் கொள்வது யாது? ..........................

7. பரிதி என்றால் என்ன? ..........................

(02) பின்வரும் பழமொழிகளின் பொருளை குறிப்பிடுக.

1. இரக்கப்போனாலும் சிறக்கப்போ ..........................

2. ஆனைக்கும் அடிசறுக்கும் ..........................

(03) பின்வரும் தொடர்களுக்கு பொருத்தமான தனிச்சொல்லை தருக.

1. அரச தொழில் துறையிலிருந்து இளைப்பாறிய பின் அரசால் வழங்கப்படும் ஊதியம். ..............

2. பகையரசருக்கு கொடுக்கப்படும் திறைப்பொருள் ..........................

(04) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக்குக.

1. எப்போதும் / உரைக்க / உண்மை / வேண்டும் / நாம்.

..........................................

2. அமைதியாக / ஓடிக் / கங்கை / கொண்டிருந்தது / வளவே

..........................................

(05) பின்வரும் வாக்கியத்தை வினாவாக்கியமாக மாற்றி எழுதுக.

1. மகாத்மா காந்தியின் சரிதம் சத்தியசோதனையாகும் ..........................

**(6) கருத்தினை தமிழில் தருக.**

1. come forward ........................................ 2. don't shout please ........................................

**(7) கருத்தினை ஆங்கிலத்தில் தருக.**

1. நல்வாழ்த்துக்கள் ........................................ 2. இது என்ன? ........................................

**(8) சிங்களத் தொடருக்கான கருத்தினை தமிழில் தருக.**

1. அய்யா கடேட்ட கியா ........................................ 2. ஜயக(G)ன்ன ........................................

**(9) சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. சூப் தயாரிக்க பயன்படுத்தக்கூடிய மரக்கறியானது?
   1. கரட் - ஈரப்பலா 2. போஞ்சி - வெண்டி
   3. முருங்கை - மரவள்ளி 4. கரட் - பீற்றூட்

2. இலங்கைக்கு கிழக்குதிசையில் காணப்படும் நாடு.
   1. தாய்லாந்து 2. இந்தியா 3. இத்தாலி 4. ஆபிரிக்கா

3. 
   இக்காலுக்குரிய பறவை
   1. மீன்கொத்தி 2. மரங்கொத்தி
   3. நாரை 4. காகம்

4. விற்றமின் D குறைபாட்டு நோய்
   1. மாலைக்கண் 2. என்புருக்கி 3. மரஸ்மஸ் 4. பெரிபெரி

5. தென்மாகாணத்தின் பிரதான நகரம்.
   1. களுத்துறை 2. அம்பாந்தோட்டை 3. காலி 4. மாக்கறை

6. விற்றமின் A நிறைந்துள்ள உணவுவகை
   1. பூசணி - கத்தரிக்காய் 2. மீன் - முட்டை
   3. மஞ்சள்பூசணி - பப்பாசி 4. வாழைக்காய் - கரட்

7. சாய்தளத்தினூடாக பொருள் ஒன்றை இலகுவாக காவிச்செல்லும் முறை.




8. கலாவாவியை கட்டுவித்த அரசன் யார்?
   1. பண்டுகாபயன் 2. வசபன் 3. தாதுசேனன் 4. வலகம்பா

9. இலங்கைக்கு உரித்தான தாவரமானது
   1. குங்குலிய மரம் 2. அரச மரம் 3. ஆலமரம் 4. மூங்கில்

10. புதன் கோளுக்கு அண்மையில் உள்ள கோள் எது?
   1. வியாழன் 2. புவி 3. சனி 4. வெள்ளி



11. சந்திரனின் நிழல் பூமியில் விழும் போது தோன்றுவது
   1) சூரியக்கிரகணம் 2) பௌர்ணமி 3) அமாவாசை 4) சந்திரகிரகணம்

12. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த ஆண்டு.
   1. 1796 2. 1815 3. 1505 4. 1658


13. பின்வரும் இடங்களில் தொல்பொருள் பிரசித்தி பெற்ற இடம்,
   1. எம்பிலிப்பிடிய 2. சீகிரியா 3. பானகம 4. கொத்மல

14. பின்வருவனவற்றுள் கஞ்சக்கருவி எது?
   1. தம்பட்டம் 2. கைத்தாளம் 3. வயலின் 4. வீணை

15. வேகமாக ஓடக்கூடிய மானினம்.
   1. கஸ்தூரிமான் 2. புள்ளிமான் 3. சருகுமான் 4. இம்பாலாமான்


(15 புள்ளிகள்)

**(10) பின்வரும் குறியீடுகளுக்கான கருத்தினை புள்ளிக்கோட்டில் எழுதுக.**




.................... .................... .................... ....................

**(11) பின்வரும் எழுத்துக்கள் குறிப்பிடும் நதிகளின் பெயர்களை குறிப்பிடுக.**




A ........................................ N ........................................

F ........................................ G ........................................

K ........................................ H ........................................

(12) கணிதவினாக்களுக்கு விடை தருக.

I. A, B, C, D, E ஆகிய ஐந்து கழகங்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட போட்டி ஒன்றில் பங்குபற்றியோரின் எண்ணிக்கைகளைக் கீழே உள்ள அட்டவணை காட்டுகிறது.

| கழகங்கள் | பங்குபற்றியோர் | |
|---|---|---|
| | ஆண் | பெண் |
| A | 300 | 400 |
| B | 225 | 150 |
| C | 150 | 300 |
| D | 225 | 275 |
| E | 100 | 260 |

i. கழகம் C யிலிருந்து போட்டியில் கலந்து கொண்டோரின் மொத்த எண்ணிக்கை யாது? ....................

ii. கழகம் A இலிருந்து கலந்து கொண்ட ஆண்களின் எண்ணிக்கைக்கும், பெண்களின் எண்ணிக்கைக்குமிடையிலான வித்தியாசம் யாது? ....................

iii. கழகம் D யிலிருந்து கலந்து கொண்டோருக்காக 10 பஸ்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. ஒவ்வொரு பஸ்ஸிலும் சம எண்ணிக்கையானோர் பயணம் செய்தனர் எனின், ஒரு பஸ்ஸில் பயணம் செய்தோரின் எண்ணிக்கை யாது? ....................

iv. கழகம் E யிலிருந்து பங்குபற்றிய ஆண்களுக்கு மாலை நேரத் தேநீர் ஒன்றின் போது 8 பிஸ்கட்டுக்கள் வீதம் கொடுக்கப்பட்டது. கொடுக்கப்பட்ட பிஸ்கட்டுக்களின் எண்ணிக்கை யாது? ....................

v. ஐந்து கழகங்களிலிருந்தும் கலந்து கொண்ட ஆண்களின் மொத்த எண்ணிக்கை யாது?

# அழிவடைந்து செல்கிறது வெடிவைத்த கல் கிராமம்

## கவனிப்பார் எவருமேயில்லையா?



(வவுனியா)

வவுனியா, நெடுங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வெடிவைத்த கல் கிராமம் அழிவடைந்து செல்லும் நிலையில் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் குடியேறாமை மற்றும் அக்கிராமத்தில் ஆரம்பத்தில் வாழ்ந்த மக்கள் மீள அங்கு செல்ல விரும்பமின்மை ஆகிய காரணங்களால் இக்கிராமம் அழிவடைந்து செல்லும் நிலையை எட்டியுள்ளது.

1985 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கு முன்னர் சுமார் 45 குடும்பங்கள் வாழ்ந்த இக்கிராமம் செல்வச்செழிப்புடன் காணப்பட்ட நிலையில் அதன் பின்னர் ஏற்பட்ட யுத்தம் காரணமான இடப்பெயர்வுகளினால் மக்கள் சிறுகச் சிறுக வெளியேறி நகர்ப்புறங்களை நோக்கிச் சென்றுவிட்டதாக அயல் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

பராக்கிரமபுர கிராமத்தில் இருந்து 14 கிலோ மீற்றர் தூரத்திலும் ஓமந்தை கிராமத்தில இருந்து 24 கிலோ மீற்றர் தூரத்திலும் உள்ள இக் கிராமத்தில் தற்போது அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படாத நிலையினால் அக்கிராமத்தை சேர்ந்த மக்கள் மீளக்குடியேற விருப்பம் அற்ற நிலையில் காணப்படுகின்றனர்.

அங்கு இந்திய அரசின் நிதியுதவியுடன் கட்டப்பட்டுள்ள பாடசாலை கவனிப்பாரற்றுக் காணப்படுவதுடன் வீடுகளும் சிதைவடைந்தும் காணப்படுகின்றன.


அக்கிராமத்தை சூழவும் காடுகள் வளர்ந்து காணப்படுவதனால் யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகவும் மின்சார வசதிகள் மற்றும் வீதி செப்பனிடப்படாமை போன்ற காரணங்களால் அக் கிராமத்தில் மக்கள் மீள்குடியேற விருப்பமின்றி உள்ளதாகவும் சிலர் தமது வயல் நிலங்களில் நெற்செய்கைக் காலங்களில் மாத்திரம் விவசாயம் செய்துவிட்டு செல்வதாகவும் அயல் கிராம வாசிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு வெடிவைத்தகல் கிராமத்திற்கு மக்கள் குடியேறாமையினால் அருகில் அமைந்துள்ள கோவில்புளியங்குளம் கிராமத்திற்கும் பாதிப்புகள் ஏற்படுவதாக தெரிவிக்கும் அக் கிராமத்தவர்கள் தங்களது கிராமத்திலும் அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்படாத காரணத்தினால் 35 குடும்பங்கள் வசித்து வந்த நிலையில் தற்போது 9 குடும்பங்கள் மாத்திரமே வசிக்கும் நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான நிலை தொடர்ந்தும ஏற்படுமாயின் கோவில்புளியங்குளம் கிராமமும் அழிவடைந்து செல்லும் எனவும் அவர்கள் எதிர்வு கூறுகின்றனர்.

எனவே அதிகாரிகள் இது தொடர்பில் கவனமெடுத்து வெடிவைத்தகல் கிராமத்தை அழிவில் இருந்து மீட்கவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கிராண்ட்பாஸ் தாக்குதல் சந்தேகநபர்களை கைது செய்ய விசாரணைகள் ஆரம்பம்



(கொழும்பு)

கொழும்பு, கிராண்ட்பாஸ், சுவர்ண சைத்திய வீதியிலுள்ள பள்ளிவாசலை சேதப்படுத்திய சந்தேகநபர்களை கண்டுபிடிப்பதற்கான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் கிராண்ட்பாஸ் பொலிஸார் தெரிவித்தனர்.

பள்ளிவாசலுக்கும் சூழவுள்ள சொத்துக்களுக்கும் ஏற்பட்ட சேதங்கள் பற்றி 45 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகளை தாம் பெற்றுள்ளதாக நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தரமிட்டிபொல கூறியுள்ளார்.

மேற்படி பிரதேசத்தில் கலகம ஏற்பட்டவுடனேயே அப்பகுதியைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்ட போதிலும் தாக்குதல்களை நடத்தியவர்களை பொலிஸாரால் இனங்காண முடியவில்லை என்றும் அவர் அவ்வறிகையில் குறிப்பிட்டுள்ளார்.












# மன்னார் மருதமடு பக்தர்களுக்காக செஞ்சிலுவையினர் அளப்பரிய சேவை



இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் கடந்த 11ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரையில் மடு பகுதியில் குறிப்பாக குஞ்சுக்குளம், பெரியமுறிப்பு ஆகிய பகுதிகளில் முதலுதவியில் பயிற்றுவிக்கப்பட்ட சங்கத்தின் தொண்டர்களைக் கொண்டு முதலுதவிச் சேவையானது நாட்டின் புலபாகங்களிலும் இருந்து வருகை தந்திருந்த மருதமடுமாதாவின் பக்தர்களுக்கு முன்னெடுக்கப்பட்டது.

இந்த பணிகளை மேற்பார்வை செய்யவும் தொண்டர்களுக்கு உதவி ஒத்தாசை வழங்குவதற்காகவும் சங்கத்தின் உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் சங்கத்தின் பயிற்றுவிப்பாளரும் ஒருங்கமைப்பாளருமான பாலசிங்கம் மிதுனன் தினமும் சேவை மையப் பகுதிக்கு விஜயத்தினை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இந்த மனிதாபிமான சேவையினால் 580 போர் முதலுதவியினைப் பெற்று பயனடைந்திருந்தனர். இதன் நிமிர்த்தம் எமது பயிற்றுவிக்கப்பட்ட முதலுதவித் தொண்டர்கள் ஒன்பது பேர் இரவு பகலாக தமது அரப்பணிப்பு மிகுந்த சேவையினை வழங்கியிருந்தனர்.

மேலும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமைச் செயலகத்தில் பணியாற்றும் உதவி திட்ட அலுவலகர் செல்வி றோகினி தேவர் மற்றும் இந்த சேவையினை பெற்றுத் தருவதற்கான நிதியனுசரணை நல்கிய கனேடிய செஞ்சிலுவைச் சங்கத்தின் சுகாதார திட்டங்களின் தலைமையதிகாரி டாக்டர் எஸ். என் ஜயசுந்தர ஆகியோர் மடுவிற்கு வருகை தந்திருந்தனர்.

இதன் போது சங்கத்தின் தலைவர், செயலாளர் மற்றும் அலுவலர்களை சந்தித்து எதிர்வரும் காலப்பகுதியில் மன்னார் மாவட்டத்தின் முதலுதவி பயிற்சிகள் மற்றும் சேவைகளின் முன்னெடுப்பு பற்றிய விடயங்களும் ஆராயப்பட்மை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# கள் விற்பனை நிலையங்களை வேறு இடத்திற்கு மாற்றக் கோரிக்கை

(கிளிநொச்சி)




கைதடியில் பொதுமக்களின் குடியிருப்புக்களுக்கு அண்மையில் அமைந்துள்ள கள் விற்பனை நிலையங்களை அகற்றி சனப்புழக்கமற்ற இடங்களுக்கு கொண்டு செல்லு மாறு சாவகச்சேரி பிரதேச செயலரிடம் பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ள னர்.

கைதடி வடக்கு , கைதடி மேற்கு , ஆகிய பிரதேசங்களின் கள் விற்பனை நிலையங்களையே இவ்வாறு அகற்றுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கள் அருந்துபவர்கள் சிலரால் குடியிருப்பாளர்களின் அமைதி நிலைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நிலையால் தான் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர். (90)


## வாழ்க வளமுடன்


சிறாரின் பெயர் :- ..............................
முகவரி :- ..............................
பிறந்த ஆண்டு :- ..............................
கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................
பெற்றோர் கையொப்பம்

# நீர் மூழ்கிக் கப்பல் விபத்து

# நாசவேலையாக இருக்கலாம்

## சந்தேகம் கொள்ளும் அந்தோனி



சிந்துரக்ஷக் நீர்மூழ்கிக் கப்பல் மூழ்கிய சம்பவத்தில் நாசவேலை நிகழ்ந்திருக்கலாம் என்ற கோணத்தையும் மறுப்பதற்கில்லை அனைத்து கோணங்களிலும் விசாரணை நடாத்தப்படும் என பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி தெரிவித்தார்.

நீர்மூழ்கிக் கப்பலில் ஏற்பட்ட விபத்து குறித்து விசாரணைக்கு கடற்படை உத்தரவிட்டுள்ளது. இந்தச் சம்பவத்துக்கு இதுதான் காரணம் என எதையும் உறுதியாகச் சொல்ல முடியாது. இதன பின்னணியில் நாசவேலை இருக்கலாம் என்ற கோணத்தையும் மறுக்க முடியாது.

நீர்மூழ்கிக் கப்பலை மீட்கும் முயற்சியில் ஐந்து சர்வதேச, இந்திய நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. கப்பல் மீட்கப்பட்டு வெளியே கொண்டு வரப்பட்ட பின்னர், இது தொடர்பாக ரஷிய நிபுணர் குழுவினர் விசாரணையில் ஈடுபடுவர். கப்பலில் இப்போது உள்ள ஆயுதங்களின் நிலை குறித்து அறிவதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. மீட்பு நடவடிக்கையின்போது அந்த ஆயுதங்கள் வெடிக்கும் அபாயம் இருப்பதால், அந்த ஆயுதங்களின் நிலை என்ன என்பது தொடர்பாக அறியும் முயற்சியில் அக்குழு ஈடுபடும்.

நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து சேகரிக்கப்பட்ட தண்ணீர் மாதிரி புனேயில் உள்ள ஆய்வகத்தில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அந்தத் தண்ணீரில் டிஎன்டி வெடிபொருள் சேர்மானம் இருப்பதற்கான அறிகுறி எதுவும் ஆய்வில் தெரியவரவில்லை. ரஷியாவில் இந்த நீர்மூழ்கிக் கப்பல் இரு ஆண்டுகளாக மிகுந்த பொருள் செலவில் மறுவடிவமைக்கப்பட்டது. இப்போதைக்கு இந்தக் கப்பலை மீட்கவும், அது மூழ்கியதற்கான உண்மையான காரணம் என்ன என்பது குறித்து அறியவும் அனைத்து நடவடிக்கைகளிலும் கடற்படை ஈடுபட்டுள்ளது என்றார்.

## சிம்பாப்வேயின் அதிபராக 7ஆவது தடவையாக முகாபே



(ஹராரே)

ஆபிரிக்க நாடான சிம்பாப்வேயில் கடந்த ஜூலை மாதம் 31ஆம் திகதி அதிபர் தேர்தல் நடந்தது. இந்தத் தேர்தலில் 89 வயதான அதிபர் ரொபட் முகாபேவை எதிர்த்து பிரதமரும் எதிர்க்கட்சித்தலைவருமான வேங்கிராய் போட்டியிட்டார். இந்த தேர்தலில் 61 சதவிகித வாக்குகளை அதிபர் முகாபேயும், 34 சதவிகித வாக்குகளை வேங்கிராயும் பெற்றனர்.

ஆனால் இந்தத் தேர்தலில் முறைகேடு நடந்துள்ளதாக வேங்கிராய் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை அரசியலமைப்பு நீதிமன்றம் பின்னர் தள்ளுபடி செய்தது. இதனையடுத்து நேற்று முன்தினம் ரொபட் முகாபே 7ஆவது முறையாக அதிபராக பதவியேற்றுக்கொண்டார்.

அடுத்த 5 ஆண்டுகளுக்கு சிம்பாப்வேயின் அதிபராக இருக்கப்போகும் முகாபே இந்தத் தேர்தலை ஏற்றுக்கொள்ளாத மேற்கத்திய நாடுகளான பிரிட்டன் மற்றும் அமெரிக்காவை தாக்கிப் பேசினார். எதிர்க் கட்சித்தலைவர் வேங்கிராய், முகாபேயின் பதவியேற்பு விழாவில் கலந்துகொள்ளவில்லை.

உலகச் செய்திகள்

## மூன்று கன்றுகளை ஈன்றது சிந்துபசு



(சங்ககிரி)


சேலம் மாவட்டம், சங்ககிரி அருகே உள்ள கிராமம் ஒன்றில், பசு ஒன்று ஒரே சமயத்தில் 3 கன்றுகளை ஈன்றுள்ளது.

சேலம் மாவட்டம் சங்ககிரி அருகே தேவண்ண கவுண்டனூர் கிராமம் கூலச்சிகாடு பகுதியைச் சேர்ந்த ஈஸ்வரமூர்த்தி (வயது 55) விவசாயி.

இவர் கடந்த 40 ஆண்டுகளாக பசு மாடுகளை வளர்த்து வருகிறார். இவர் வளர்த்து வரும் சிந்து மாடு ஒன்று நேற்றுக்காலை 6 மணிக்கு கன்று ஒன்றை ஈன்றது. பின்பு சிறிது நேரத்தில் வலியால் துடித்த பசு அடுத்தடுத்து இரண்டு கன்றுகளை ஈன்றது.

இந்த அதிசய பசு கன்றுகளை அக்கம் பக்கத்தில் உள்ள பொது மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்து செல்கின்றனர்.

## அணு உலை குறித்த சந்தேகம்; செய்தியாளர்கள் ரஷ்யா பயணம்




(நெல்லை)

கூடங்குளம் அணு உலை பற்றி அறிந்து கொள்ளவும், சந்தேகங்களுக்கு விளக்கம் பெற்று வரவும் இந்தியாவில் பல்வேறு செய்தி நிறுவனங்களில் இருந்து 20 செய்தியாளர்கள் ரஷ்யாவிற்கு பயணம் மேற்கொண்டுள்ளனர்.

நெல்லை மாவட்டம் கூடங்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள அணு மின்நிலையம் இன்னும் ஒரு சில மாதங்களில் மின் உற்பத்தியை தொடங்கவுள்ளது. அணு மின் நிலையத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடலோர பகுதி கிராம மக்கள் மேற்கொண்டுள்ள போராட்டம் 700 நாட்களைத் தாண்டி நடந்து கொண்டிருக்கிறது. முற்றுகைப் போராட்டம் முதல் பல்வேறு போராட்டங்களைத் தாண்டி இன்னும் ஓரிரு மாதங்களில் அணு உலை மின்சார உற்பத்தியை தொடங்கவுள்ளது. இந்நிலையில் அணு உலை சார்பிலும், அணு உலையை அமைக்கும் ரஷ்ய நிறுவனத்தின் சார்பிலும் தமிழகத்திலிருந்தும் மற்றும் டில்லி, பீகார் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்தும் 20 செய்தியாளர்கள் ரஷ்யாவுக்கு சென்றுள்ளனர். 10 நாள் பயணமாக சென்றுள்ள இவர்கள் இங்கு அமைக்கப்பட்ட அணு உலை குறித்த ஏற்படும் சந்தேகங்களை அங்கு நேரில் சென்று விளக்கம் பெற்று திரும்பவுள்ளனர்.

## சூடானில் வெள்ளப் பெருக்கு 3 இலட்சம் மக்கள் பாதிப்பு



(கர்த்தூம்)

சூடான் நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கில் 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

சூடான் நாட்டில் இந்த மாதம் தொடர்ந்து வரும் கனமழையினாலும், அதனால் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கினாலும் இதுவரை 65,957 குடும்பங்கள் அல்லது 3,20,000 மக்கள் பாதிக்கப்பட்டிருக்கக்கூடும் என்று உலக சுகாதார அமைப்பு (டபிள்யு எச்ஓ) கவலை தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கை வெளியிடப்பட்ட நேற்று முன்தினம் இரவும் இடி மழை மின்னலுடன் வீசிய பெரும் காற்று கர்த்தூம் பகுதியை நாசப்படுத்தியது. கடந்த 25 வருடங்களில் சூடானின் பெரும் பேரழிவு இது என்று டபிள்யுஎச்ஓ கருதுகின்றது

கடந்த புதன்கிழமை அன்று இந்த மழைக்கு 48 பேர் பலியானதாகவும், 70இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும், நாட்டில் உள்ள 18 மாநிலங்கங்களில் 14 மாநிலங்களில் மக்களின் உடைமைகள் சேதமடைந்துள்ளதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இதில் அங்கு அமைக்கப்பட்டிருந்த 53,000 கழிவறைகள் சேதமடைந்துள்ளதை முக்கிய சுகாதாரக்கேடாக டபிள்யுஎச்ஓ குறிப்பிட்டுள்ளது. சூடான் நாட்டில் சேவை செய்வதற்கு ஏற்கனவே குறைந்த அளவே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள போதிலும், துன்பப்படும் களுக்கு உதவ விரும்புவதாக அந்த அமைப்பு கூறியுள்ளது.

## பழிதீர்க்கும் இஸ்ரேல்; லெபனான் மீது தாக்குதல்



(ஜெருசலேம்)

இஸ்ரேல் மீது லெபனான் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் ரொக்கெட் வீசி தாக்குதல் நடாத்தினார்கள். அதில் கட்டடங்கள் இடிந்து சேதமடைந்தன. ஆனால், உயிர்சேதம் எதுவும் இல்லை.

அதற்கு பழிக்கு பழிவாங்க லெபனான் மீது இஸ்ரேல் இராணுவம் மூன்று ரொக்கெட் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியது. பெய்ரூட் சிடான் நகருக்கும் இடையே நாமெக் என்ற இடத்தில் தீவிரவாதிகள் பகுதி உள்ளது.

அதன் மீது இத்தாக்குதல் நடாத்தப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. வேறு விபரங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

# யாழ். கிராமிய அமைப்பு உறுப்பினர்களுடன் ஞானசக்தி சிறிதரன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள பல்வேறு கிராமிய அமைப்புக்களின் அங்கத்தவர்களுடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் யாழ். மாவட்ட வேட்பாளர் ஞானசக்தி சிறிதரன் சந்திப்புக்களை நடத்தியுள்ளார்.

இச் சந்திப்புக்களின் போது யுத்தத்தால் ஏற்பட்ட பாதிப்புக்களில் இருந்து மீண்டு எழுதல் மற்றும் சமூக பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்வாதாரத்தை விருத்தி செய்தல் உட்பட பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டது.

நேற்று முன்தினம் இணுவில் மாதர்சங்கத்தைச் சேர்ந்த பெண்கள் சிலருடன் ஞானசக்தி ஸ்ரீதரன் சந்திப்பொன்றை நிகழ்த்தினார்.

அவர்கள் பல்வேறு போராட்ட அனுபவங்களையும் துன்பங்களையும் அடைந்தவர்கள். தாம் எப்போதும் முற்போக்கு சக்திகளையே ஆதரித்து வந்ததாகவும் ஆனால் தங்களுக்கு பெரிதாக உதவிகள் எதுவும் கிட்டவில்லை என்றும் தெரிவித்தனர் அரசியல் வாதிகள் எப்போதும் தேர்தல் காலத்திலேயே தங்களை அணுகுவதாகவும் மற்றும்படி காணக்கிடைப்பதில்லை என்றும் தெரிவித்தனர்.

தமக்கு என பொதுவான ஒரு கட்டடம் இல்லை என்றும், பெருமளவிற்கு வறிய விவசாயிகளாக இருப்பதால் தங்களுக்கு வாழ்வாதார, தொழில் செய்வதற்கு உதவி தேவை என்றும் தொடர்ந்து தங்களுடன் உறவைப் பேணவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்

அவர்களின் பிரதிநிதியாக தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாகவும் ஞானசக்தி தெரிவித்தார்.

ஞானசத்தி வடமாகாண சபைத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் பத்மநாபா ஈ.பி.ஆர்.எல். எப் சார்பில் ஈபிடிபியுடன் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடும் வேட்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

நுணாவில் மாதர்சங்கத்துடன் கடந்த செவ்வாய்க்கிழமை நிகழ்ந்த ஒரு கலந்துரையாடலில் தங்களுக்கு யாரிடமிருந்தும் உதவிகள் இல்லை. வாழ்வாதார தொழிலுக்கு உதவுமாறும் கூறப்பட்டது. இவர்களின் தேவைகள் தொடர்பாக பிரத்தியேக கவனம் செலுத்தப்படும் என்று இதன்போது தெரிவிக்கப்பட்டது.

மேலும் கல்வயலில் ஒரு மாதர் சங்கத்தினருடனான கலந்துரையாடலில் கூட்டமைப்பைச் சார்ந்தவர்கள் தேர்தல்களில் மாத்திரம் முகம் காட்டுகிறார்கள் என்றும் அதன் பின்னர் அவர்களை கண்டுகொள்ள முடிவதில்லை என்றும் தெரிவித்தனர்.

நிறைமாத கர்ப்பிணிகள், குழந்தைகளை பரிசோதிப்பதற்கு, பெண்கள் கூடுவதற்குக் கூட பொதுவான கட்டடம் ஒன்றில்லை. ஆனால் வாக்குறுதி அளித்தவர்கள் எவரையும் மீண்டும் பார்க்க முடியவில்லை என்று தெரிவித்தனர்.

இதைவிட கடந்த திங்கள் அன்று மாலை கலட்டியில் பொதுமக்கள் பிரதிநிதிகளைச் சந்தித்தார். 22 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் தமது இடங்களில் இந்த மக்கள் குடியேற்றப்பட்டிருக்கிறார்கள்.

முதலில் அரைவீட்டுத் திட்டம் வழங்கப்பட்டது. இப்போது இந்திய வீடமைப்புத் திட்டமும் செயற்படுத்தப்படுகிறது.

அரை வீட்டுத்திட்டத்தை முடிப்பதற்கு பணம் போதுமாக இல்லை. மலசலகூடம் கட்டுவதற்கு மாத்திரம் 90 ஆயிரம் ரூபா தேவைப்படுகிறது. என்றும் பொதுமக்களை் தெரிவித்தனர்.

இதனைவிட தங்களுக்கு வீட்டுத்திட்டம் உட்பட மின்சாரம் குடிநீர், பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கான பஸ் போக்குவரத்து வீதி புனரமைப்பு என்பன ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்டது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவற்றை முன்னின்று செயற்படுத்தினார்.

குடிநீர் பிரச்சனை இருக்கிறது. மின்சாரமும் இன்னும் சில இடங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் யாரும் அனுபவிக்காத துன்பங்களை நாம் அனுபவித்திருக்கிறோம் என்றும் அவரகள் தெரிவித்தனர்.

இவர்களுடன் ஞானசக்தி கலந்துரையாடும் போது பொருளாதாரம் தொழிலின்மை, சுகாதாரம், கல்வி போன்ற விடயங்களில் சவால்களை எதிர்கொண்டு துன்பங்கள் இழப்புக்களுக்கு நிகரான தீர்வு காண்பதாக இருந்தால் உங்களுக்காக ஆக்கபூர்வமாக செயற்படகூடியவர்களுக்கு அதிகாரத்தை வழங்க வேண்டும் இணக்க முறைகளின் ஊடாகவே நாம் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண முடியும் என்றும் அவர்களுக்கு விளக்கமளித்தார்.

## பொதுமக்களின்...

மற்றும் காணிகளை உரியவர்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தென்னிலங்கை போன்று வடபகுதியிலும் உயர்பாதுகாப்பு வலயங்கள் இருக்க முடியாது என்பதுடன், தென்னிலங்கை போன்று பாதுகாப்பு காரணங்களுக்காக வடஇலங்கையிலும் இருப்பது தவிர்க்க முடியாது. பொதுமக்களின் வீடுகள் மற்றும் காணிகள் அவர்களுக்கே உரியது. அந்த வகையில், படையினர் வசமுள்ள பொதுமக்களின் வீடுகள், காணிகள் மீளவும் பொதுமக்களிடம் படிபடியாக கையளிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

இவ்வாறான செயற்திட்டங்கள் இணக்க அரசியல் ஊடாகவே சாத்தியமாகும் என்பதுடன், அபிவிருத்தி திட்டங்களையும், அபிவிருத்திகளையும் முன்னெடுக்க முடியும். யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பணிப்புரைக்கு அமைவாக 2010 ஆம் ஆண்டிலிருந்து பொதுமக்களின் வீடுகள் மற்றும் காணிகள் மக்களிடம் கையளிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் சர்வதேச நாடுகளோ, ஐ.நா பிரதிநிதிகளோ எமது பிரச்சினைக்கு ஒருபோதும் உரிய தீர்வினை பெற்றுத்தர முடியாது என்பதுடன், ஐ.நா. பிரதிநிதியான நவநீதம்பிள்ளை இங்கு வந்து நிலைமைகளை பார்வையிடலாம். அந்தவகையில் தான் எமது பிரச்சினைகளுக்கு நாமே தீர்வுகாண வேண்டுமென்பதை வலியுறுத்தி வருகின்றோம்.

இதைவிடுத்து எதிர்ப்பு அரசியலால் அழிவைத தான் பெற்றுக்கொள்ள முடியுமே தவிர பிரச்சினைகளுக்கு தீர்வினை ஒருபோதும் காணமுடியாது

இந்நிலையில் மக்கள் சந்தர்ப்பங்களை சரிவரப் பயன்படுத்தும் பட்சத்தில் எமது பகுதிகள் மென் மேலும் அபிவிருத்தியிலும் மேம்பாட்டிலும் முன்னேற்றம் காணமுடியுமென்றும் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹந்துருசிங்க உரையாற்றும் போது, 2010 ஆம் ஆண்டுமுதல் பொதுமக்களின் வீடுகள் மற்றும் காணிகள் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டு வருகின்றன என்பதுடன் இதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கடுமையான முயற்சி முக்கியமானதென்றும் தெரிவித்தார். குடாநாட்டில் முன்னர் 26400 படையினர் கடமையில் ஈடுபட்டிருந்த நிலையில் தற்போது அத்தொகை 13100 என அரைவாசியாக குறைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இன்றுள்ள சமாதான சூழலைப் பாதுகாக்க வேண்டியது மக்களது முக்கிய கடமையெனவும் தென்பகுதி மக்களைப் போன்று வடபகுதி மக்களும் சுதந்திரமான வாழ்வை வாழ வேண்டும் எனவும் தெரிவித்த அவர், இன மத மொழி என்ற பாகுபாடு இல்லாது ஒரே கொள்கையுடன் எல்லோரும் ஒன்றுபட்டு வாழவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் உடுவில், தெல்லிப்பழை, சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்கு கீழான 39 பொதுமக்களின் வீடுகளும் மற்றும் காணிகளும் நேற்றைய தினம் கையளிக்கப்பட்டன. காணி மற்றும் வீடுகளின் உரிமைப் பத்திரங்களை யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வழங்கிவைக்க அவற்றை குறித்த பிரதேச செயலர்களிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கிவைத்தார்.

இந்நிகழ்வில் 513 ஆவது படைப்பிரிவின் கீழ் உடுவில், மானிப்பாய், சுன்னாகம், மருதனார்மடம், மல்லாகம், அளவெட்டி, சுழிபுரம் ஆகிய பகுதிகளிலுள்ள வீடுகள் மற்றும் காணிகள் கையளிக்கப்பட்டன. உடுவில் பிரதேச செயலர் நந்தகோபாலன், தெல்லிப்பழை பிரதேச செயலர் சிறிமோகனன், ஆகியோரும் உரைநிகழ்த்தினர். இதன்போது சண்டிலிப்பாய் பிரதேச செயலர் முரளிதரன், சங்கானை பிரதேச செயலர் சோதிநாதன் ஆகியோருடன் 513 ஆவது படைப்பிரிவின் தளபதி பிரிகேடியர் பிரியந்த பெரேரா உள்ளிட்ட இாாணுவ, பொலிஸ் அதிகாரிகளும், துறைசார்ந்த திணைக்களங்களைச் சார்ந்தோரும் உடனிருந்தனர்.

## அபிவிருத்தி...

எதிர்வரும் டிசம்பர் மாதத்துக்குள் இக் கூட்டத்துக்கான காணி கிடைக்கப்பெறாவிட்டால் இந்நிதி திரும்பப்பெறப்படுவது நிச்சயம் எனத் தெரிகிறது. வைத்திய அதிகாரி பணிமனைக்கான காணியைப் பெற்றுக்கொள்வதற்குப் பலர் முயற்சித்தும் அது கைகூடவில்லை. சுகாதாரப் பகுதியினர் இதனால் பெரும் கவலையடைந்துள்ளனர். (137)

## யாழில்...

சாலையில் காணப்படும் குறைபாடுகளை கேட்டறிந்துகொண்டார். மகப்பேற்று விடுதியினை அவதானித்த அவர் அடுத்த வருடம் 1200 மில்லியன் ரூபா செலவில் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார். மேலும் தாதியருக்கான வதிவிடம், தாதியர், மருத்துவ ஊழியர்களின் தட்டுப்பாடு தொடர்பாக தெரியப்படுத்தியதாக பிரதி வைத்திய பணிப்பாளர் பவானந்தராஜா கூறினார். மேலும் போதிய கட்டடவசதி பற்றாக்குறைகள் காரணமாக தொற்றுநோய்கள் அதிகரிப்பின் காரணமாகவும் சிசுமரண வீதம் அதிகரித்து செல்வதுடன் தேசிய ரீதியில் யாழ்ப்பாணத்தில் இம் மரணவீதம் அதிகரித்துச் செல்வதாக பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (15)

## சட்டம், ஒழுங்கு...

டுள்ளது. அதன் செயலாளராக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் நந்த மல்லவாராச்சி நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுக் காலை அவர் தனது நியமனக் கடிதத்தை ஜனாதிபதியிடம் இருந்து பெற்றுக்கொண்டார்.

## புதிய பட்ஜெட்...

கையில் அதிக பொருளாதார வளர்ச்சியையும் தனிநபர் வருமானம் 4000 அ.டொலராக அதிகரித்துள்ளதும் அபிவிருத்திகளை மேலும் வலுப்பெறச் செய்யவேண்டுமென கேட்டுக்கொண்டார். அபிவிருத்தி திட்டங்களின் நன்மைகள் மக்களை போய்ச் சேர வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் 2014 வரவு செலவுத் திட்டம் அதிக விரைவில் செயற்படுத்தும் திட்டங்களுக்கே முன்னுரிமை வழங்குமெனவும் அப்போதுதான் அதன் பயன்கள் மக்களை விரைவில் சென்றடையுமெனவும் கூறினார்.

## கூட்டமைப்பு...

சேர்ந்த மேற்படி பிரதேச சபை உப தலைவர்கள் இருவரும் நேற்று முன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து ஆளும் கட்சியில் இணைந்துகொண்டனர்.

வடமராட்சி தென்மேற்கு (கரவெட்டி) பிரதேசசபை உப தலைவரான சாந்தசோரூபன் மற்றும் பருத்தித்துறை பிரதேச சபை உப தலைவர் லோகசிங்கம் ஆகியோரே இவ்வாறு ஆளும் கட்சியில் இணைந்து கொண்டவர்களாவர். இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடமிருந்து ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அங் கத்துவப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்டனர்.

இதன்போது அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ, சுசில் பிரேமஜயந்த மற்றும் சிரேஷ்ட அமைச்சர் அதாவுட செனவிரட்ன, தொழில் சங்கத்தின் ஜனாதியின் இணைப்புச் செயலாளர் சுமித் விஜேசிங்க, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் நிர்வாகச் செயலாளர் ஆரியரத்ன ஆகியோர் உடனிருந்தனர்.

## சுற்றுலாத்துறைக்கு...

வியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் ஒன்பது மாகாணங்களில் சுற்றுலாப் பயணிகள் அதிகம் வந்துசெல்லும் இடமாக வடமாகாணம் திகழ்கின்றது. அதிலும் யாழ்ப்பாணமே முக்கியமாகத் திகழ்கின்றது.

இந்நிலையில் இங்கு சுற்றுலாப் பயணிகளுக்காகச் செயற்படும் ஹோட்டல்கள் அதிகமாகக் காணப்படுகின்ற போதும் அவற்றில் சில முறையான பயிற்சிகள் பெற்றுள்ள ஆளணியினரைக் கொண்டு இயங்கவில்லை.

அத்துடன் முறையான பதிவுகளும் கொண்டு இயங்கவில்லை. எனவே இவ்வாறான விடயங்களை ஒழுங்குபடுத்த அந்தக் ஹோட்டல்களின் பணியாளர்களுக்கு பயிற்சி வழங்க அது சம்பந்தமான பாடசாலை ஒன்று வடமாகாணத்தில் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் அமைக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

எனவே இது சம்பந்தமாக அண்மையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியம் திட்டம் ஒன்றைக் கையளித்ததாகவும் தெரிவித்த அவர், அமைச்சர் அது குறித்து நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

தற்சமயம் வடமாகாணத்தில் 34 ஹோட்டல்கள் வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியத்தில் பதிவுகளை மேற்கொண்டிருப்பதாகவும் தெரிவித்த அவர் யாழ். மாவட்டத்தில் மட்டும் இவ்வாறு 25 ஹோட்டல்கள் பதிவு செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தப் பத்திரிகையாளர் சந்திப்பில் வடமாகாண சுற்றுலாத் துறை ஒன்றியத்தின் தலைவரும், லிலிகோ ஹோட்டலின் பணிப்பாளருமாகிய தி.திலகராஜ், செலிங்கோ அன்ரன் ஆகியோர் பஙகேற்றனர். (பா,இ)

## விதிகளை...

சபை உறுப்பினர்களின் பங்களிப்புடன், சீ.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி, கூட்டமைப்பின் வேட்பாளர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், சட்டத்தரணி சயந்தன் ஆகியோரும், கட்சிப் பிரமுகர்களும் பங்கேற்றதுடன் வட மாகாணசபைத் தேர்தல் குறித்து இக்கலந்துரையாடலில் பரப்புரை நிகழ்த்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை தேர்தல் ஆணையாளரால் யாழ். நூல் நிலைய கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்ட தேர்தல் நடை முறை விளக்கக் கூட்டத்தில் பிரதான வீதிகளில் வேட்பாளர்களினால் மேற்கொள்ளப்படும் இலச்சினைகள் மற்றும் விருப்பு இலக்கங்களை வரைந்து மேற்கொள்ளும் பிரசார நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளை முழுமையாக நடைமுறைப் படுத்தும் வகையில், சகல ஐ.ம.சு.மு.வேட்பாளர்களும் இதனை கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டுமெனவும், அக்கட்சியின் முதன்மை வேட்பாளர் சி.தவராசா ஐ.ம.சு.முன்னணியில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களையும் கேட்டுக்கொண்டுள்ளதுடன் பிரதான வீதிகளில் இவ்வாறான பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வதை தவிர்க்க வேண்டுமென அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

# திறந்த மனதுடன் கொழும்பு செல்கிறேன்

## பக்கச்சார்புக்கு இடமில்லை



(கொழும்பு)

முன் கணிப்புக்கள் எதுவுமின்றி திறந்த மனதுடன் முதன் முறையாக இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான விசேட பிரதிநிதி நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார். இலங்கை மீது சர்வதேச ரீதியில் போர்க் குற்ற விசாரணைக்கு வலியுறுத்தப்பட்டு வரும் நிலையில் நவநீதம்பிள்ளை ரொயிட்டர் செய்தி சேவைக்கு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் முப்பது வருடகால யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் முதன்முறையாக நாளை நவநீதம்பிள்ளை உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வரவுள்ளார்.

அவர் 30ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பதோடு ஜனாதிபதி, எதிர்க்கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகளை சந்திக்கவுள்ளதோடு வட.கிழக்கு பகுதிகளுக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

இலங்கையின் மறுசீரமைப்பு நல்லிணக்க செயற்பாடுகளை நேரில் அறியவேண்டும் எனவும் இலங்கையின் முன்னேற்றம் மற்றும் பொறுப்புக் கூறல் தொடர்பிலும் அறிய வேண்டும் எனவும் ரொயிட்டர் செய்திச் சேவையுடனான மின்னஞ்சல் உரையாடலில் அவர் தெரிவித்துள்ளார். எந்த விடயத்தையும் முன் கூட்டியே கணிக்கவில்லை, விவாதிக்கப்பட வேண்டிய விடயங்கள் பல இருக்கின்றன,

சாதகமான அபிவிருத்தி குறித்து பேசப்பட வேண்டி உள்ளது. அதனால் நான் மிகவும் நிறந்த மனதுடனேயே செல்கிறேன். அதன் மூலம் எனது சொந்த ஆராய்வில் சீரான மதிப்பீடு ஒன்றை மேற்கொள்ள முடிவு செய்துள்ளேன் என்று நவநீதம் பிள்ளை தெரிவித்துள்ளார்.

## ஆஷஸ் தொடர்

### ஐந்தாவது போட்டி

மூன்றாவது நாள் ஆட்டம்

அவுஸ்ரேலியா 492/9

இங்கிலாந்து 247/4

## ஆவரங்கால் விபத்தில் வயோதிபர், யுவதி படுகாயம்

ஹயேர்ஸ் வான் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதால் மோட்டர் சைக்கிளில் பயணம் செய்த வயோதிபரும், யுவதியும் படுகாயங்களுக்கு உள்ளாகி யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மாலை 4.30 மணியளவில் ஆவரங்கால் பகுதியில் இடம்பெற்றுள்ளது. பருத்தித்துறை நோக்கி சென்ற ஹயேர்ஸ் வானுக்கு முன்னே சென்ற பாரஊர்தி சிறுவீதிக்குள் நுழையும் போது எதிரே வந்த மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்கள் ஹயேர்ஸ் வான் வருவதனை அறியாது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இச்சம்பவத்தில். முத்தையா-குணசேகரம் (வயது-59), மகாலிங்கம் உதயநிதி (வயது-20) ஆகிய இருவருமே விபத்துக்குள்ளாகி யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுடுள்ளனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (15)

## ஆக்கத்திறன் போட்டிகள்

எதிர்வரும் நவம்பர் மாதம் 10ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில் பாடசாலை மட்டத்தில் கட்டுரை, பேச்சு மற்றும் சித்திரப் போட்டிகளை நடத்த கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

பொதுநலவாய நாடுகளின் அபிவிருத்தி மற்றும் சமூக சமநிலை என்ற பொதுவான தலைப்பில் நடைபெறும் இந்த போட்டிகளில் தமிழ் ,சிங்களம் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளைச் சேர்ந்த மாணவ மாணவிகள் கலந்துக் கொள்ளலாம்.

மூன்று கட்டங்களாக இப் போட்டி நடைபெறும். வலய அடிப்படையில் போட்டிகள் செப்ரெம்பர் 15ஆம் திகதி நடைபெறும். மாகாண மட்டத்திலான போட்டிகள் செப்ரெம்பர் 15 முதல் 30ஆம் திகதி வரை நடைபெறும்

இப்போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்கள் அக்ரோபர் 10ஆம் திகதிக்கு முன்னர் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்

6ஆம், 7ஆம், 8ஆம் தர மாணவர்களின் கட்டுரை 250 சொற்களுக்குள் அமைய வேண்டும். அவ்வாறே 9ஆம், 10ஆம், 11ஆம் வகுப்பு மாணவர்களின் கட்டுரை 350 சொற்களுக்குட்பட்டதாகவும், 12ஆம் 13 ஆம் தர மாணவர்களின் கட்டுரை 500 சொற்களை உள்ளடக்கியதாகவும் அமைய வேண்டும்.

பேச்சுப் போட்டியை 12ஆம் 13ஆம் தர மாணவர்களிடையே மாத்திரம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெறுவோருக்கு பெறுமதியான சான்றிதழ்கள் வழங்கப்படுமென கல்வி அமைச்சு மேலும் தெரிவிக்கின்றது.

## சமூகசேவை அலுவலகத்திற்கு முல்லைத்தீவு நகரில் காணி

(முல்லைத்தீவு)

சமூக சேவைகள் நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்குடன் முல்லைத்தீவில் மாவட்ட சமூக சேவைகள் அலுவலகம் அமைப்பதற்கான காணி அரசாங்க அதிபர் நா.வேதநாயகனால் நகரப் பிரதேசத்தில் வழங்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தின் சமூக சேவைகள் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் பணியில் மாவட்ட சமூக சேவைகள் அலுவலகம் கூடுதல் பங்களிப்பைச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

வட மாகாண சமூக சேவைகள் திணைக்களம் இக் காணியில் மாவட்ட சமூக சேவைகள் அலுவலகக் கட்டடத்தைக் கட்டுவதற்கு நிதியைப் பெற்றக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

வவுனியாவில் வைரவப் புளியங்குளத்தில் மாவட்ட சமூக சேவைகள் அலுவலகம் கடந்த இரு ஆண்டுகளாக திறம்பட இயங்கி வருகின்றது.

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகம் 5 மில்லியன் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட உள்ளது. 3 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைகள் ஏற்கனவே நிறைவு பெற்றுள்ளது. (90)

## படை வீரர் கைது

அண்மையில் அச்சுவேலி மக்கள் வங்கிக்கு முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கரவண்டி ஒன்று காணாமல் போனது தொடர்பாக குறித்த வங்கியில் வேலை செய்யும் ஊழியர் ஒருவர் வழங்கிய முறைப்பாட்டினை அடுத்து அச்சுவேலி குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்க்கொண்டதுடன், இராணுவ வீரர் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

வங்கிக்கு முன்னாள் பொருத்தப்பட்டிருந்த சீ.சீ.ரீ.வீ. கமராவின் உதவியுடன் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் இராணுவ வீரர் துவிச்சக்கர வண்டி திருடியது தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக அவரைக் கைது செய்து விசாரித்ததில் செல்வநாயகபுரம் பகுதியில் 2 ஆயிரம் ரூபாவிற்கு விற்பனை செய்தது தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக குறித்த வீரருக்கு எதிராக வழக்கு பதிவு செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்திய வேளை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார். (15)

## சிறைச்சாலை அலுவலர்களுக்கு வெற்றிடம் தொடர்கிறது

(கொழும்பு)

சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காரணமாக வழக்கு விசாரணைகளுக்காக நீதிமன்றங்களில் சந்தேகநபர்களை ஆஜர்படுத்துவதில் தடை ஏற்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் குறிப்பிடுகின்றது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் வழக்கு விசாரணைகளை ஒத்தி வைக்க நேரிடுவதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சந்ரரத்ன பல்லேகம தெரிவித்தார்.

இதுதொடர்பில் நீதவான்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் தமக்கு முறைப்பாடு செய்துள்ளதாக அவர் கூறினார்.

சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் 785 பேருக்கு பற்றாக்குறை நிலவுவதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.

சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு பற்றாக்குறை காணப்படுவதால், கைதிகளை சிறைச்சாலைகளில் இருந்து வெளியே அழைத்துச் செல்லும் போது, பாதுகாப்பு தொடர்பில் சிக்கல் ஏற்படுவதாகவும் சந்ரரத்ன பல்லேகம மேலும் தெரிவித்துள்ளார்.

## சட்ட அறிவூட்டல் கருத்தரங்கு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், முள்ளியவளை, மல்லாவி, மாங்குளம், துணுக்காய் பகுதி கிராமசேவை அலுவலர்களுக்கு நீதிமன்ற கடமைகள் மற்றும் சட்ட அறிவு தொடர்பில் விழிப்புணர்வூட்டல் கருத்தரங்கு நடைபெற்றுள்ளது.

இக்கருத்தரங்கில் கிராம அலுவலர்கள் தமது பிரதேசங்களுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு ஏற்படுகின்ற சட்டரீதியான, குற்றவியல் சம்பந்தமாக குறிப்பாக சிறுவர் பெண்கள் தொடர்பான குற்றச்செயல்களை தடுப்பது என்பது குறித்த சட்ட உதவி ஆணைக்குழு சட்டத்தரணிகள், குடும்ப நல ஆலோசகர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி தொடர்பான உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினர்,

இக்கருத்தரங்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா தலைமையில கடந்த வாரத்தில் நடைபெற்றது (170)

## ஆஸி. அமைச்சருடன் ஹக்கீம் சந்திப்பு



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமிற்கும், அவுஸ்ரேலியா வெளிவிவகார அமைச்சர் பொப்கரிற்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தோனேஷிய தலைநகர் ஜகார்த்தாவில் நடைபெற்ற ஆசிய பசுபிக் பிராந்திய அமைச்சர் மட்ட மாநாட்டின் போதே இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இதன் இரு நாடுகளுக்கும் இடையிலான முக்கிய விடயங்கள் பற்றி பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

## துரத்துகிறது குற்றச்சாட்டுக்கள்

(கொழும்பு)

முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தனவிற்கு எதிராக மற்றுமொரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பம்பலப்பிட்டி வர்த்தகரான மொஹமட் சியாம் கொலை வழக்கின் பிரதான சந்தேகநபரான வாஸ் குணவர்தனவிற்கு எதிராகவே புதிய வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.




இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஆகஸ்ட் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.